


கல்கி

KALKI 6-9-81 ரூ. 1.20

ரஸிகமணி நூற்றாண்டு


பெண்கள் தங்கள் மனோபாவங்களை
அநேக அழகான வழிகளில்
வெளிப்படுத்துகிறார்கள்.
விமல்
அவற்றில் ஒன்று.
VIMAL
A RELIANCE PRODUCT
100% பாலியெஸ்டர் புடவைகள்
உங்கள் விமல் ரீடெய்லரிடம் கேட்டு வாங்குங்கள்: ஸில்கி ப்ரீஸ், ஸில்கி வேவ், ஸில்கி சார்ம், சூப்பர் ஸில்கி வேவ்,

ஜீன்ஸ்: சுப்ரீம் கோர்ட்டின் ஆட்சேபணை!

புதுடில்லியில் சுப்ரீம் கோர்ட்டுக்கு ஆதேஷ்லதா என்ற 20 வயதுப் பெண் ஜீன்ஸ் அணிந்து வந்தார். இவர் ஒரு வக்கீல் குமாஸ்தா. நீதிபதி சந்திரசூட் அந்தப் பெண்ணை வெளியேறச் சொன்னதுடன், ''சேலை கட்டிக் கொண்டுதான் இனி கோர்ட்டுக்கு வரவேண்டும். கடைகளில் நிறையச் சேலைகள் கிடைக்கின்றனவே'' என்று கூறி விட்டார்.

'இப்படித்தான் உடையணிந்து வரவேண்டும் என்று நிர்ப்பந்திக்க தலைமை நீதிபதிக்கு அதிகாரம் உண்டா' என்று கேட்டபோது முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி கைலாசத்தின் மகளும் வழக்கறிஞருமான திருமதி நளினி சிதம்பரம் சொன்னார்:

''டெல்லியில் உள்ள 'பார் கௌன்ஸில் ஆஃப் இந்தியா' என்ற அமைப்புதான் வக்கீல்



✖ நளினி சிதம்பரம்

களின் உடைகளை வரையறுக்கிறது. அதன்படி பெண் வக்கீல்கள் முன்பு கறுப்பு அல்லது வெள்ளைப் புடவை அணிய வேண்டும் எனச் சட்டம் இருந்தது. ஆனால் வெள்ளை, விதவைகளுக்குரியது என ஆட்சேபணை எழுந்ததால் எந்த நிறப் புடவையும் அணிந்துகொள்ள அனுமதிக்கப்பட்டது. பெண் வக்கீல்கள் வெள்ளை பாண்ட் அணிந்து வருவதையும் நான் பார்த்திருக்கிறேன். வக்கீல்களுடைய கிளார்க்குகளுக்கென உடைகள் பற்றி பிரத்தியேக சட்டம் ஒன்றுமில்லை. ஆண் வக்கீல் கிளார்க்குகள் பாண்ட், வேட்டி எது அணிந்தாலும் மேலே ஒரு கறுப்பு கோட் அணிந்து கொள்வது வழக்கத்தில் இருக்கிறது. பெண் வக்கீல் கிளார்க்குகள் மிகக் குறைவு. அவர்கள் புடவை அல்லது வேறு எந்த இந்தியப் பெண்கள் உடையும் அணிந்து வரலாம்.

''சம்பவத்தன்று சுப்ரீம் கோர்ட்டிலிருந்த ஒரு வக்கீலுடன் இது பற்றிப் பேசினேன்.



✖ ஆதேஷ் லதா

அந்தப் பெண் ஜீன்ஸாம், மெல்லிய சிவப்பு நிறத் துணியிலான இறுக்கமான சட்டையும் அணிந்து வந்திருந்தாராம். இன்று இப்படி ஒருவர் வந்தால், நாளை வேறு ஒரு பெண் மினி உடையில் வரலாமல்லவா? ஆகவேதான், சட்டம் என ஒன்று இல்லாமல் போனாலும்கூட, சுப்ரீம் கோர்ட்டினுடைய கௌரவத்தைக் காக்கும்பொருட்டு, தலைமை நீதிபதி சேலை அணிந்து வரச் சொல்லியிருக்கிறார். இதில் தவறில்லை என்றே நான் கருதுகிறேன். ஆனால் டில்லியில், ''தலைமை நீதிபதி, பகிரங்கமாக அந்தப் பெண்ணை வெளியேற்றியதற்குப்பதில் அந்த வக்கீலையோ அல்லது பெண்ணையோ சேம்பருக்கு அழைத்துப் பேசியிருக்கலாமே. இந்த விஷயத்தைப் பெரிது படுத்தாமல் விட்டிருக்கலாமே'' என்று பேசிக் கொள்கிறார்களாம்.''

பேட்டி: எஸ். சந்திரமௌலி
ஆதேஷ் லதா படம்:
ஹிந்துஸ்தான் டைம்ஸ்

கரையெல்லாம் செண்பகப்பூ

கணேஷ்: 'என்ன வசந்த்! எதையோ பறி கொடுத்த மாதிரி வரே!

வசந்த்: பாஸ், வயிறெரியுது. இன்னொரு சுஜாதா கதையை கற்பழிச்சுட்டாங்க. மூலக் கதையில பாட்டு தேடி கிராமம் வர கல்யாணராமன் மனசை அப்பாவிப் பெண் வெள்ளி கிள்ளிவிட அவன் கதைல முற்றும் போடற வரைக்கும் அவள் தனக்குக் கிடைப்பாங்கற எதிர்பார்ப்பில் நம்மைத் தவிக்கவிட — கதையின் ஆதார சுவாரஸ்யமே இந்த லவ் டிராக்தான். படத்துல இத அம்போன்னு விட்டுட்டாங்க பாஸ். எரிச்சலா வருது.

கணேஷ்: முடிவைக்கூட மாத்திட்டாங்களா என்ன?

வசந்த்: அதே முடிவுதான். கதைல வர பல காட்சிகளை அப்படியே மாத்தாம சொல்ல நினைச்சிருக்காங்க. அதான் தப்பாப் போச்சு. இதில் கதையா, காதல் கதையா துப்பறியும் கதையா — ஒண்ணும் புரியாம ஒரு வழி பண்ணிட்டாங்க. கதையின் நரம்பான நாட்டுப் பாடல் பாடற பெரியாத்தாவா வர மனோரமா மட்டும் கதைல வர கிழவியைத் தூக்கிச் சாப்பிடறா. கைக்குக் கெடைச்சதைத் திருடறதும் பிறகு சமாளிக்கறதும் — இந்த வீட்டில் பந்தலிலே பாகக்காய் பாட்டும் — படத்தின் கலகலப்பான சமாச்சாரம் மனோரமாதான்.

க.: டைரக்ஷன் மியூசிக்லாம் எப்படி?

வ.: கதையைக் காப்பியடிக்கத் திறமை வேண்டாம். இங்கு ரங்கராஜன் திறமை பேரில் நிறையச் சந்தேகம் வருது. முடிந்தவரை கெடுக்கிறார். ஸ்நேகலதா கொலை, கிளைமேக்ஸ் எதிலும் விறுவிறுப்பே இல்லாத டைரக்ஷன். காட்சிகள் துண்டு துண்டா பிடிப்பில்லாம வருது.
'ஏரியிலே எலந்தமரம்' 'தங்கச்சி வச்ச மரம்'— காட்சி பாட்டு ரெண்டும் ரீங்காரமிடற விஷயம். பழைய பங்களா செட் நன்னா இருக்கு. எங்கதான் பிடிச்சாங்களோ.

க.: பிரதாப், ஸ்ரீப்ரியா இருந்தும் படம் படுத்துருச்சா?

வ.: அதையேன் கேக்கறீங்க. அதனாலதான் விழுந்தது. எல்லாம் புதுசாப்போட்டிருந்தா தப்பிச்சிட்டிருக்கும். பிரதாப் முதல் தடவையா தப்புத் தப்பா பண்றார். ஸ்ரீப்ரியாவைக் கிராமப் பொண்ணா பாக்க முடியல. பாஷை மாறினா போதுமா பாஸ்? ஜெயராஜ் படத்ல வெள்ளிக்கு ஜாக்கெட் கிடையாதுன்னு நெனைப்பு. இங்கயும் அப்படிப் பண்ணியிருக்கலாம். இயல்பா இருக்கும்.

க.: போறும். உடனே கற்பனை பண்ணாதே.

வ.: ம்ஹூம். மருத முத்துவா வர சுந்தர் நீட். ஸ்நேகலதா கேரக்டர்கூட பாஸ். சுமலதா— ஒவ்வொரு ஆணையும் கட்டிப்பிடிச்சு பிறகு அவனை டெஸ்ட் பண்ணறதாச் சொல்றது பாருங்க பாஸ் ... நானாயிருந்தா .....

சுஜாதா கதைக்கு	ரூ. 1—00
பங்களா செட்டுக்கு	ரூ. 0—60
இளையராஜாக்கு	ரூ. 0—50
மனோரமாவுக்கு	ரூ. 0—50
ஆகமொத்தம்	ரூ. 2—60
கொடுப்பது	ரூ. 3—38
கிடைப்பது	ரூ. 2—60
தண்டம்	ரூ. 0—78

க.: உனக்கு விமோசனமே யில்லே.

வ.: படம் கெடுத்தவங்களுக்குக் கூடத்தான் பாஸ்.

— ஜனிஜனிசாஸ்திரி







பண்பாட்டுக்குப் பல்லாண்டு

ஆகஸ்டு 23 ஞாயிற்றுக் கிழமை திருக்குற்றாலம் வந்தவர்கள் திக்கு முக்காடிப் போனார்கள். சொற்பொழிவு அருவியில் குளிப்பதா? இசை அருவியில் திளைப்பதா? மலை அருவியில் நீராடுவதா? அல்லது விருந்தோம்பல் என்கிற அன்பு அருவியில் நனைவதா என்று தெரியாமல் திண்டாடினார்கள். கடைசியில் நான்கையுமே அனுபவித்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தார்கள். ஒன்றைப் பார்க்க ஒன்று சிறப்பாக இருக்கவே எதைப் பாராட்டுவது என்று புரியாமல் விழித்தார்கள்.

டிகேசிக்கு விழா என்றாலே தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் விழா என்றுதானே அர்த்தம்! தமிழ் நாட்டில் அவரைப் போல் சரஸ்வதி வழிபாடு செய்தவர் இந்த நூற்றாண்டில் வேறு யாரும் இல்லை. சிற்பம், சித்திரம், நாட்டியம், இசை, இலக்கியம் போன்ற எல்லாக் கலைகளையும் பூரணமாக அனுபவித்தவர் டி.கே.சி. அழுக்காறு இல்லாத ரசனை அவருடையது. அதனால்தான் அவருடைய ரசிகத் தன்மையே ஒரு ரசிக்கப்பட வேண்டிய கலையாக நமக்குத் தோன்றுகிறது. ''இப்படியெல்லாம் ரசிக்கலாம்'' என்று தமிழ் கூறும் நல்லுலகத்துக்குக் காட்டிக் கொடுத்தவர் அவர்.

தமிழக செய்தி—மக்கள் தொடர்புத் துறையிலிருந்து வந்த அழைப்பிதழைப் பார்த்த போது பிரமிப்பாக இருந்தது. புகைப்படக் கண்காட்சி திறப்பு, டி.கே.சி. நினைவு மண்டப அடிக்கல் நாட்டுதல், உருவப் படத் திறப்பு, உருவச் சிலைத் திறப்பு, கருத்தரங்கம், கவியரங்கம், சிறப்புக் கூட்டம், இன்னிசை நிகழ்ச்சி இத்தனையும் எவ்வாறு ஒரே நாளில் நடக்கும் என்று சந்தேகப்பட்டோம். ஆனால் ஆச்சரியப்படும் விதமாக அனைத்தும் இனிதே நடந்தேறின. செய்தி – அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு வீரப்பன் அவர்களும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குனர் கே. ஏ. சுந்தரம் அவர்களும் விழா ஏற்பாடுகளைக் கவனித்துக் கவனித்துச் செம்மையாகச் செய்திருந்ததுடன், விழாவில் பங்கேற்க வந்திருந்த அறிஞர் பெருமக்களுக்குச் சிறு குறையும் இல்லாமல் உபசரித்த பண்பு டி.கே.சி.யின் விருந்தோம்பலைத்தான் நினைவூட்டியது. டி.கே.சி.யின் பேரன்களான தீப. நடராஜன், குற்றாலலிங்கம், குமாரசாமி ஆகியோரும், அவர்களது குடும்பத்தினரும் ஓடி ஓடிப் பணியாற்றி, வெளியூர்களிலிருந்து வந்திருந்த நூற்றுக் கணக்கான டி.கே.சி. அன்பர்களை அன்பு பாராட்டி அருமையாகக் கவனித்துக் கொண்டார்கள்.

✖ ரசிகமணி டி.கே.சி. அவர்களின் திருவுருவத்தைத் திறந்து வைக்கிறார் முன்னாள் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம். அருகே தமிழக செய்தித்துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பனும் செய்தித் துறை இயக்குநரும்.

✖ ரசிகமணி டி.கே.சி. புகைப் படக் கண்காட்சியைத் திறந்து வைத்த சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு செங்கோட்டு வேலன் செய்தித்துறை அமைச்சருடன் பார்வையிடுகிறார்.





× ரசிகமணி நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார் தமிழக நீதி அமைச்சர் நெடுஞ்செழியன்.

காலை நிகழ்ச்சியின்போது தலைமையுரையில் டி.கே.சி.யின் குண நலன்களைப்பல கோணங்களில் எடுத்துக் கூறிய நாவலர் நெடுஞ்செழியன் பண்பாடு என்ற வார்த்தையைத் தமிழுக்கு அவர் அளித்த பெருமையைக் கூறினார். பின்னர் அவருடைய பெயரே அவருடைய சிறப்புக்கள் அனைத்தும் வெளியாகும் வண்ணம் அமைந்திருப்பதைச் சுட்டிக் காட்டினார். T என்பது Tamil K என்பது Kamban C என்பது Culture ஆகியவற்றுக்கு அடையாளம் என்றார். தமிழ், கம்பன், பண்பாடு இம் மூன்றும் ஒன்று சேரும்போது டி.கே.சி.யின் உருவம் கிடைத்து விடுகிறது என்று அவர் கூறியதைச் சபையோர் கரவொலி எழுப்பி ஆமோதித்தார்கள்.

விழாவில் டி.கே.சி. புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றிய மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி செங்கோட்டு வேலன், கண்காட்சி டி.கே.சி.யின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளை உணர்த்துவதையும் அந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் தமிழுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்றமளிப்பதையும் கூறினார்.


அடுத்துக் கருத்தரங்கம். தலைமை வகித்த திரு அ. ச. ஞானசம்பந்தம் ''டி. கே. சி. வெறுத்த தமிழ்ப் பண்டிதர்களின் பிரதிநிதி நான்'' என்று தொடங்கி அதிர்ச்சி யளித்தாலும் 'பண்டிதர்களில் நீ ஒருவனே உருப்படுவாய்' என்று டி.கே.சி. கூறியிருக்கிறார் என்று ஆறுதல் கூறி, கூடவே டி. கே. சி.யின் மனத்தை விளக்கவும் செய்தார்:

''நிகண்டு முதலியவை படிப்பதாலும் நேர் நிரை நிரை என்று பிரிப்பதாலும் கவிதையின் ரசம் போய்விடும். ரசிகன் கவிஞனுடைய உள்ளத்தோடு ஒன்றிப் பார்க்க வேண்டும். உள்ளத்தைத் தொடுவது கவிதை. கவிதையில் உள்ள தாளத்தில் மனத்தைப் பறிகொடுத்தவர் டி. கே. சி. சொல்லையும் பொருளையும் கவிதையின் துள்ளலையும் சேர்த்து அனுபவிக்கிற முறை டி.கே.சி.யுடையது'' என்றார்.

இதன் பின்னர் திருவாளர்கள் கு. அருணாசலக் கவுண்டர், மு. அருணாசலம், 'எஸ்.வி. எஸ்., ல. சண்முக சுந்தரம், தீபம் பார்த்தசாரதி, பரந்தாமன், கல்கி ராஜேந்திரன், திருமதி ராஜேஸ்வரி நடராஜன் ஆகியோரது கருத்துரைகள். எல்லாம் டி.கே.சி. என்ற வான வில்லின் பல்வேறு வண்ணங்களைத் துல்லியமாகக் காட்டும் முயற்சிதான்.

பிற்பகல் 3.30 மணிக்குக் கவியரங்கம் தொடங்கியது. தலைமை தாங்கியவர் திருமதி சௌந்தரா கைலாசம். டி. கே. சி.யின் பல்வேறு சிறப்புக்களை ஆறு புலவர்கள் கவிதையாக வடித்துக் கொடுத்தார்கள்.

திருமதி சௌந்தரா கைலாசம் தமது தலைமை உரையையும் ஓர் இனிய கவிதையாகவே நிகழ்த்தினார். டி.கே.சி. அவர்களை அவர் பொதிகையில் தமிழ் வளர்த்த அகத்தி



× ரசிகமணி உருவச் சிலையை திறந்து வைத்து, ரசிகமணி வசித்த இல்லங்களை நினைவு இல்லங்களாக ஆக்கும் அறிவிப்பை வெளியிடுகிறார் அறநிலைய அமைச்சர்.

யருக்கு ஒப்பிட்டபோது சபையோர் அந்தப் பொருத்தத்தை வியந்து பாராட்டினார்கள்.

திரு பகபதியைத் தலைவர் ''பார்த்தால் பசு பாய்ந்தால் புலி'' என்று அறிமுகம் செய்து வைத்தார். சற்று மிகையாகக் கூறுகிறோ என்று முதலில் தோன்றியது. ஆனால் பகபதியின் கவிதைகள் நம்மை டி.கே.சி.யின் பாணியில் 'பலே பலே' என்று கூறி ரசிக்கச் செய்து விட்டன. பங்கேற்ற பிற கவிஞர்கள்: புத்தனேரி ரா. சுப்பிரமணியம், கம்பராமன், கு. சிவமணி, அரு. நாகப்பன், திருமதி தங்க அன்புவல்லி.

மாலையில் சிறப்புக் கூட்டம். டி.கே.சி.யின் உற்ற நண்பரான நீதிபதி மகராஜன் உடல்நிலை காரணமாக இவ்விழாவுக்கு வர இயலாமல் போனாலும் வாழ்த்துரையை ஒலிப்பதிவு செய்து அனுப்பியிருந்தார்:

''ரசிகமணி நூற்றாண்டு விழாவை இன்று தமிழக அரசே மேற்கொண்டு நடத்துகிற தென்றால் இது ஆடம்பரமல்ல. அவருடைய அருமைப்பாடுகளை நன்றாக உணர்ந்ததால் தான் தானே முன்னின்று நடத்துகிறது. முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் டி.கே.சி.யை எவ்வளவு தூரம் ரசித்திருக்கிறார் என்பது இரண்டாண்டுகளுக்கு முன்பு தெரிய வந்தது. ''கல்கியில் பல ஆண்டுகள் டி.கே.சி. கம்பராமாயணத்தின் அழகுகளை எடுத்துச் சொல்லாமலிருந்தால் கம்ப ராமாயணம் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும்'' என்று கூறினார் முதல்வர்.

''அறநிலையத் துறை அமைச்சர் வீரப்பன் அவர்களோ ''தமிழுக்குத் தமிழே துணை'' என்று ரசிகமணி கூறியிருக்கிறார்கள். இப்படி ஒரு ஆழ்ந்த தமிழார்வம் எத்தனை பேருக்கு இருக்கிறது?'' என்று கேட்டார். இந்த விழாவில் கலந்து கொள்ளும் பேரறிஞர்களைப் பார்க்கும்போது தமிழக அரசு மட்டுமல்ல தமிழக மக்கள் எல்லோருமே இந்த விழாவில் பெருமிதத்தோடு கலந்து கொள்கிறார்கள் என்ற மன நிறைவு ஏற்படுகிறது'' என்று கூறிவிட்டு டி.கே.சி. வட்டத் தொட்டியின் சார்பில் தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோளையும் சமர்ப்பித்தார்: ரசிகமணி அவர்கள் வசித்து வந்த எளிமையான இரண்டு வீடுகள் அவருடைய பாதம் பட்டுப் புனிதமான வீடுகள். அவருடைய கவிதையின் இன்ப நாதத்தை எதிரொலித்துக் கொண்டிருக்கும் வீடுகள் திருக்குற்றால தேவஸ்தானத்துக்குப் பாத்தியமானவை. அவற்றைத் தமிழக அரசு விலைக்கு வாங்கி டி.கே.சி.யின் நினைவு இல்லங்களாக அல்லது நூல் நிலையங்களாக அமைத்துச் சிறப்பிக்க வேண்டும்.

டி. கே. சி.யின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்த சி. சுப்பிரமணியம் அவர்கள் ராஜாஜிக்கு டி.கே. சி.யிடம் இருந்த பெருமதிப்பைப் பற்றிப் பேசினார். ''ஒரு வேளை பள்ளிப் படிப்பு; ஒருவேளை தொழிற் கல்வி'' என்ற திட்டம் முதலில் உதித்தது டி.கே.சி.யின் உள்ளத்தில்தான். அதைத்தான் ராஜாஜி அமலாக்க முயன்றார். இப்போது நினைத்துப் பார்க்கும்போது எப்படிப்பட்ட அரிய வாய்ப்பை இழந்து விட்டோம் என்று வருந்த வேண்டியிருக்கிறது'' என்றார்.

நீதிபதி டாக்டர் மு. மு. இஸ்மாயீல் டி.கே.சி. நூற்றாண்டு விழா மலரையும் இரு புத்தகங்களையும் வெளியிட்டு அரியதொரு சொற்பொழிவாற்றினார்.

திருவாளர்கள் குழந்தையன் செட்டியார், பி.சி. பலராமராஜா ஆகியோர் நேர்த்தியாகப் பேசினர்.

கம்பரடிப்பொடி திரு சா. கணேசன், ரசிகமணி எவ்வாறு தமிழ் மொழியின் உயிர்த் துடிப்பைப் பற்றிப் பேசி வந்தார் என்பதை உதாரணத்துடன் எடுத்துச் சொன்னார்:

''மாட்டவே மாட்டேன், இல்லவே இல்லை, போயே போச்சு'' என்பது போன்ற அழுத்தமான உணர்வு செறிந்த வசனங்களை எப்படி ஆங்கில மொழியில் கூற 'இயலவே இயலாது' என்று ரசிகமணி கூறிவந்தார் என்பதைக் குறிப்பிட்டார்.

ராஜாஜி அவர்களின் புதல்வரான திரு சி. ஆர். நரசிம்மன் ராஜாஜிக்கும் ரசிகமணிக்கும் இருந்த நட்புப் பிணைப்பு எவ்வளவு ஆழமானது என்று கூறினார். இதைக் கண்ட ராஜாஜியின் அரசியல் நண்பர்கள் சிலருக்கு ''நம்முடன் இவ்வளவு நெருக்கமாக இருந்தவர் ஐம்பது வயதுக்கு மேல் எப்படி இன்னொருவரிடம் இவ்வளவு நட்புக் கொண்டார்'' என்று வியப்பும் பொறாமையுமே ஏற்பட்டு விட்டதென்றார்.

டி.கே.சி. உருவச் சிலையைத் திறந்துவைத்த அமைச்சர் ஆர். எம். வீ. அவர்களின் நிறைவுரை நிறைவான உரையாகவே திகழ்ந்தது.

திரு மீ. ப. சோமு டி.கே.சி.யின் உள்ளத்தில் எவ்வாறு ஒரு பூரணமான கவிஞன் ஒளிந்து கொண்டிருந்தான் என்பதையும் அந்தக் கவிதா சக்தியை வேண்டுமென்றே தியாகம் செய்துவிட்டு எவ்வாறு அவர் ஒரு ரசிகராகவே வாழ்ந்தார் என்பதையும்கூறிவிட்டு ரசிகமணி அவர்களின் கவிதையைத் தெளிவுடன் எடுத்தியம்பியபோது சபையோர் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள்.

கண் இமைக்காது காண்தகு வெற்பில்
கார்பல உறங்கு குற்றாலத்(து)
அண்ணலே! என்றன் குறையெலாம் கலி
அரற்றியும் நினதருள் காணேன்.
விண்ணிடை நின்று விரைவொடு வந்து
வெண்ணகையொடு விளையாடித்
திண்ணெனக் குதிக்கும் அருவியின் ஒலிதான்
திருச்செவி அடைத்தது கொல்லோ!

தொடர்ந்து நிகழ்ந்த கச்சேரியில் ஸ்ரீமதி எம். எஸ்., டி.கே.சி. அவர்களின் கவிதையை அவருக்குப் பிடித்தமான ராகங்களான சாவேரி, கேதாரகௌளை முதலிய ராகங்களில் உணர்ச்சி ததும்பப் பாடியபோது சபையோர் மெய் சிலிர்த்தனர். டி.கே.சி. அவர்கள் மிகவும் ரசித்த பாடல்களைப் பொறுக்கி எடுத்துப் பாடிய எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி அன்று ஓர் இசை அஞ்சலியாகவே அமைந்தது.

தமிழ் பண்பாட்டுக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்திய விழாவாகவே விளங்கியது ரசிகமணி நூற்றாண்டு விழா. —நமது நிருபர்



daCunha/L-Sham./127/T.

வேலைக்குப் போகும் பெண்


நடிப்பு:
டணால் தங்கவேலு


கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

6







தொங்க வக்கிறதை இல்லே கல்யாண ஊஞ்சலா கூட வக்கிறதே?
அப்பா, முதல்லே இவனோட அழகுக்காகத்தான் அவனைக் காதலிச்சேன். ஆனா இப்ப அவ மாதிரியே மீசையப் பாத்துப் பயந்துதான் அவனைக் கல்யாணம் பண்ணிக்கணும் போலிருக்கு!
கல்யாணத்துக்கு அப்புறம் அவ அழகப் பாத்துப் பயந்து தப்பவே, அவன் மீசையப் பாத்து ஆசைப் படுவே! டேய்... மறுபடி வாரான்டா அந்த மீசைக்காரன்!
அப்பனும் மவனும் என்ன தீர்மானம் பண்ணினீங்க? ஹாஹா!
யாரப்பா நீ? கொஞ்சம் மெதுவாச் சிரிக்கமாட்டே? ஓடு மொத்தமும் இடிஞ்சு விழுந்துடும் போலிருக்கே!
விட்டுடேன்! அதுக்கும் மருமககிட்ட விடா தொண்டு வரச்சொல்லிடுங்க!
யாருப்பா நீ? ஏதாவது பொண்ணுக்கு அப்பாவா? பொண்ணு கல்யாணத்துக்கு நிக்குதா?
அமிர்தம், வாயை மூடிக்கிட்டு இரு! இவரு மீசையப் பாத்துப் பயமில்லே உனக்கு?
இவரு பொண்ணுக்கு மாமா! பொண்ணுக்கு அப்பா இன்னும் பயங்கரமா இருப்பாரோ என்னமோ?
பொண்ணைப் பார்த்துட்டாப் போச்சு. ஏம்பா, உம் மருமவ காலேஜ் படிப்புப் படிச்சிருக்கா?
நல்லாப் படிச்சிருக்கு. அதவிட ஒங்க புள்ளைக்கி அவள நல்லாப் புடிச்சிருக்கு! நான் வாரேன்!
டேய் பன்னீரு! அதுக்குள்ள எனக்கு தெரியாமடீப் போயி பொண்ணைப் பாத்துட்டியாடா?
போட்டான்டா, இவன் பழுத்த ஒரு சூரிய குண்டு!
தொடரும்

JOHNSON®

மிக்ஸர் கிரைண்டர்

புதிதாக மாற்றியமைக்கப்பட்டதால் மேன்மையாக இயங்குகிறது: விரைவாகவே குளிர்ச்சியடைகிறது.

தீவிர ஆராய்ச்சி மற்றும் கடும் உழைப்பின் விளைவாக ஜான்ஸன் அளிக்கும் புதிய, மேன் படுத்தப்பட்ட மிக்சர்-கிரைண்டர் எல்லா வேலைகளையும் சிறப்பின் சிகரமாகச் செய்கிறது.



கிளர்ச்சியூட்டும் புது அம்சங்கள் பாரீர்!

முழுமையான செயலாற்றலுக்காக தனிச்சிறப்பு வாய்ந்த பிளேடுகள்



இரு கிண்ணங்களிலும் அமைக்கப்பட்ட புதிய பிளேடுகள் மேலும், கீழும் மற்றும் சுழன்றும் இயங்குவதால் முழுமையான செயலாற்றல் கிடைக்கிறது. கட்டிகளோ, தானியங்களோ இருக்க வாய்ப்பில்லை.

மேல்பாகத்தில் இடைவெளி இருப்பதால் துரித குளிர்ச்சி



சூடான காற்று துரிதமாக மேல்பாக இடைவெளியிலிருந்து வெளியேறுவதால் மோட்டார் சூடாகாமல் 45 நிமிடங்கள் தடையின்றி இயங்க முடிகிறது. சாதாரணமாக மோட்டார் எரிந்து விடும் அபாயமில்லை.

புதிய கலவை கிண்ணம் தாராளமான காற்றோட்டத்திற்கென,



கலவைகிண்ணத்தின் வளைந்த உட்பாகம் பிளேட் இயங்குவதற்கு வாகாக அமைக்கப்பட்டிருக்கிறது. சீரான கலவை கிடைப்பதோடு சரியான அளவுதான் இதில் அடங்கும்.

எவர்சில்வர் கிண்ணத்தில் சீரியமுறையில் அமைக்கப்பட்ட கைப்பிடி



சீரிய முறையில் அமைக்கப்பட்ட கைப்பிடி எவர்சில்வர் கிண்ணத்தைக் கையாள எளிதாகவும், சௌகரியமாகவும் இருக்கிறது.

சுகாதாரத்திற்கென இரு கிண்ணங்கள்; பாதுகாப்புக்கென இரு பிளேடுகள்



இரு தனி கிண்ணங்கள் இருப்பதால் கலவை செய்தவுடன் கழுவும் தொல்லையில்லை. வேறு கிண்ணத்தில் அரைக்கலாம். சிரமம் குறைவு. மில்க் ஷேக்குகளில் மசாலா மணம் கலப்பதில்லை. உறுதியாக இணைக்கப்பட்ட பிளேடுகள் முழுமையாக பாதுகாப்பு அளிக்கின்றன. இயங்கும்போது பிளேடுகள் பறந்து செல்லும் அபாயமில்லை.

ஜான்ஸன் மிக்ஸர் கிரைண்டரின் முதன்மையான சிறப்பு அம்சங்களும் இதிலே உள்ளன.

- துப்புரவாகச் சுத்தம் செய்ய எளிதாகக் கழற்றக்கூடிய பாகங்கள்
- செம்மையாக வேகத்தை மாற்ற மேன்மையான இஞ்சர் விசை.
- ஒரு வருட உத்திரவாதம் மற்றும் சிறப்பான பின் விற்பனை பணி.

JOHNSON

ஆற்றலிலும், இயக்கத்திலும் இணையிலாச் சிறப்பு கொண்டது.

Parade/BE/8122



பொன்மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்

வித்துவான் வே. லட்சுமணன்

"நேருவுக்கும் அண்ணாவுக்கும் அடுத்த படியாக மக்களைக் கவர்ந்திழுக்கும் வசீகர சக்தி கொண்டவர் எம். ஜி. ஆர். இத்தகைய வசீகர சக்தியை வேறெவரிடமும் இந்தியா கண்டதில்லை."

இவ்வாறு சொன்னவர் ஓர் அமெரிக்க அரசியல் பேராசிரியர். இதை ''அமெரிக்காவில் அண்ணா — எம்.ஜி.ஆர்.'' என்ற நூலில் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

'வசீகர சக்தி' என்பது இயற்கைத் தோற்றத்தால் மட்டும் வந்துவிடுவதில்லை. அந்தச் சக்தி அமையப்பெறுவதற்குப் பல தகுதிகள் வேண்டும்.

தோற்றப் பொலிவு, பேச்சுத் திறன், உள்ளத்தின் ஒளி, தியாகத்தின் பிரதிபலிப்பு, செயலாற்றல், ஆழ்ந்த அன்பு, தேர்ந்த அறிவு, தன்னலமற்ற உழைப்பு, கடும் முயற்சி முதலானவற்றால் ஏற்படுவதே உண்மையான வசீகர சக்தியாகும்.

பொன்மனச்செம்மல் கடந்த காலத்தில் தமிழகத்தில் கலை மூலமாகவும், அரசியல் மூலமாகவும் ஆற்றிய அருஞ்செயல்கள் அற்புதமானவை என்பதும் எல்லோரும் உணர்ந்த உண்மை.

பொன்மனச் செம்மல் அவர்களிடம் சிந்தனை, பேச்சுத்திறன், செயலாற்றல் ஆகிய மூன்று தன்மைகளுக்கும் மேல், ஒரு புதுமையான சிறப்புத் தன்மையும் கூடியிருப்பதைக் காணலாம். அதுதான் 'உன்னத நடிகர்' என்ற நிலை.

இந்த வாய்ப்பு சாதாரணமான ஒன்று இல்லை.

மக்களிடம் தன்னைப் பற்றிய ஒரு மகத்தான எண்ணத்தை உருவாக்கிக் கொள்ளச் 'சினிமா' ஓர் அரிய சாதனமாக அமைந்தது.

லட்சக் கணக்கான மக்களிடம் அன்றாடம் தன்னையும், தன் கோட்பாடுகளையும் பிரதிபலித்துக் காட்டுவதற்கு எப்பேர்ப்பட்ட உயர்ந்த சாதனம் சினிமா என்பதைச் சிந்தியுங்கள்!

சினிமா மூலம், 'மக்களிடம்' செல்வாக்குப் பெற்று, அந்தச் செல்வாக்கை ஆக்கப் பணிகளுக்கு முழுமையாகப் பயன்படுத்தி,



இந்தத் தமிழ் நாட்டில் மகத்தான ஒரு புரட்சியைச் செய்தவர் மக்கள் திலகம். அதனாலேயே ஆதியில் அவர், 'புரட்சி நடிகர்' என்று போற்றப்பட்டார். கால வளர்ச்சியில் புரட்சி நடிகர் 'புரட்சித் தலைவரா'னார்.

புரட்சி நடிகராகவும், புரட்சித் தலைவராகவும் தன்னை உருவாக்கிக் கொள்ள அவர் மேற்கொண்ட முயற்சிகளும் அடைந்த இன்னல்களும் பெற்ற அனுபவங்களும் கணக்கற்றவை.

ஆதியில் திரை உலகில் பிரவேசிக்கவே எண்ணற்ற தடைகள் உண்டாயின. முதன் முதலாக 'சாயா' என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமாகி, அது முற்றுப் பெறாமல் போயிற்று.

அதற்கு முன் 'இதோ அதோ' என்று ஆசை காட்டிக் கடைசியில் சந்தர்ப்பம் தரப் படாமல் போன படங்கள் பல.

சந்தர்ப்பம் தரப்பட்ட படங்களிலும் பெரிய வேடம் தரப்படுவதில்லை; முழுமை யாக இரண்டு இடங்களில் வசனம் பேசும் வாய்ப்பும் கிடைப்பதில்லை.

இதற்கும் முந்திய நாட்களில் 'பாய்ஸ் கம்பெனி'யில் முன்னேறுவதற்கு முன் பின் தள்ளப்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளம்.

ஏழு வயது அப்போது. குருகுல வாசம் பாய்ஸ் கம்பெனியில்தான். சாப்பாடு போட்டு வாரத்துக்கு நாலணா தருவார்கள். எந்தப் பாத்திரம் கொடுத்தாலும், அது தன் தகுதிக்கு எவ்வளவு குறைந்தது என் றாலும் அதை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பல எதிர்ப்புக்களைக் கடந்து திரைப் படப் பிரவேசம் செய்ய வந்தார்.

சிறு சிறு வேடங்கள் கிடைப்பதே குதிரைக் கொம்பாயிற்று.

ஒரு படத்தில் இன்ஸ்பெக்டர் வேஷம்.

இன்னொரு படத்தில் தோன்றிய காட்சி ஒன்றே ஒன்று; அதில் தோன்றி, அதிலேயே இறந்துவிடுகிற வேடம்!

இப்படிப் பல அனுபவங்கள்:

நோக்கம் வேறு; அதை அடைவதற்குத் தடைகள் நூறு!

கதாநாயகனாக வேண்டும்; கதாநாயகனாக ஆனால்தான் புகழ் வரும்; புகழ் வந்தால் தான் மதிப்பு, வருவாய் எல்லாம் வரும். அவை வந்தால்தான்தான் சொல் எடுபடும்; தன் கருத்துக்கு வரவேற்பு உண்டாகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள் வதற்கு, இயற்கை குறுக்கே நின்றது; கிர கங்கள் தடை செய்தன; தொழிலதிபர்கள் சக நடிகர்கள், இயக்குனர் கள் எல்லோருமே எதிராக இருந்தார்கள்!

"நேற்று உன் கணவர் நாலைந்து பெண்கள் பின்னாடி சுற்றிக் கொண்டிருந்தார்டீ!"

"அப்படியா, எங்கே?"

"விநாயகர் கோவில் பிராகாரத் தைச் சுற்றி...!"



எதிர் நீச்சல்தான்! அசாத்தியமான பொறுமை; தன்னம்பிக்கை, உழைப்பு, போராட்டம் ஆகியவை வளர்ந்துகொண்டே இருந்தன. அவற்றின் வளர்ச்சி வீண்போக வில்லை. காலக் கிரமத்தில் தாமும் வளர்ச்சி அடையப் பெற்றார்!

இந்த வளர்ச்சிக்கு மேற்சொன்ன தன் மைகள் மட்டுமல்லாமல், தேவைப்பட்ட தகுதிகள் எல்லாமே தம்மிடம் அமையும் படியாகத் தம்மை உருவாக்கிக் கொண்டார்.

நடிப்பில் எத்தனை வகைகள் உண்டோ அத்தனையையும் பயிற்சி மூலம் வருவித்துக் கொண்டார்.

சட்டென்று சிரிக்க வேண்டுமா? முடியும். கண்ணீர் பெருக்கி அழ வேண்டுமா? முடியும். விழிகளால் பேச வேண்டுமா? முடியும்.

மொழிகளால் கர்ஜனை செய்ய வேண் டுமா? முடியும்.

ஓடவேண்டுமா, தாவ வேண்டுமா, குதிக்க வேண்டுமா? எல்லாம் முடியும்.

குஸ்திச் சண்டையா? வாள் வீச்சா? குச்சிச் சண்டையா? யாவும் முடியும்.

நவரசங்களையும் பிரதிபலிக்க வேண்டுமா? தயார்!

குதிரை ஏற்றம், யானை ஏற்றம் செய்ய வேண்டுமா? தயார்.!

இன்னும் என்னென்ன தேவை என்றாலும் அத்தனைக்கும்தயாராகத் தம்மை அமைத்துக் கொண்டார்.

அதிகாலையில் எழுந்திருப்பார்; கடுமை யான உடற்பயிற்சி மேற்கொள்வார். இத னால் உடலில் பலமும் பொலிவும் ஏற்பட்டன.

இப்படி எல்லாத் தகுதிகளும் பெற்றும் கூடப் படத் தயாரிப்பாளர்களும் இயக்கு நர்களும் ஏதேனும் குறை சொல்லிச் சந்தர்ப் பம் தராமல் ஒதுங்கிவிடுவார்கள்.

ஏமாற்றுபவர்களிடம் ஆத்திரம் வரும்; ஆனால் அதை அடக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியிராது.

''என்னிடம் உள்ள தகுதிகளைச் சோதித் துப் பாருங்கள். எந்த மாதிரியும் நடிப்பேன்! எப்பேர்ப்பட்ட பயங்கரச் சூழ்நிலையிலும் வீர சாகசங்களைச் செய்வேன்'' என்று சவால் விட்டாலும், செவிடன் காதில் ஊதிய சங் காகவே இருக்கும்.

சிலர் 'ஆகட்டும்' என்பார்கள். நடை முறையில் விளைவு எதிர்மறையாகவே இருக் கும்!

சிலர் உண்மையாக உதவும் ஆர்வத்துடன் முன்வருவார்கள்; ஆனால் அவர்களைத் தடுக் கும் உபகாரிகள் உடனிருப்பார்கள்.

தாயாரிடம் தம் நிலைமையைச் சொல்லித் தம்மை ஏமாற்றுபவர்களின் போக்கையும் பற்றிக் கூறுவார் மக்கள் திலகம்.

அன்னை உரைப்பார்கள்: ''எறிந்த கல் மடியிலே! அவர்களின் வினை அவர்களைக் கவ னித்துக் கொள்ளும். தடைக் கல்லைப் படிக் கல்லாக்கிக் கொண்டு நீ முன்னேற வேண் டும்!'' என்று.

ஏமாற்றம்ஏற்படும்ஒவ்வொரு நேரத்திலும் அன்னையின் அறிவுரை தாரக மந்திரம் போல் ஆறுதல் அளிக்கும். அதனால் மீண்டும் ஓர் உற்சாகம் ஏற்படும். மறுபடியும் முயற்சி வேள்வி தொடங்கும்.

இப்படியெல்லாம் போராடிப் போராடிப் பிறகுதான் 'இராஜ குமாரி' படத்தில் கதா நாயக வேடம் கிடைத்தது. படம் வெற்றி பெற்று, மக்கள் திலகம் அவர்களுக்கும் அதில் பங்கு கிடைத்தது. ஆனால் தொடர்ந்து கதா நாயகன் வேடத்துக்குப் படங்கள் வர வேண்டுமே, வரவில்லை. மீண்டும் ஏமாற்றம் தான்.

வீர அபிமன்யுவின் சரித்திரத்தைச் சிறு வயதிலேயே அன்னையாரால் அறிந்தவர் மக்கள் திலகம். இதனால் 'வீரம்' அவரது இரத்தத்துடன்கலந்திருக்கும்வாய்ப்புண்டாகியிருந்தது. அதனால் ஏமாற்றங்களைக் கடந்து உற்சாகமாகச் செயலாற்றும் உணர்ச்சி வேகம் அமைந்தது.

இராஜகுமாரிக்கு அடுத்து 'மோகினி' என்ற படம் கிடைத்தது. அதில் திறமையை வெளிக்காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே தவிரக் கதாநாயக வேடம் கிடைக்கவில்லை. 'மந்திரி குமாரி'யிலும் அப்படித்தான்.

பிறகு காலம் கனிந்தது. 'மருத நாட்டு இளவரசி' என்ற படத்தில் கதாநாயகனாக நடித்தார். பெரும் வெற்றி பெற்ற இந்தப் படம் படைப்புக் காலத்தில் பல சோதனைகளுக்கு ஆளாகியிருந்தது. வெளி வந்ததும் வெற்றி கண்டு, அந்த வெற்றியின் அடிப்படை மக்கள் திலகத்தின் சாதனைதான் என்ற தீர்ப்புக்கும் அடிகோலிற்று.

பின்னர் வந்த படங்களில் எல்லாம் படிப்படியாகப் புகழ் வளர்ந்தது. மர்மயோகி, சர்வாதிகாரி, அந்தமான் கைதி, என் தங்கை, ஜெனோவா முதலானவை குறிப்பிடத்தக்கவை.

இவற்றிற்குப் பிறகு 'மலைக்கள்ளன்' வந்தான்.

இந்தக் கள்ளன் மக்களின் உள்ளங் கவர்ந்த கள்வன் ஆனான்!

ஓங்கு புகழ் கண்டது இந்தப் படம்.

தென்னகத்துத் திரைப்படங்களில் முதன் முதலாக ஜனாதிபதி அவர்களின் வெள்ளிப் பதக்கத்தைப் பெறும் வாய்ப்பு இப்படத்துக்கு அமைந்தது.

தமிழ்த் திரை உலகின் வளர்ச்சிக்குப் பொறிக்கப்பட்ட ஒரு நற்சான்றாக இதைக் கொள்ளலாம்.

இதன் பிறகு 'குலேபகாவலி' படத்தில் நடித்தார். சிறப்புண்டாயிற்று. 'அலி பாபாவும் நாற்பது திருடர்களும்' என்ற படம் அதிகம் புகழ் தந்தது. இது முழு நீள வண்ணப்படமாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

செக்கச் சிவந்த பொன் மேனி உடையவர், இந்த வண்ணப் படத்தில் ஜாஜ்வல்யமாக ஒளி வீசினார்.

பிறகு மதுரை வீரன் வந்தான். மாபெரும் புகழ் தந்தான்.

சமூகப் படக் கதாநாயகனாக வேண்டும் என்ற இலட்சியத்துக்கு விதையூன்றி வெற்றி தந்தது 'தாய்க்குப் பின் தாரம்' என்ற படம்.

வரலாறு, சமூகம், ஆகிய இருநிலைப் படங்களிலும் ஒருநிலைப்பட்ட உன்னதச் சிறப்பு ஏற்படவே, ''இனி மக்கள் திலகம் அவர்களைப் போட்டு எடுக்கப்படுகிற எந்தப் படமும் வெற்றிபெற உத்தரவாதம் உண்டு'' என்ற பேச்சு எல்லோரிடத்திலும் நிலைபெற்றது.

படத் தயாரிப்பாளர்கள் போட்டி போட்டார்கள், ஒப்பந்தம் செய்து கொள்ள.

விநியோகஸ்தர்கள் விரைந்து வந்தார்கள் படத்தை வாங்கிக்கொள்ள.

கொட்டகையாளர்கள் பறந்து வந்தார்கள் படத்தை ஓட்டும் உரிமை பெற. இப்படிப்பட்ட பெரும் புரட்சி ஏற்பட்டது.

ஆதியிலிருந்தே திரு எம். ஜி. ஆர். அவர்களுக்கு உறுதுணையாக இருக்கத் தொடங்கிய ரசிகர்களுக்கு ஆர்வம் அதிகமாகக் கேட்க வேண்டுமா? நாளுக்கு நாள் ரசிகர்களின் எண்ணிக்கை கூடிற்று.

அந்த ரசிகர்கள் மக்கள் திலகம் அவர்களின் உன்னதமான கருத்துக்களைப் பறைசாற்றிப் பின்பற்றத் தொடங்கினார்கள்.

தமிழகத்தில் கலைத் துறையில் மட்டுமல்லாமல் அரசியலிலும் புதிய புரட்சி ஏற்படுவதற்கான அறிகுறிகள் வளரத் தொடங்கின.

இந்த மாதிரி ஒரு மலர்ச்சி ஏற்படத் தொடங்கியதை அறிந்த மக்கள் திலகம் முன்னிலும் தீவிரமான வகையில் பொறுப்புக்களை ஏற்க முன்வந்தார்.

ஒருபுறம் கலைத் துறையும் மறுபுறம் அரசியலும் அவரின் முழு நேரத்தையும் கவர்ந்துக் கொண்டன.

சக்கரவர்த்தித் திருமகன், புதுமைப் பித்தன் போன்ற படங்கள் தொடர்ந்து வெளி வந்து புகழ் தந்தன.

இக்காலத்தில்தான் 'நாடோடி மன்னன்' தோன்றினான்; வளர்ந்தான்; பிறகு பவனி வரப் புறப்பட்டான்.

தமிழ்த் திரை உலகில் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டது.

(வளரும்)




மகள்: எனக்கும் அம்மா மாதிரியே வாயும் நாக்கும் நீளம்னு சொல்கிறார் அப்பா உங்க மாப்பிள்ளை!

தந்தை: மாப்பிள்ளை சொன்னால் கரெக்டாத்தான் இருக்கும். அவர் சர்வேயர் ஆச்சே!







தார்மீகப் பற்றுக்குறை

"விலைவாசிகள் உயர்ந்து விட்டன என்பதற்காக எதிர்க்கட்சிகள் எதற்காக அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யவேண்டும்? கள்ள மார்க்கெட்காரர்கள், பதுக்கல் பேர்வழிகளுக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்தட்டுமே!''
—பிரதமர்.

இந்தப் பேச்சில் உள்ள மூன்று அனர்த்தங்கள்: 1. விலைவாசி உயர்வால் மக்கள் படும் அவதியை அரசுக்கு உணர்த்துகிற எதிர்க் கட்சிகளின் கடமையை, உரிமையை மறுப்பது. 2. கள்ளமார்க்கெட் காரர்கள் யார் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும் அரசு அதிகாரிகளின் பொறுப்பை எதிர்கட்சிக்காரர்கள் மீது சுமத்துவது. இதன் மூலம் யார் வேணுமானாலும் யார் மீது வேணுமானாலும் பதுக்கல் பழி சுமத்தலாம் என்ற ஓர் அராஜக நிலையை உருவாக்குவது. 3. கள்ள மார்க்கெட் காரர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தால் கள்ள மார்க்கெட் ஒழிந்து போகும் என்ற அபத்தமான நம்பிக்கையை மக்களிடையே வளர்ப்பது.

பதுக்கலும் கள்ள மார்க்கெட்டும் மறைய உற்பத்தி பெருகவேண்டும்; கண்ட்ரோல்கள் ஒழியவேண்டும். கிளர்ச்சிகளால் சாதிக்கக் கூடிய காரியம் அல்ல.

பிரதமரின் ஆகஸ்டு 16ம் தேதி பேச்சைத் தொடர்ந்து ஆகஸ்டு 25ல், பதுக்கல்காரர்கள், கள்ளமார்க்கெட் பேர்வழிகளைத் தடுப்புக் காவலில் வைத்து, தீர விசாரியாமல், ஸ்பெஷல் கோர்ட்டுகளில் அவசரமாயும் கடுமையாயும் தண்டிக்கும் சட்டமும் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது. இத்தகைய கடுமையான சட்டங்களாலும் கள்ள மார்க்கெட் ஒழியாது என்பது ஒருபுற மிருக்க, இத்தகைய சர்வாதிகாரச் சட்டங்கள் துஷ்பிரயோகமாகவே அதிக வாய்ப்புண்டு. உண்மைக் குற்றவாளிகளை இவை பாதிக்கவும் செய்யாது. ஆளும் கட்சியிலும் அதிகார வர்க்கத்திலும் லஞ்சலாவண்யங்களை அதிகரிக்கவே இது போன்ற சட்டங்கள் உதவும்.

விலைவாசிகள் ஸ்திரப்பட, பணவீக்கம் குறைய வேண்டும்; பற்றுக்குறை நீங்கவேண்டும்.

அனைத்திலும் பெரிய பற்றுக்குறை தார்மீகப் பற்றுக்குறை. அரசன் எவ்வழி அவ்வழி மக்கள் என்பதற்கேற்ப, இந்தப் பற்றுக்குறை ஆட்சியிலுள்ள தலைவர்களைப் பற்றியிருக்கும்போது, அதிகாரிகள், வியாபாரிகள், தொழிலதிபர்கள் என வாழ்க்கையின் சகல துறைகளிலும் உள்ளோரிடம் ஊடுருவித் தொற்று நோயாகப் பீடித்திருப்பதில் வியப்பில்லை.

'சங்கராச்சாரியார் படத்தை மாட்டி வைத்துப் பூஜை செய்கிறீர்களே' என்று அங்கலாய்க்கும் அமைச்சரும்; 20,000 மூட்டை சிமெண்ட்டை எட்டு கண்டிராக்டர்களுக்கு மூட்டை ரூ 40/- விலையில் விநியோகித்த முதலமைச்சரும்; லாபம் வந்தால் தன் உடைமை நஷ்டம் வந்தால் பொது உடைமை என்ற ரீதியில் செயல்பட்டு, ஒரு மோட்டார்கார் நிறுவனத்தின் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை மக்கள் தலையில் சுமத்தும் பிரதமரும்; இன்கம்டாக்ஸ் கட்ட மறந்து போன மாஜி மந்திரியும்; பெண் கடத்தலுக்காகப் போலீஸாரால் வழக்கு தொடுக்கப்பட்டுள்ள ஒருவரை அமைச்சரவையிலிருந்து விடுவிக்க மறுத்துப் பாதுகாப்பு தந்து வந்த முதல்வரும்; பிரான்ஸிலிருந்தும் தென் கொரியாவிலிருந்தும் தேவையில்லாத எஃகை ஏராளமாய் இறக்குமதி செய்து ஸ்விஸ் பாங்கில் தனி நபர்களுக்குக் கமிஷன் சேர்க்கும் SAIL போன்ற அரசு நிறுவனங்களும்; இதையெல்லாம் தட்டிக் கேட்கத் துணிவின்றி ஏதோ தமிழகத்தில்தான் தாங்கமுடியாத அளவு ஊழல் மலிந்து விட்டது போல் கறுப்புச்சட்டை ஊர்வலம் நடத்தி நாடகமாடும் எதிர்க் கட்சித் தலைவரும்; அடுத்த பட்ஜெட்டை நாம் சமர்ப்பிப்போம் என்ற நம்பிக்கையே இல்லாமல் பேசவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளான நிதி அமைச்சரும்; சுயநலம் காரணமாக ஏக கட்சி ஆட்சியை நிரந்தரப் படுத்திக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களும் உள்ள வரை,

பதுக்கலும் கள்ளமார்க்கெட்டும் ஜவாலாவும் புண்ணிய பாரத பூமியில் கொடி கட்டிப் பறக்கவே செய்யும்.


1981 செப்டம்பர் 6
துன்மதி ஆவணி 21
மலர்: 40 இதழ்: 6



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்



வட்ட மேஜை

● தலையங்கம் உலக சமாதானத்துக்கு ஓர் அறைகூவலாகத் திகழ்ந்தது. மாஸேதுங் போமிமோட்டோவின் கட்சிக்கு வாதாட ராஜாஜிகூட இல்லையே எனும் ஆதங்கம் தங்களுக்கு இருந்தாலும் — இதற்கெல்லாம் தார்மீகக் குரல் எழுப்ப ''கல்கி'' இருக்கிறதே எனும் ஆத்ம திருப்தி எங்களுக்கு ஏற்படுகிறது.
வீரபாண்டி வதிலை அன்புச்செல்வன்

● புரட்சித் தலைவரின் படத்தைப் பிரேம் போடலாம் என்று பார்த்தால் பின் பக்கம் கிடைத்தற்கரிய படங்களை வெளியிட்டிருக்கிறீர்களே.
நயினாரகரம் குலஸ்

● அட்டையில் முதல்வரின் 'டாப்'பான படம். உள்ளே அவரைப் புகழ்ந்த கட்டுரை. பக்கத்திலேயே கேலிச் சித்திரமா? ஏன் சார் இப்படி எங்களைச் சிண்டைப் பிய்த்துக் கொள்ள வைக்கிறீர்கள்?
கும்பகோணம் டி.எஸ். சீதாராமன்

● பொன் மனச் செம்மல் எம்.ஜி. ஆரைப் பற்றி வித்வான் அவர்களின் கட்டுரை தேவாமிருதமாக இனிக்கிறது. சபாஷ் கல்கி! புரட்சித் தலைவர் அட்டைப் படம் அருமை! அருமை! அருமை!
பெங்களூர் எஸ். எம். குப்தா

● ''பொன் மனச் செம்மலும் பொன் விழா ஆண்டும்'' கட்டுரையை வெளியிட இருக்கவே இருக்கிறது இரண்டு பத்திரிகைகள். கல்கியே உனக்கு ஏன் இந்த ஆசை?
பெங்களூர் எஸ். எல். பி. குமார்

● பி.எஸ்.ஆரின் குட்டிக் கதைக் களஞ்சியம் அருமையான ஸடையர். தொடர்ந்து பி.எஸ்.ஆர். அவர்களை எழுத அனுமதியுங்கள் சார்.
ஆவடி ஆர். பாலாஜி ராஜா

● மூன்றாவது பரிசுக் கதையான 'இன்ஸ் பெக்ஷன்' உண்மைக் கதையா? அல்லது உண்மையிலேயே கதைதானா? இன்றைய நிலையில் அது கதையாகத் தெரியவில்லை. ஒரு உண்மை நிகழ்ச்சியாகவே தெரிகிறது.
தென்கரை சிதம்பர சூரிய நாராயணன்

● ''புரையோடிய புண்கள்'' சாமானியக் கதையல்ல, சமுதாயத்தில் விஷமெனப் பரந்து விட்ட ஒரு கருத்தை அருமையான நடையில் விளக்கிக் கூறியுள்ளார் சந்திரசேனா.
குரோம்பேட்டை ராஜலக்ஷ்மி சங்கரதாஸ்

● ஆர். சூடாமணியின் 'வணக்கம் நான் சாந்தா' புரட்சிகரமான கதை. சாந்தாவைப் போல் ஒவ்வொருவரும் இதை நடைமுறைப் படுத்தினால் சமுதாயம் விழித்தெழும்.
டில்லி-6 ஏ. ஷேக் முகமது

● நடுப் பக்கத்தில் இடம் பெற்றிருந்த ஜோனனின் ''ஏ'' ஜோக்ஸ் அனைத்தும் ஏ ஒன் ஜோக்ஸாக அமைந்திருந்தன.
பம்பாய் வி. இசக்கிமுத்து

● கடுகு பதில்கள் பகுதியில் கல்கத்தா மிக்கி ஏற்கனவே கல்கி இதழில் வெளியான நகைச் சுவைத் துணுக்குகளைச் சற்று மாற்றி எழுதியிருப்பதைச் சுட்டிக் காட்டியிருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விஷயம். இன்று ஏராள துணுக்கு எழுத்தாளர்கள் பெயர் பத்திரிகையில் வரவேண்டும் என்ற நோக்கத்தோடு இதே போல் நடந்து கொள்கின்றனர். வேதனையாக இருக்கிறது.
ஈரோடு — 10 மேஜர் தாசன்

● பூபேஷ் குப்தா பற்றிய பேட்டியில் நெகிழ்ந்தேன். ஏழைதாழைகளின் புகலிடம் அரசியல் என்று பேசும் இந்த நேரத்தில் அத்துறைக்கு சத்தியக் கனை சேர்த்தவர் குப்தா. அழுத்தமான பொதுவுடைமை வாதியாயினும் காந்திய எளிமைக் கோலம் பூண்டார். அவரது ஆங்கில நடை பலரை வியக்கச் செய்திருக்கிறது. கட்சி மாற்சரியங்களுக்கு அப்பாற்பட்டுப் போற்றப்பட்டார். ஒழுக்க சீலராய்த் திகழ்ந்தார். மற்றைய அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக அமைகிறார்.
நாகர்கோயில் டி.என். மகாலிங்கம்

● ''ஆண்டகை ஆற்றிய அற்புதங்கள்'' படித்தேன். ஐந்து மினார்களின் வரலாற்றுச் சுருக்கம் என்றோ நடந்ததை இன்று காண்பது போல் இருந்தது.
பாப்பாகோவில் கோ. அ. கமால்தீன்

● 'ஆண்டகை ஆற்றிய அற்புதங்கள்' என்ற தலைப்பில் நாகை ஜி. அகமது அவர்கள் எழுதிய கட்டுரையின் பிற்பகுதி முழுவதும், நான் எழுதி வெளியான ''நாகூர் ஆண்டவர் பெருமை'' என்ற நூலிலிருந்து எடுத்தெழுதப் பட்டுள்ளது. என் நூலின் கருத்துக்களை மட்டும் எடுத்துக் கொண்டிருந்தால் அவ்வளவாகக் கவலைப்பட்டிருக்க மாட்டேன். ஆனால் அவரோ என் நூற் பகுதிகளை ஒரு சொல் கூட மாற்றாமல் அப்படியே பார்த்தெழுதியிருப்பது வருத்தத்தைத் தருகிறது.
புதுச்சேரி மு. சாயபு மரைக்காயர்

10

'ஹல்லோ' என்று சொல்லக்கூடத் தோன்றாமல் ஹரி மாயாவைச் சிலவிநாடிகள் பார்த்தான். மாயாவின் முகத்தில் ஒரு நிச்சயமில்லாத புன்னகை தெரிந்தது. அவன் உடம்பை முழுவதும் பார்வை சந்தேகத்துடன் வலம் வந்தது. பிறகு அருகில் வந்து,

''ஹல்லோ ஹரி!'' என்றாள்.

வெய்யிலுக்கான லேசான கையில்லாத மாக்ஸி அணிந்திருந்தாள். ஆர்வத்தைத் தூண்டுகிற அளவுக்கு உள்ளாடையின் வெளிக்கோடுகள் தெரிந்தன. தலையை ஷாம்பூ செய்துகொண்டு வந்திருக்கவேண்டும். கேசம் ஷாம்பூ விளம்பரம் மாதிரி மிதந்தது. அவனுக்குப் பழக்கப்பட்ட அவளுடைய 'மூன் ட்ராப்ஸ்' வாசனை அவனை நோக்கித் தவழ்ந்தது.

எதற்கு இப்படித் தாக்குகிறாள்? பரிகாசம் செய்கிறாளா? இப்ப என்ன பண்ணுவே பார்க்கலாம் என்கிறாளா?

....'ஏய் மாயா, நான் மோட்டார் சைக்கிள் ஓட்டறச்சே நீ 'மூன் ட்ராப்ஸ்'ஸையும் போட்டுண்டு என் கழுத்தையும் இப்படி நெருக்கினயானா நாம்ப மூணுக்குத்தான் போவோம்....'

'சேர்ந்துதானே போவோம்? பரவாயில்லை.'

'யாருக்குத் தெரியும்? எனக்கு மட்டும் விசா கிடைச்சா?'

'நானும் கூட வருவேன். கவலைப் படாதே.'

....அவள்தான் இப்பொழுது எட்ட நிற்கிறாள். கழுத்தைப் பிடித்துக் கொஞ்சியதையெல்லாம் சினிமா பாணியில் டயலாக்பேசியதையெல்லாம் மறந்து வேற்று மனுஷியாய் நிற்கிறாள்.


மாயா தயக்கத்துடன் சிரித்தான்.

''என்ன ஹரி பார்க்கறே?''

அவன் சட்டென்று லகுவாகச் சிரித்தான். ''உன் 'மூன் ட்ராப்ஸ்'எங்கேயோ என்னை அழைச்சுண்டு போயிடுத்து.''

அவள் கன்னங்களில் சிவப்பேறுவதை அவன் கவனித்தான்





இனிமேல் இவள் இந்த மாதிரிப் பேச்சை ரசிக்க மாட்டாள்...

''எப்படி இருக்கே ஹரி?''

''ஃபைன். வெரி ஃபைன். தலையிலேர்ந்து இடுப்பு வரை என்ன கேள்வி வேணு கேளு. டக் டக்னு பதில் சொல்வேன்.''

ஒரே ஒரு விநாடி இருவருடைய பார்வையும் சந்தித்துக் கொண்டன.

அவள் தன் பார்வையைச் சரேலென்று மற்ற கட்டில்களுக்கு நகர்த்தினாள்.

சாவதானமாகத் திரும்பி மெல்லக் கேட்டாள்.

''டாக்டர் என்ன சொன்னார் ஹரி?''

''ரொம்ப உற்சாகமாக இருக்கார். கண்டிப்பா ஸ்ட்ரெச்சர்ல என்னை வீட்டுக்கு அனுப்ப மாட்டாராம்.''

''நடக்க முடியும்னாரா?''

அவள் கண்களிலும் வார்த்தைகளிலும் தெரிந்த அவசரத்தைப் பார்த்து அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. கூடவே லேசாகக் கோபம் வந்தது. இவள் நமக்குத் தைரியம் சொல்ல வந்தாளா, தன் பலவீனத்துக்குப் பலம் சேர்த்துக் கொள்ள வந்தாளா?

''மாயா? நீ எதுக்கு வீணா இதைப் பத்தியெல்லாம் யோசனை பண்ணறே?''

அவள் அடிபட்டவள் மாதிரி பார்த்தாள்.

''நான் யோசனைபண்ணாம எப்படி இருப்பேன் ஹரி?''

''யோசனை பண்ண வேண்டியவன் நான்தான். நீயில்லே.''

அவளுடைய கண்களில் நீர் தெரிவதைக் கண்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''நீ இப்படிப் படுத்துண்டிருக்கறது எனக்கு எவ்வளவு வேதனையாயிருக்குன்னு உனக்குப் புரியாது ஹரி.''

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஓ இவளும் ஒரு இக்கட்டான மனச் சங்கடத்தில் இருக்கிறாள்!

''கொஞ்ச நாளைக்கு இருக்கும். அப்புறம் சரியாப் போயிடும். நல்ல வேளை மாயா, நமக்குக் கல்யாணம் ஆகல்லே. ஆகியிருந்தா குற்ற உணர்விலேயே நான் செத்துப் போயிருப்பேன்.''

என்ன வார்த்தை சொன்னாலும் தப்பாகிப் போகுமோ என்று பயந்தவள் மாதிரி அவள் தயங்குவதைப் பார்க்க அவனுக்கு என்னவோ போல் இருந்தது.

அந்த நேரத்து உதயங்கள்

வாஸந்தி

''மாயா லுக். என் நிலைமை எனக்குத் தெரியும். எந்த விதமான அசட்டுக் கற்பனையும் எனக்கு இருக்கும்னு நினைக்காதே. நீ எதுக்காகவும் வருத்தப்பட வேண்டியதில்லே. உன் எந்த முடிவும் இனிமே என்னைப் பாதிக்காது.''

அவள் பதில் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவள் ஒரு பெரிய போராட்டத்தில் இருக்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

''மாயா' யூ டோன்ட் ஹாவ் டு ஃபீல் ஸாரி ஆர் கில்டி....!''

அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

''எனக்கு ஒண்ணும் புரியல்லே ஹரி.''

அவனுடைய கையாலாகத்தனமும், அதிர்ந்து போன பார்வையும் அவளுள் குபீரென்று ஒரு ஆத்திரத்தைக் கிளப்பிற்று. அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''நீ அன்னிக்கு எங்கிட்டச் சொன்னது கரெக்ட். எனக்கு அநேகமாக இடுப்புக்குக் கீழே சுவாதீனமே இருக்காது. எனக்காக இன்னொருத்தர் லைஃபை வீணாக்கணும்னு நான் எதிர்பார்க்க மாட்டேன் மாயா!''

மாயா கைக்குட்டையால் விழியோரங்களை நாசூக்காகத் துடைத்துக் கொண்டாள். மூக்கை லேசாக உறிஞ்சிக் கொண்டாள்.

இவள் எதற்கு வந்திருக்கிறாள் என்று கேள்வி இன்னும் மெல்லக் குடைந்து கொண்டிருந்தது.

''உனக்கு இப்படி ஆனதிலேந்து மனசு ரொம்பக் கலங்கிப் போயிருக்கு ஹரி. அதனாலே—''

''அதனாலே?''

''அதனாலே அப்பா என்னைக் கொஞ்ச நாளைக்கு மெட்ராஸுக்குப் போயிட்டு வரச் சொல்றார்.''

அதாவது அவனை மறக்கும் வழி பார் என்கிறார். அங்கேயே வேறு ஏதாவது நல்ல வரன் கிடைத்தால் பிடிக்கலாம். இப்போதைக்கு அவள் இந்த இடத்திலிருந்து கிளம்ப வேண்டும். பழசை மறக்க. மனிதாபிமான உணர்வு என்பதெல்லாம் இரண்டாம் பட்சம்....

அவன் கண்களை மூடிக் கொண்டு சில விநாடிகள் மௌனமாக இருந்தான். இதைச் சொல்லத்தான் இவள் வந்தாளா?

''புலி அடிக்குமுன் கிலி அடிக்கும்'' என்பது பழமொழி. அடிக்கும் புலியை அரவணைக்கும் வாய்ப்பையும் தருகிறது மைசூர் மிருககாட்சி சாலை! மூன்று குட்டிப்புலிகள். அவற்றைப் பராமரிக்க ஓர் ஆள். அவன் அந்தப் புலிக்குட்டிகளில் ஒன்றை தன் கைகளில் தூக்கி அரவணைத்துக்கொண்டான். தருண எனது கைகளும் துடித்தன. பயங்கலந்த தைரியத்தோடு புலிக்குட்டியைத் தூக்கி அரவணைத்துக் கொண்டேன். தைரியம் கூறிப் பக்கத்தில் அவனும் நின்றிருந்தான். புலி பூனை ஆகுமா? சில உறுமல்கள். பயந்து கையை உதறிவிட்டேன். பிறகு அவைகளை எனது கேமராவுக்குள் அடைத்துக் கொண்டேன்.

- உதுமான்



''போயிட்டு வாயேன். எங்கிட்ட பர்மிஷன் கேக்க வந்தியா?''

குரல் மெல்ல உயர்வதை லட்சியம் செய்யாமல் அவன் பேசினான்.

அவள் வார்த்தைகளைத் தேடிக் கொண்டு நின்றாள்.

அவனுக்குச் சுரீரென்று கோபம் வந்தது.

''போயேன்! என்னுடைய அனுமதி எதுக்கு? கட்டின பெண்டாட்டின்னு வேறவழியில்லே. இருக்கேனு செத்தேனுன்னு பார்க்கணும். உனக்கு அந்த மாதிரி நிர்ப்பந்தம் இல்லையே. நல்ல வேளை!''

அவள் அவசரமாகக் குறுக்கிட்டாள். அவன் மேலே என்ன பேசிவிடுவானோ என்று பயந்த மாதிரி. தோளை லேசாகத் தொட்டாள். ''ஹரி ப்ளீஸ். ரிலாக்ஸ். நீ என்னைப் புரிஞ்சுக்கல்லே.''

அவன் சிரிப்பில் எகத்தாளம் தொனித்தது.

''இப்பத்தான் நன்னாப் புரியறது. அதான் அதிர்ச்சியா யிருக்கு. இரண்டு வருஷப் பழக்கத்துக்கு உங்கிட்டேந்து நா இன்னும் நெருக்கத்தை எதிர்பார்த்தேன். உன்னை இனிமேல் நான் கல்யாணம் பண்ணிக்க முடியுமா முடியாதாங்கறது இப்பப் பிரச்னையில்லே. உன் சிநேகிதம் கிடைக்குமாங்கறது தான் பிரச்னை. எந்தச் சந்தர்ப்பத்திலேயும் மனுஷனுக்கு மனுஷன் பிரியம் காட்ட முடியுமாங்கறது பிரச்னை....''

''ஹரி....!''

''உன்னுடைய சிநேகம் எனக்கு வேண்டாம். அழுத்தமில்லாத உறவு எனக்கு வேண்டாம். ப்ளீஸ் கோ அவே....''

''ஹரி, நான் மெட்ராஸுக்குப் போகணும்கிறது அப்பாவுடைய எண்ணம். என்னுதில்லே. என்னைத் தப்பா நினைக்காதே...''

''ப்ளீஸ்! கோ அவே!''

அறை முழுதும்' அவனைத் திரும்பிப் பார்க்கிற மாதிரி இருந்தது. நர்ஸ் ஊர்மிளா பதற்றத்துடன் ஓடி வந்தாள்.

அவன் சட்டென்று சுய நினைவுக்கு வந்தான். என்ன ஆகிவிட்டது நமக்கு?

''என்ன மிஸ்டர் ஹரி?''

நாம் ஏன் இப்படிக் கத்தினோம் என்று புரியாமலே அவன் கத்தினான்.

''என்னைத் தனியாக விடுங்கள்! நர்ஸ் என்னைப் பார்க்க யாரையும் உள்ளே விடாதீர்கள். எனக்கு யாருடைய கருணையும் வேண்டாம்.''

''ரிலாக்ஸ் மிஸ்டர் ஹரி ரிலாக்ஸ்...''

''கோ டு ஹெல்! கோ அவே!''

மாயா சட்டென்று திரும்பி விருவிருவென்று வெளியேறினாள்.

''என்ன கலாட்டா இங்கே மிஸ்டர் ஹரி?''

''ப்ளீஸ்! என்னைத் தனியே விடுங்கள்!''

ஊர்மிளா பதிலே சொல்லாமல் உள்ளே சென்றாள். இன்னொரு நர்ஸை அழைத்து வந்து அவன் கத்தக் கத்த ஒரு இன்ஜெக்ஷனைக் குத்திவிட்டுப் போனாள்.

அவன் தலையை இருபுறமும் ஆட்டி, ''லீவ் மீ அலோன்! லீவ் மீ அலோன்!'' என்று கத்தினான்.

என்ன மனிதர்கள்! என்ன உலகம்! கத்திப் பேசக்கூட எனக்குச் சுதந்திரம் இல்லையா?

STANROSE



சுந்தர சூட்

ஆடவர் ஆடையின் சிறப்பு
அதிகரித்திடும் ஸ்டேன் ரோஸ்.

மென்மை கொஞ்சிடும்
சட்டை, மேனி விரும்பிடும்
மேல் சட்டை, மடிப்பு
மாறாத கால் சட்டை.

அத்தனையும் தயாரிக்கப்படுகின்றன ஸ்டேன்ரோஸ்
துணிகளில்.
அணிந்திட்டீர் அவற்றை...
அழகின் வாயிற்கு
தயாராகி விட்டீர்.

ஆடவர் பெண்டிருக்கான
அழகிய ஸ்டேன்ரோஸ்
ப்ராடிங்கள், சூட்டிங்குகள்,
ஷர்ட்டிங்குகள்,
சேலைகள் உடுப்புத் துணிகள்.

ஸ்டேன்ரோஸ்
துணிகள்

everest/81/SM/331-tm.

வேஷம் போட்டால்தான் இந்த உலகத்தில் இருக்க முடியுமா? நான் வேஷம் போட மாட்டேன்! வேஷதாரிகளை எனக்குப் பிடிக்காது. சுயநலக்காரர்களைப் பிடிக்காது. ஐ ஹேட் தெம். ஐ ஹேட்....

''மிஸ்டர் ஹரி கிலாக்ஸ்....!''

''ஓ ஷட் அப்!''

''என்ன கலாட்டா ஊர்மிளா?''

''ஒண்ணுமில்லே டாக்டர். இந்தப் பேஷண்ட் கொஞ்சம் இப்படித்தான் அடிக்கடி கத்துவார். ட்ருமேட்டிக் டிப்ரெஷன். அதோட சரியாத் தூங்கறதில்லே. காம்போஸ் மாத்திரையை விழுங்கிட்டுக் கொட்டக் கொட்ட முழிச்சிண்டிருக்கார்.''

''ஒரு ஷாட் கொடு!''

''குடுத்தேன் டாக்டர்!''

''குட். எனி காம்பிளிகேஷன்?''

''இல்லே டாக்டர்.''

''சருமத்தை வெல்லாம் குளோஸா செக் பண்ணு. ஏதாவது புண் வந்திருக்கப் போறது. அதனுலேகூட எரிச்சல்படலாம்.''

''எஸ் டாக்டர்.''

ஊர்மிளாவும் இன்னொருத்தியும் மறுபடியும் அவனைக் கண்ணாடி சாமான் மாதிரி தூக்கி ரதைவாகச் சற்றே நகர்த்தி முதுகையும் முட்டியையும் ஆராய்ந்து பவுடர் போட்டார்கள்.

''இப்பொழுது பேசாமல் தூங்குங்கள் மிஸ்டர் ஹரி. இப்படி ஆத்திரப்பட்டு அசைந்து பேசினுல் முதுகெலும்புக்கு மறுபடி அதிர்ச்சி ஏற்பட்டு வேறே ஏதாவும் கோளாறு வரும்.''

அவன் அதற்குப் பதில் சொல்ல நினைத்து, பிறகு சோம்பல்பட்டு வாயை மூடிக்கொண்டான்.

அங்கிருந்து போகும்போது ஊர்மிளா தோழியிடம் சொல்வது கேட்டது.

''சாந்திதான் சரி. இந்த மாதிரி பேஷண்டுக்கு. எனக்கெல்லாம் பொறுமை இல்லே.''

அவன் ஒரு அவமான உணர்வுடன் கண்களை மூடிக் கொண்டான். ஏன் இப்படி நாகரிகமே மறந்து போனேன்? மான அவமான உணர்வே இல்லாமல் அப்படி எப்படிக் கத்தினேன்? இதுவரை நிதானமிழந்து யாரையும், ஒரு பியூனைக்கூடப் பார்த்துக் கத்தியிருப்பதாக நினைவில் இல்லை. எது நம்மை அப்படிக் கத்த வைத்தது? சுய பச்சாதாபமா? ஏமாற்றமா? அல்லது இவர்கள் சொல்லும் 'ட்ருமா'வா?

'என்னைத் தப்பா நினைக்காதே ஹரி!'

அது வேறு ஒரு கவலை! தன் நிலையைப் பற்றி, தன் எதிர்காலத்தைப்பற்றி, தன் இமேஜைப் பற்றித்தான் அவனுக்குக்கவலை. அத்தனை நெருங்கிப் பழகிய ஒருத்தனுக்கு அதுவும் ஆயுளுக்கு நம் ஜோடி அவன் என்று நிச்சய எண்ணத்துடன் பழகிய ஒருத்தனுக்கு இப்படிப்பட்ட விபத்து. வாழ்க்கையின் திசையையே மாற்றக் கூடிய விபத்து ஏற்பட்டிருக்கிறதென்றல் — மனசு துடித்துப் போகாதா? உருகிப் போகாதா? கேவலம் அவளும் ஒரு ஜீவன்கிற மனிதாபிமான உணர்வு, கருணை ஏற்படாதா? கலங்கிப் போயிருக்கிருளாம்! போயிருந்தால் இங்கு வருவதுதானே? இந்த ட்ருமாவுக்கும் டிப்ரெஷனுக்கும் மாற்றுக இங்கு மாலை வேளைகளில் ஆறுதல் தருவதுதானே? அவனுக்குத்தான் இப்பொழுது மாறுதல் வேண்டும். எத்தனை வேடிக்கை!

'இது என் அப்பாவுடைய எண்ணம் ஹரி!'

தூ! எத்தனை கேடுகெட்ட பிறவிகள்! தன்னுடைய பலவீனத்தை மறைக்கச் சப்பைக் கட்டுகள் தேடுகிருள்.

'அவன் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டான். இத்தனை கோபம் நமக்கு ஏன் ஏற்படுகிறது? என்று நினைப்பேற்பட்டது. மாயா பாதுகாப்பாக வளர்ந்தவள். தம்முடைய விபத்து அவளுக்கும் மிகப் பெரிய அதிர்ச்சியாக இருக்க வேண்டும். உண்மையில் அவளுக்கு நம்மேல் பிரியமில்லாமலில்லை. இல்லாவிட்டால் இப்பொழுது வேலை மெனக்கெட்டு வந்திருக்க மாட்டாள். கண்ணில் நீருடன் 'நீ என்னைப் புரிஞ்சுக்கல்லே' என்றிருக்க மாட்டாள். நான்தான் என் எதிர்பார்ப்புகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். மாயாதான் வந்து ஆறுதலாகப் பேசவேண்டும் என்று நமக்கு ஏன் பிடிவாதம்?

திடீரென்று அவனுக்குச் சாந்தியின் ஞாபகம் வந்தது. அவளைவிட இதமாகப் புன்னகைப்பவர்கள் யார் இருப்பார்கள் என்று தோன்றிற்று. நாள் முழுவதும் இங்கு அவள் ட்யூட்டி பார்த்தால் எத்தனை நன்றாயிருக்கும் என்று எண்ணியபடி அவன் உறங்கிப் போனுன். (தொடரும்)

டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையில் ஒரு பெண்மணி விளம்பரம் கொடுத்திருந்தார்: ''நான், கே. எம். குல்தீப் மல்ஹோத்ராசாமினி, ஐ. ஏ. எஸ். மேஜர் பி.எஸ். சாமினியின் மகள். என் பெயரை திருமதி குல்தீப் மல்ஹோத்ரா மாத்தூர் (திரு ஜகன் மாத்தூர் ஐ.ஏ.எஸ். இன் மனைவி) என்று மாற்றிக் கொண்டிருக்கிறேன்.'' 34 நாட்கள் கழித்து மற்றொரு விளம்பரம்: ''நான், ஜகன் மாத்தூர். ஐ.ஏ.எஸ். குல்தீப் மல்ஹோத்ரா சாமினி என்பவர் என்னைத் திருமணம் செய்து கொண்டதாக அறிவிப்பு கொடுத்திருந்தார். விளம்பரத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன்! இது முற்றிலும் தவறான செய்தி. அந்தப் பெண்மணியை நான் திருமணம் செய்து கொள்ளவில்லை.''

மீண்டும் அந்தப்பெண்மணி மற்றொரு விளம்பரம் கொடுத்திருந்தார்: ''நான், குமாரி குல்தீப் சாமினி ஐ.ஏ.எஸ். திரு பி.எஸ். சாமினியின் மகள். என் பெயரை குமாரி குல்தீப் மல்ஹோத்ரா சாமினி என்று மாற்றிக்கொண்டு விட்டேன்.'' ஆதாரம்: டெக்கான் ஹெரால்ட்

தகவல்: கல்யாணமூர்த்தி




"காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி
என் குடும்பத்துக்கு
...திட்டமிட்ட பரிபூரண உணவு."
"பல வேளைகள் சாப்பிடத் தவறி விடும் என் கணவருக்கு"
"சாப்பிடும்போது சண்டித்தனம் செய்யும் என் மகனுக்கு"
"நோயுடன் தேறிவரும் என் தாயாருக்கு"
காம்ப்ளான்® ஒன்றுதான்
எவருக்கும் தேவைப்படும்
23 மூலாதார ஊட்டச் சத்துக்களால்
முழுமை பெற்றது.
"அசதியினால் சரிவர சாப்பிட முடியாத எனக்கு"
காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விகிதாசாரக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்போஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.
கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக—சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.
Glaxo
Complan
திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®
லின்டாஸ்-GLC. 10-3015 TM

புதிய வாசல்கள்

போட்டிக்கதை-1

முத்து. தங்க. ஐயப்பன்



வெளியே சடசடவென்று தொடங்கிய மழை, கொஞ்ச நேரத்தில் பெரிய மழையாய் பிடித்துக் கொண்டது. சாரல் உள்ளே தெறித்தது. எழுந்து ஜன்னல் கதவுகளை ஒவ்வொன்றாய்ச் சாத்தினேன். வாசல் பக்க ஜன்னலைச் சாத்தும்போது முன் வராந்தாவில் யாரோ மழைக்கு ஒதுங்கி நின்றது நிழலாடியது.

முன் விளக்கைப் போட்டு வாசல் கதவைத் திறந்ததும் அப்படியே விக்கித்துவிட்டேன். மீனு! அவளும் என்னைப் பார்த்ததில் அதிர்ந்தது தெளிவாய்த் தெரிந்தது.

சமாளித்துக் கொண்டு, ''வா, மீனு! வாசல்லே ஏன் நிக்கறே? உள்ளே வா!'' என்றேன்.

கொஞ்சம் தயங்கி, ''திடீர்னு மழை பிடிச்சுக்கிட்டது. இது உங்க வீடுன்னு தெரியாது....'' என்று மெல்லக் கூறிக்கொண்டே உள்ளே வந்தாள். 'உங்க வீடு!' மனம் வலித்தது.

''உக்காரு மீனு!'' என்று சோபாவைக் காட்டினேன். உட்கார்ந்தாள். மின் விசிறியைச் சுழல விட்டேன். என் வீட்டுக்குள்ளேயே என் முன்னாள் மனைவியை உபசரிப்பது எனக்கு விசித்திரமாகப் பட்டது. வேதனையாகவும் இருந்தது. டர்க்கி டவலை எடுத்து நீட்டினேன்.

''தல்லா நனைஞ்சுட்டே போலிருக்கே... துவட்டிக்கோ... வேறே புடவை கொண்டு வர்றேன்.''

''இல்லே...வேணாம்...'' அவள் மறுத்துக் கொண்டிருக்கும்போதே உள்ளே வந்து பீரோவைத் திறந்தேன். கீழ்த் தட்டில் சேலைகள் அடுக்கியிருந்தன. பார்க்கும் போதே கண் கனத்தது. மீனுவின் சேலைகள். அவளுக்குப் பிடித்த வயலெட் பூக்கள் போட்ட க்ரே கலர் பாலியெஸ்டர் சேலையை எடுத்தேன். அதிலேயே அதற்குப் பொருத்தமான சோளியும் இருந்தது.

''அந்த ரூம்லே போய் டிரஸ் மாத்திக்க மீனு.''

''வேணாங்க. ஃபேன் காத்திலே சேலை ஈரம் சீக்கிரம் காய்ஞ்சிடும்...''

''பரவாயில்லே'' என்று கூறிய நான் சிறிது தயங்கி, ''ப்ளீஸ்!'' என்றேன்.

மீனு சட்டென்று என்னைப் பார்த்தாள். மெல்லிய வியப்பு அவள் பார்வையில் தெரிந்தது. புடவையை வாங்கிக்கொண்டு உள் அறையை நோக்கி நடந்தாள்.

அவள் நடக்க நடக்க நீண்ட கருங்குழல் இப்படியும் அப்படியும் ஆடியது என்னைச் சாட்டையால் அடிப்பது போலிருந்தது. இறுக்கமான, கட்டான அந்த முதுகும், சிறு இடுப்பும், அசைவுகளும் என்னை ஏழையாக்கின. வேண்டாம். இப்படிப் பார்க்கக் கூடாது. இந்த மீனு வேறு எவளோ ஒருத்தி. இன்னொருவன் மனைவி... இப்படிப் பார்க்கக் கூடாது. அவளுக்கு நான் செய்த கொடுமைகள் போதாதா?

சோர்வுடன் சோபாவில் விழுந்தேன். இரண்டு கைகளையும் உயர்த்தித் தலைக்கு முட்டுக் கொடுத்துச் சோபாவில் சாய்ந்தேன். மேலே மின் விசிறி சுழன்று கொண்டிருந்தது. என் நினைவில் பழைய நிகழ்ச்சிகள் சுழன்றன.

மீனு என்ற மீனுகுமாரியைப் பெண் பார்த்தபோது அந்த இளமையும், அழகும் அந்தக் குடும்பத்தின் படிப்பும், பண்புமே என்னை வசீகரித்தன. நான்கு அண்ணன்களுக்குப்பின்னே பிறந்த ஒரே பெண். செல்லம் அதிகம். எம்.ஏ. படித்திருந்தாள். மாமனார் ஆடிட்டர். மாமியாரும் பி.ஏ.

பேச்சு வார்த்தை நடந்து நிச்சயதார்த்தமெல்லாம் முடியும்வரை எல்லாமே நன்றாகத்தான் இருந்தது. அதன் பிறகு யார் என்ன சொல்லிக் கொடுத்தார்களோ என் அம்மாவுக்கு வரதட்சிணைப் பேய் பிடித்துக் கொண்டது. ஹூம்... அம்மாவைச் சொல்லி என்ன பயன்? அசிஸ்டெண்ட் இன்ஜினீயராய் இருந்த எனக்கே அறிவுக் கோளாறு ஆகிவிட்டதே!

அம்மா இளம் வயதிலேயே விதவையாகி, நாலு வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்த்து மாவரைத்து யார் யாரையோ கெஞ்சிக் காலைப் பிடித்து என்னை என்ஜினியராக்கியவள்.

காலமெல்லாம் வறுமையிலும், சிறுமையிலும் அடிபட்டு, நசுங்கிப் போயிருந்த அம்மாவுக்குப் படிப்பும், நாகரிகமுமாய் அவர்கள் மரியாதை காட்டியபோது அவளின் அடிமனத்தில் எங்கோ பதுங்கியிருந்த தாழ்வு மனப்பான்மை பொத்துக் கொண்டு கிளம்பி விட்டது. யார் யாரோ கூனிகளும், சகுனிகளும் போட்ட தூபம் வேறு அவளைத் தூண்டிவிட அவள் வரதட்சிணைப் பேய்க்கு முருங்கையாகி விட்டாள்.

நிச்சயதார்த்தத்தின்போது பேசி ஒப்புக்கொண்ட தொகைக்கு மேலே ஐயாயிரம் தந்துவிட வேண்டும் என்று அம்மா கண்டிப்புடன் பேச ஆரம்பித்தபோதே மாமனார் நிதானித்தார். இருந்தாலும் பிள்ளைகளின் தூண்டுதலினால் உடனே அதைத் தூக்கிக் கொடுத்து விட்டார். அதுதான் தப்பாகி விட்டது.


ஏதோ ஒரு மௌனமான குரூரமான போருக்கு அம்மா ஆயத்தமாகிவிட்டாள். அவ்வப்போது எனக்கும் உபதேசிக்க ஆரம்பித்துவிட்டாள். திருமணமான முதல் நான்கைந்து மாதங்களுக்கு அம்மாவின் பேச்சு எனக்கு வில்லியாகத் தெரிந்தது. ஆனால் அம்மாவின் வில்லித்தனத்தை மீனு உடனுக்குடன் கண்டித்து வாதாடியபோது நான் தடம் புரண்டேன். படுக்கை மயக்கங்களை உதறுவதாக நினைத்துக் கொண்டு, எனக்காக வாழ்க்கைப் பாலைவனத்தைத் தனியாகக் கடந்து வந்த அம்மாவின் பக்கம் சேர்ந்து கொண்டேன். மீனுவின் சுய சிந்தனையும், சுதந்திரமான வாதங்களும் என்னுடைய 'ஆண்பிள்ளைத்தனத்துக்கு' விடுக்கப்பட்ட சவாலாக உள்ளுக்குள் ரோஷப்பட்டுக்கொண்டு, தர்க்க ரீதியாக அவளை மடக்க முடியாமல் கோழைத்தனமாக வரதட்சணைப் போர்வையைப்போர்த்திக்கொண்டேன்.

ஒரு தடவை மீனு, அம்மாவை எதிர்த்து வாதாடிக் கொண்டிருக்கும்போது பளீரென்று அவளை அறைந்து விட்டேன். அது தான் முதல் தடவை. அவள் விக்கித்து நின்று விட்டாள். அதையே ஒரு வெற்றியாக எடுத்துக் கொண்டு அடிக்கடி அவளை அடித்து இம்சிக்க ஆரம்பித்தேன். அம்மாவுக்கு அதில் ஒரு திருப்தி இருப்பது தெரிந்ததும் எனக்கும் அதில் ஒரு மிருக சுகம் தெரிந்தது. மீனுவுடைய 'அகம்பாவத்தை' ஒடுக்க வேண்டும் என்பதற்காகவே அவளை அடிப்பதும், இரண்டாயிரம், மூவாயிரம் வாங்கி வா என்று அவளைப் பிறந்த வீட்டுக்குத் துரத்துவதுமாக இருந்தேன்.

ஓ...! இப்போது நினைக்கும்போதே என் அங்கமெல்லாம் கூசுகிறது.

அம்மா கான்சர் வந்து இறந்த பிறகுகூட இந்தக் கொடுமையைத் தொடர்ந்தேனே!





அந்தக் கடைசி நிகழ்ச்சி நன்றாக நினைவிருக்கிறது. குடிகாரனை விடக் கேவலமாக அநாகரிகமாக நான் நடந்து கொண்ட அந்த நிகழ்ச்சியை மறக்க முடியுமா?

வாயும் வயிறுமாக இருந்த மீனு என்னிடம் அடிபட்டுப் பணம் வாங்குவதற்காகப் பிறந்த வீட்டுக்குப் போயிருந்தாள். வழக்கமாய் ஒன்றும் பேசாமல் பணம் கொடுத்துவிடும் மாமனார், இந்தத் தடவை கூடாக எனக்குக் கடிதம் போட்டிருந்தார். 'நடந்தவற்றை மன்னித்து விடத் தயாராக இருப்பதாகவும் தன் மகளை மனிதனாகவும், கணவனாகவும் இருந்து நடத்திச் சுயசம்பாத்தியத்தில் வாழக் கற்றுக்கொள்ளும்படியும்' எனக்கு அறிவுரை கூறியிருந்தார்.

உடனே பஸ் ஏறி அங்கே சென்றேன். நான் சென்றபோது என் மாமனார், மாமியார், பம்பாயிலிருந்து வந்திருந்த இன்ஜினியர் மைத்துனர், கடைசி மைத்துனர் எல்லோருமே உட்கார்ந்து மீனுவுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவே கண் கலங்கி உட்கார்ந்திருந்த மீனுவைக் கண்டதும் எனக்கு எரிச்சலாக வந்தது. எல்லோரும் என்னைக் குற்றவாளியாகப் பார்த்த பார்வை வேறு எனக்குக் கொதிப்பூட்டியது.

கடிதத்தை மாமனார் முன்னே விசிறியடித்துக் கோபமாகக் கத்தினேன். இது வரை கொடுத்த பணத்தையும் நகையையும் தூக்கி எறியப் போவதாகக் கூறினேன். கட்டிய புடவையோடு மீனுவை என்னுடன் உடனே கிளம்பி வரும்படி கூறினேன். அப்போது அந்த பம்பாய் மைத்துனர், ''பழைய படி பணம் கேட்டு மீனுவை அடிக்க மாட்டீங்கன்னு என்ன நிச்சயம்?'' என்று கேட்டார்.

''பத்திரத்திலே ஸ்டாம்பு ஒட்டி கையெழுத்துப் போட்டுத் தரணுமோ?'' –நான்.

''பணம் வேணும்னு நேரா வந்து அப்பாகிட்டே கேக்க வேண்டியதுதானே? பெண்டாட்டியைப் பயன்படுத்திக் கேக்கறது உங்களுக்கே வெஷமாத் தெரியலையா?'' – கடைசி மைத்துனன்.

''இட்ஸ் லைக் மேல் ப்ராஸ்டிட்யூஷன்!''– பம்பாய் மைத்துனர்.

''மிஸ்டர்... வார்த்தையை அளந்து பேசுங்க. மரியாதை கெட்டுப் போயிடும்!'' –நான்.

''அண்ணா சொல்றதிலே என்ன தப்பு? தாலிதானே உங்களை மாதிரி லோ கால்ட் ஆம்பளைங்களுக்குத் துருப்புச் சீட்டு...ஹும்! நீங்க கட்டின தாலியைச் சுமக்கிறதினாலதானே உங்க கால்லே விழுந்து நாங்க உங்களுக்குப் பணம் தரவேண்டியிருக்கு... இதைத் தூக்கி எறிஞ்சிட்டா?''

அவ்வளவுதான். எகிறிப் பாய்ந்து பூட்ஸ் காலால் அவளை மாறி மாறி மிதித்தேன். எல்லோரும் விக்கித்து நிற்கும்போதே வெளியேறி ஊருக்கு வந்து விட்டேன்.

அதன் பிறகு நிகழ்ச்சிகள் வேகமாக நடந்து விட்டன. மீனுவுக்கு அபார்ஷன் ஆகிவிட்டதாய் அந்த ஊர்க்காரர் ஒருவர் என்னிடம் சொன்னார். மீனு பதிவுத் தபாலில் தாலியைப் பூச்சுற்றி எனக்கு அனுப்பி, அதனுடன் நிதானமாகவும், அறிவு பூர்வமாகவும், உருக்கமாகவும் எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள். கடிதத்தின் இறுதியில் சட்ட பூர்வமான விவாகரத்துதான் இருவருக்குமே நல்லது என்று கூறித் தான் அந்த முடிவுக்கு வந்து விட்டதையும் தெரிவித்தாள்.

விவாகரத்து முடிந்த சூட்டோடு அவள் திருமணப் பத்திரிகையையும் எனக்கு அனுப்பி விட்டாள். அவசியம் வந்து ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியிருந்தாள்.

திருமணத்துக்கு எந்த முகத்தோடு போவது? அன்றிலிருந்து இன்றுவரை மீனுவை இழந்ததற்காக என் மனமே என்னைச் சித்திரவதை செய்து வருகிறது.

பாழாய்ப்போன வறட்டு ரோஷம்தானே என் வாழ்க்கையையே பாழாக்கிவிட்டது.

மீனு குடையை நன்றாகத் துவட்டித் தழையப் பின்னி இயல்பாக நடந்து வந்து என் எதிரில் அமர்ந்தாள்.

''மீனு! உன்னை இங்கே சந்திப்பேன்னே நினைக்கல்லே...''

''நானும்தான்... சூப்பர் மார்க்கெட்டுக்கு வந்தேன். மழை பிடிச்சுக்கிட்டது. ... தற்செயலா ஒதுங்கினேன்.... ஆமா... நீங்க எப்ப இந்த ஊருக்கு வந்தீங்க?'' மீனு இயல்பாகப் பேசினாள்.

''இரண்டு மாசத்துக்கு முன்னே செங்கல்பட்டிலிருந்து டிரான்ஸ்ஃபர் ஆகி வந்தேன். நீ எங்கே இந்தப் பக்கம்...?''

''என் ஹஸ்பண்ட் இங்கேதான் சிட்பண்ட் நடத்தறார். அவருக்கு உதவியா நானும் சிட்பண்ட் வேலை யெல்லாம் கவனிச்சுக்கிறேன்...''

கொஞ்ச நேர மௌனத்துக்குப் பின் கேட்டேன், ''நல்லா இருக்கியா மீனு?''

மீனு மெல்ல முறுவலித்தாள். ''சந்தோஷமா இருக்கேன்!''

''மீனு... தப்பா நினைக்காதே... உன் கணவருக்கு ரெண்டு கையும் இல்லேன்னு கேள்விப்பட்டேன்...''

நீதிபதி: அறுவாள் எடுத்து இந்த ஆள் தன் மனைவியைக் கொன்றதைக் கண்ணாலே பார்த்திருக்கீங்க... ஆனா நீங்க ஏன் அதைத் தடுக்க முயற்சி செய்யவில்லை?

சாட்சி: தடுத்திருப்பேனுங்க... கொலைக்கான ஒரே ''ஐ விட்னெஸ்'' இல்லாமே போயிடக்கூடாதேன்னுதான் அப்படி செய்யலை! - ஸ்ரீராம்





மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
matt finish
ஐடெக்ஸ்
38 ஆண்டுகளாக
'உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்'
அரவிந்த் லேபரடரீஸ் சென்னை 600033.
Imageads-AL-1304 Tam

''ஆமாம்... யாரோட குழந்தையையோ எலெக்டிரிக் ரயிலிலிருந்து காப்பாத்தறதுக்காகத் தன் கையைப் பலியாக்கிக் கொண்டார். அது தெரிஞ்சுதான் அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். நான் நினைச்ச மாதிரியே கல்யாணத்துக்கப்புறமும் அவர் மனுஷனாகவே இருக்கார்....''

எனக்குச் சுருக்கென்றது. ஆனால் வலிக்கவில்லை.

''மீனு... உனக்குக் குழந்தைகள் ஏதாவது...?''

''ஒரு பையன். அவனுக்கு ஃபேரக்ஸ் வாங்கத்தான் இப்படி வந்தேன். பக்கத்துத் தெருவில்தான் எங்க வீடு.. ஒரு நாள் எங்க வீட்டுக்கு வாங்களேன்!''

மீனுவின் நேர்கொண்ட பார்வையை என்னால் சந்திக்க முடியவில்லை.

''வர்றேன் மீனு... அப்புறம்... நாம டைவர்ஸ் பண்ணிக்கிட்ட பிறகு நகைகளையும் பணத்தையும் நானும் அனுப்பி வைக்கல்லே. நீங்களும் ஒருத்தரும் அதைக் கேக்கலே...''

''அதுக்கென்ன இப்போ?''

''அதையெல்லாம் அப்பப்போ ஒவ்வொண்ணு எடுத்துப் பார்த்துக்கறேன். எந்த நகைக்காக நான் எப்படி யெல்லாம் மிருகமா நடந்துக்கிட்டேன்னு அடிக்கடி நினைச்சுப் பார்த்துக்கிடுவேன். என்னைக் குத்திக் காட்டறதுக்காகவே அதெல்லாம் என்கிட்டயே இருக்கட்டும்...''

''......''

''மீனு... இப்பச் சொல்றது தப்புத்தான். இருந்தாலும் மனசு தாங்கலே. நான் இருக்கற வரைக்கும் நீ கொஞ்சம் பொறுத்திருக்கக் கூடாதா?''

மீனு என்னை இரக்கத்தோடு பார்த்தாள். தயங்காமல் பேசினாள். ''நீங்க பேசின பேச்சும், அடிச்ச அடியும் என் சம்பந்தப்பட்டதா மட்டும் இருந்தா ஆயுசுக்கும் பொறுத்திருப்பேன்.... ஆனா நீங்க அடிச்சது என்னை இல்லே. என் பெற்றோர்களை... என் சகோதரர்களை...! ஏன்? பொதுவாகவே பெண் வர்க்கத்தை. ஒண்ணு ரெண்டா... ஊருக்கு ஊர் இந்தக் கொடுமை நடந்துக்கிட்டுத்தான் இருக்கு. நான் எத்தனையோ தடவை சாகணும்னு நினைச்சதுண்டு... ஆனா உங்களை மாதிரி கணவனுக்கு உத்தமியா இருந்து செத்துப் போறதை விட உத்தமமான ஒருத்தருக்கு மனைவியா இரண்டாவது தடவை வாழறது தப்பில்லேன்னு நானு யோசிச்சு முடிவெடுத்துக்கிட்டேன்...''

''ஹூம்... நஷ்டம் எனக்குத்தான்கிறதைக் காலம் கடந்து உணர்றேன்... மீனு! நீ நம்பினாலும் நம்பா விட்டாலும் நீயும், உன் குடும்பமும் நல்லா இருக்கணும்னு அப்பப்பக் கடவுளை நான் வேண்டிக்கறேன்!''

''தேங்க்யூ மிஸ்டர் ஜெகன்... நான் உங்களை அப்படிக் கூப்பிடலாமில்லே?''

''ஷ்யூர்! உனக்கு நல்ல கணவனா இருக்கற வாய்ப்பை இழந்துட்டாலும் நல்ல நண்பனா இருக்கிற வாய்ப்பை ஆரோக்கியமாப் பயன்படுத்திக்குவேன்... நீ என்னை ஜெகன்னு கூப்பிடறதே நீ எனக்குத் தர்ற பெரிய கௌரவம் தெரியுமா?''

கோபாலகிருஷ்ண அடிகா, தர்மவீர் பாரதி, அக்தர் - உல் - இமாம் போன்ற கவிஞர்கள் பல்வேறு மொழிகளில் நெருக்கடி நிலைமையின் போது எதிர்த்து எழுதிய சுமார் 2000 பாடல்களை மொழிபெயர்த்துப் புத்தகமாக பாஸ்டன் சர்வகலாசாலையைச்சேர்ந்த புரொபசர் ஜான் ஆலிவர் பெர்ரி இந்திய - அமெரிக்க நிறுவனமொன்றின் சார்பில் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில் வெளியிடப் போகிறார்.

- டெக்கான் ஹெரால்டிலிருந்து

- அ. குமார்

''சில பலவீனங்கள்னாலே அசம்பாவிதம் நடந்துட்டதுன்னாலும், உங்களோட பல உயர்ந்த குணங்களை என்னால மறக்க முடியாது... இந்த நாலு வருஷத்துலே உங்ககிட்டே சில மாறுதல்களைப் பார்க்கிறேன்.... நீங்க தனியா இருக்கீங்கன்னு நினைக்கிறேன்.''

நான் தலையைக் குனிந்து கொண்டேன்.

''நீங்க ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?''

''நீ பார்த்து எந்தப் பெண்ணைக் கட்டிக்கச் சொன்னாலும் தயார்...''

''எனக்காக ஒண்ணும் நீங்க கட்டிக்க வேணாம்.''

''நோ நோ... என்னைப் பத்தி உனக்கும், உன்னைப் பத்தி எனக்கும் நல்லாத் தெரியும் இல்லையா? என் மனசுக்கு ஒரு அமைதி இனி இருக்கும்னா அது உன் மூலமாத்தான் வர வேணும்... நிச்சயமா! நான் செய்த கொடுமைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமா நீ சொல்ற பெண்ணோட நல்லா வாழ்ந்து காட்டறேன்...''

''எங்க பக்கத்து வீட்டிலே ஒரு நல்ல பெண்... ரதி மாதிரி இருப்பா... போன வருஷம் எக்ஸிபிஷன் போனப்போ திடீர்னு பவர் கட் ஆகி அந்தக் குழப்பத்திலே சில காலிப் பசங்க இவளைத் தூக்கிகிட்டுப் போய் ஸ்பாயில் பண்ணிட்டாங்க.. ரொம்பவும் ஏழைக் குடும்பம்... அவ ரெண்டு மூணு தடவை தற்கொலை முயற்சி பண்ணினா. நான்தான் அவளைச் சமாதானப்படுத்தி மனசைத் தேத்தி வச்சிருக்கேன்... நீங்க அவளைக் கல்யாணம் பண்ணணும்னு கட்டாயம் இல்லே... எங்க பெண் வர்க்கத்துக்கு உங்களை மாதிரி ஆம்பிளைங்க இனியாவது ஒரு நல்ல....''

''மீனு... கண்டிப்பா அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்...''

''அப்படின்னா இந்த வருஷத்துக்குள்ளே கல்யாணம் நடந்தாகணும்...''


''ஏன்?''

''பயப்படாதீங்க... பாரதி நூற்றாண்டு வருதே... பெண்கள் விடுதலைக்காகப் பாடுபட்ட அந்தப் புதுயுகக் கவிஞனோட நூற்றாண்டிலே உங்க புது வாழ்க்கையும் தொடங்கட்டுமே...!''

மீனுவுடன் சேர்ந்து நானும் சிரித்தேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு நிம்மதியான சுகமான, ஆரோக்கியமான சிரிப்பு.

இதோ இன்க்ரிமின் தலைமுறை

பெரிதாக மட்டுமல்ல சிறப்பாக வளர!





வளரும் பருவத்தில் மிகமிகப் பெரிய வேறுபாட்டை வழங்குவது இன்க்ரிமின். உண்மையென்னவெனில் இதர டானிக்குகளை விட ஒரு படி மேலானது இன்க்ரிமின். ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தேவையான வைட்டமின்களோடு கூட இன்க்ரிமின் டானிக்கில் லைஸின் உள்ளது. லைஸின் பசியைத் தூண்டுகிறது. ஒரு குழந்தை நன்கு வளர, நன்கு சாப்பிட வேண்டும் என்பது எந்தத் தாய்க்குத்தான் தெரியாது?

சிறப்பாக உண்பதை சீரிய வளர்ச்சியாக்குவது இன்க்ரிமின்.

Lederle தயாரிப்பு

*அமெரிக்கன் ஸையனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு ட்ரேடு மார்க்

1 வயது
வரையிலான
குழந்தைகளுக்கு ஸிரப்
1 வயதுக்குட்பட்ட
குழந்தைகளுக்கு ட்ராப்ஸ்

இன்க்ரிமின் டானிக்

சிறப்பாக உண்பதை சீரிய வளர்ச்சியாக்குகிறது.

Sista's-INC-973/80 Tam. G

ஒரு மூளை வேலை செய்கிறது

டாக்டர். எல். சுந்தரம்

உலகிலேயே மிகப்பெரியபொருட்காட்சி சாலைகளில் ஒன்றான அந்தப் பெரிய கட்டிடத்தில் கியூரேட்டரின் அறைக்கு வெளியே ரிசப்ஷன் ஹாலில் நுழைந்தார் வில்லியம்ஸ். ''இந்த மியூஸியத்துக்கு மின்சாரம் தெர்மோ நியூக்ளியர் முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது'' என்ற அறிவிப்பு அவர் கவனத்தைக் கவர்ந்தது. சூரிய வெப்பம் மற்றும் லேஸர் தெர்மோ நியூக்ளியர் முறைகளை மின் உற்பத்திக்குப் பயன்படுத்தாத அந்தப் பழைய நூற்றாண்டுகள் அவர் மனக் கண் முன் ஓடின. பெட்ரோலியம், நிலக்கரி இவற்றின் அடிப்படையில் அமைந்திருந்த அந்தத் தொன்மையான நாகரிகத்தைப் பற்றி அவர் நிறையப் படித்திருக்கிறார்.

தலைக்கு மேலே பச்சை விளக்கு கண் சிமிட்டியதைக் கவனித்த அவர் உள்ளே நுழைய வசதியாகக் கியூரேட்டரின் அறைக் கதவு தானே திறந்து கொண்டது.

''வாருங்கள். 'ஹாட் நியூஸ்' நிருபர் தானே?'' கியூரேட்டர் அவரை வரவேற்று, ''என்ன வேண்டும்? சொல்லுங்கள் மிஸ்டர் வில்லியம்ஸ்'' என்றார்.

''இந்தப் பொருட்காட்சி சாலையிலிருந்து நேற்றிரவு விலை மதிக்க முடியாத பொருள் ஒன்று காணாமல் போய்விட்டதாமே?'' கேள்வியைக் கேட்டவாறே வில்லியம்ஸ் தம் பாக்கெட்டின் ஒரு மூலையில் கிடந்த செய்தி அனுப்பும் மினி டிரான்ஸ்மிட்டரை ''ஆன்'' செய்துகொண்டார்.

''ஆமாம்! பெட்ரோலிய சீசா ஒன்று திருட்டுப் போய்விட்டது. உங்களுக்குத் தான் தெரியுமே ஒரிஜினல் பெட்ரோல் உலகத்திலேயே இப்போது இரண்டு மியூஸியங்களில்தான் இருக்கிறது என்று!?''

''ஆமாம். மனிதனின் பழைய நாகரிகத்தைப் பறைசாற்றும் சில அடையாளங்களில் பெட்ரோலும் ஒன்றுதான். சரி, காணாமல் போன காட்சிப் பொருளைப் பற்றி மேலும் சில விவரங்கள் தர முடியுமா?''

''தாராளமாக. இந்தப் பெட்ரோலிய சீசா இந்த மியூஸியம் ஏற்பட்ட நாளிலிருந்து அதாவது கி. பி. இரண்டாயிரத்து எண்பது முதல் இன்றுவரை சுமார் நானூறு ஆண்டுகளாகப் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு, ஏராளமான மக்கள் பார்த்து வியக்கும்படியான அதிசயப் பொருளாக இருந்து வந்திருக்கிறது.''

''காணாமற் போன குப்பியின் படம் ஏதாவது....''

''இதோ தருகிறேன்.'' கியூரேட்டர் ஒரு பட்டனை அழுத்தவும் உடனே பெட்ரோலிய சீசாவின் புகைப் படம் ஒன்று அவர்கள் மேஜை மேல் இருந்த 'ட்ரே'யில் விழுந்தது. கியூரேட்டர் தொடர்ந்தார்:

''சரி, இதை யார் களவாடியிருக்கலாம்? அவர்களின் நோக்கம்?''

''ஒரு ஊகமாகச் சொன்னால் வேறு கிரகங்களில் உள்ள விஞ்ஞானிகளின் வேலையாக இருக்கலாம். ஏனென்றால் பெட்ரோலியத்தில் மட்டுமே வளரக் கூடிய சில விஷக் கிருமிகளைப் பெருக்கிப் போர்க் களத்தில் பயன்படுத்தும் முறைகளைப் பற்றி அங்கெல்லாம் ஆராய்ச்சிகள் நடப்பதாகக் கேள்வி.''

''இது நமது பூமிக்கே மிக முக்கியமான, அபாயகரமான இழப்பல்லவா?'' வில்லியம்ஸ் படபடத்தார்.


''அவசரப்படுகிறீர்களே? சீசாவைத் திருடியவர்கள் ஏமாந்து போயிருப்பார்கள்.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''காணாமற் போனது ட்யூப்ளிகேட் குப்பி என்கிறேன். ஒரிஜினல் பத்திரமாக வேறிடத்தில் இருக்கிறது. போலித் திரவம் அடங்கிய அதே மாதிரி சீசாவை அங்கு வைத்துவிட்டு அசல் சீசாவை அப்புறப்படுத்தி விட்டோம்.''

''அப்படியா? அபாரமான உங்கள் மூளையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.''

''நீங்கள் அந்த மூளையைப் பார்க்க வேண்டுமா?'' என்று கியூரேட்டர் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுதே அவரது தலையின் கவச மூடி 'டப்'பென்று திறந்து கொண்டது. அந்த இயந்திர மனிதனின் எலக்ட்ரானிக் மூளையின் எண்ணற்ற பாகங்களின் சிக்கலான தொகுப்பைக் கண்ட வில்லியம்ஸ் அதைப் படைத்த மனித இனத்தின் மூளை தம் மண்டையிலும் இருப்பதை நினைத்துப் பெருமை பொங்கத் தலையைத் தடவிக் கொண்டார்.




சவால்
தண்ணீர் தண்ணீர்
நெற்றிக்கண்
இரயில் பயணங்களில்
கர்ஜனை



திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன!

—JONES



''பெண்ணுக்கு வலது கண் மாறுகண் போயிருக்கே!''


''அதனாலென்ன: வரதட்சிணை ஐம்பதாயிரம் தருகிறோமே!''

''அப்படியா இரண்டு கண்ணுமே மாறு கண்ணாக உள்ள வேறுபெண் உங்களுக்கு உண்டோ?''



''பி. ஏ. படித்த பையனை 'போஸ்ட் கிராஜுவேட்' என்று சொல்லி ஏமாற்றிட்டீங்களே!''

''பையன் 'போஸ்டல் டியூஷன்' படித்து பி. ஏ. பாஸ் செய்தவன், நான் சொன்னது சரிதானே!''



''பையன் சென்சார் போர்டு ஆபீசில் வேலை பார்க்கிறவன் என்று நான் முன்பே உங்களிடம் சொல்லியிருக்கிறேனில்லையா!''


படித்துறையில் கூட்டம் அதிகமாய் இல்லே. இருந்த நாலு பேர்களிலும் தெரிந்த முகமாய் எதுவும் இல்லே. மகாலிங்கத்துக்குக் கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது. எதிர் வண்ணார் துறையில் யாரோ இரண்டு பேர் இமிறிக் கொண்டிருந்த காளே மாட்டைப் பிடித்து நிறுத்தி வைக்கோலால் தேய்த்துக் கொண்டிருந்தார்கள். சற்றுத் தள்ளியிருந்த பெண்கள் படித்துறையில் இரண்டொரு தாவணி போட்ட பெண்கள் சிரித்துப் பேசிக் கொண்டே கல்லில் துணியை மோதிக் கொண்டிருந்தார்கள்.

மகாலிங்கம் ஒவ்வொரு படியாய் எண்ணி எண்ணிக் காலே வைத்து இறங்கினுர். தண்ணீர் மட்டம் கொஞ்சம் அதிகமாயிருந்தது. கொஞ்சம் கலங்கியிருந்தது. அவர் மனசைப் போல.

காலேத் தண்ணீரில் வைத்துவிட்டு, சட்டென்று பின்னுக்கு இழுத்துக் கொண்டார். தண்மை சில்லென்று மூளையைத் தாக்கிற்று. குனிந்து உட்கார்ந்து கைகளால் தண்ணீரைக் கொஞ்சம் அளேந்துவிட்டுப் பிறபாடு காலிரண்டையும் உள்ளே விட்டார்.

"அம்மா..." என்று முனகினுர். கஷ்டம் கவலே என்ருல் மகாலிங்கத்துக்கு அம்மா ஞாபகம்தான் வரும். அம்மா ஆகாயத்தில் அந்தரத்தில் நின்றுஅருள் பாலிக்கிறவகையில் கைகாட்டுகிற மாதிரி தோன்றும். இப்போதும் அப்படித்தான் தோன்றிற்று. ஆனுல் மனத்தின் பாரம் மட்டும் இறங்க மாட்டேன் என்று அடம் பிடித்தது. சட்டென்று மூக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு முறை முக்குளித்தார்.

இன்னெரு தடவை முக்குளித்தார். படித்துறையில் யாரோ 'தப தப'வென்று இறங்கி வருகிற சப்தம் கேட்டது. தண்ணீரை இப்படியும் அப்படியும் கைகளால் அளேகிற சப்தம் கேட்டது.



மகாலிங்கத்துக்குக் கொஞ்சம் அருவையாய் இருந்தது. மூச்சு முட்டியதில் அதற்கு மேல் உள்ளுக்குள் இருக்க முடியவில்லே. சடக்கென்று வெளியே தலேயை நீட்டி மணலில் கால்களே ஊன்றிக் கொண்டார்.

"அடேடேடே... மாலியா! எப்ப வந்தாப்ல மெட்ராஸ்லேர்ந்து?" மகாலிங்கம் திடுக்கிட்டுத் திரும்பினுர்.

"வெத்து மணியா? வாங்கோ வாங்கோ" என்ருர், முகத்தில் அகலமாகச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு.

பிச்சமணிக்கு ஊரின் வடக்குக் கோடியில் இரண்டு ஏக்கராவுக்குக் கொடிக்கால் தோட்டம் இருந்தது. நாலு பையன்கள், அத்தனேயும் ஊர் விடலேகளாய் இருந்தன. அவர் கீழ் கைகட்டிச் சேவகம் புரிந்து கொண்டிருந்தன. பிச்சமணி வாயில் ஆலங் குச்சியோடு போய் நிற்கும் நேரத்திலிருந்தே பையன்கள் பறந்து பறந்து வேலே செய்வார்கள். வெற்றிலேயைக் கூடையில் அடுக்கி அன்றுடம் மதராஸுக்கும், மதுரைக்குமாய் அனுப்புவார்கள். கொடிக்கால் ஓஹோ என்று கூடை கூடையாய் வாரிக் கொட்ட ஆரம்பித்த நேரத்தில் 'பிச்சமணி'க்கு முன்னுல் 'வெற்றிலே' சேர்ந்து கொண்டது. ஒரு பரிச்சயத்துக்காக அப்படி யாரோ கூப்பிட ஆரம்பித்து பின்னுல் சோம்பேறித்தனத்தில் 'வெற்றிலே பிச்சமணி', 'வெத்து மணி' ஆகிவிட்டது.

"நேத்துப் பொழுது சாய்ஞ்சப்பறம் வந்தேன்" என்ருர் மகாலிங்கம், 'வெத்து மணி' என்று கூப்பிட்டதற்கு வருத்தப்பட்டுக் கொண்டு.

"கடோசி வண்டியா?"

"ஆமா."

"அதான் தெரியாமப் போச்சு. நான் சாயரட்சை மன்னார்குடிக்குப் போய்ட்டேன். வெத்திலே வெவகாரம்தான்."

"சௌக்யம்தானே?"

"ஜோரா இருக்கேன்... ஈஸ்வரன் புண்ணியத்திலே... க்ஷேமம் விசாரிக்கிற முகத்தைப் பாத்தா க்ஷேமமா இருக்கிற மாதிரி தோணலியே..."

மகாலிங்கத்துக்கு திக்கென்றது. எமகாதகன். அதுதான் வியாபாரத்திலும்



படிக் கொழிக்க முடிகிறது. எதிராளி முகத்தைப் படித்துப் பார்த்து அதற்கு ஏற்ற மாதிரி நைச்சியமாகவோ, அதட்டலாகவோ பேசிப் பேசி வியாபாரம் செய்து பழக்கம் தானே!

''என்ன விசேஷம்? திடீர்னு வந்திருக்காப்லே?''

பிச்சமணி படித்துறைக் கல்லில் ஈர வேட்டியை மோதிக் கொண்டே கேட்டார்.

''உங்க கிட்டச் சொல்றதுக்கு என்ன? கிருஷ்ணன் கோயில் தெரு வீட்டை வித்துக் காசாக்கிக்கிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்.''

''நெஜம்மாவா...?''

''ம்....'' என்று முனகினார் மகாலிங்கம்.

''பிதுரார்ஜிதச் சொத்து... உசிர் போனாலும் விக்க மாட்டேன்னு மூச்சுக்கு மூச்சு சொல்லிட்டிருந்ததெல்லாம்?''

''கெட்ட நேரம். பரமேஸ்வரனுக்குக் கான்ஸராம். ராஜ வைத்தியம் செய்தாகணும். அதுக்கு... அடையாறு ஆஸ்பத்திரில சேர்த்திருக்கு....''

பிச்சமணிக்கு வாயடைத்துப் போயிற்று. சின்ன வயசில் பரமேச்சுவும், மாலியும் போட்டி போட்டுக் கொண்டு இதே ஆற்றை அப்படியும் இப்படியுமாய் நீந்திக் கடந்தது நினைவில் படமாய் ஓடிற்று. ராம, லக்ஷ்மணன் என்று அவர்கள் காதுபடச் சொல்லிச் சொல்லி பரமேச்சுவுக்கு ஜுரம் வந்த நாளில் ஊர் திருஷ்டி என்று ஊரைக் கரித்துக் கொட்டிக் கொண்டே வண்டிகட்டிக்கொண்டு அவர்கள் அம்மா பக்கத்து டவுனுக்குப் பதறிப் பதறிப் போனது ஞாபகத்துக்கு வந்தது. பின்னாலேயே மாமி, கூட வந்த ஊர்ப் பையன்களைப் பார்த்து 'தூ' வென்று துப்பிவிட்டு 'போங்கடா... எல்லாரும்.... உங்க கூட டூ' என்று சொல்லிவிட்டு விம்மிக் கொண்டே ஓடினது... அந்தப் பரமேச்சுவுக்கா?

''அண்ணாவுக்கா இப்படி? பொய் சொல்லலியே மாலி..?''

''உங்களுக்கே நம்பிக்கைப்படலேயே..''

''ப்ச்ச்ச்... எப்போ சேர்த்தது?''

''மிந்தாநாள்தான். டாக்டர் பாட்டுக்கு கன்னாப் பின்னான்னு திட்டறான். இவ்வளவு நாள் தூங்கினியான்னு கேக்கறான். எப்படித் தெரியும் இது கான்ஸர்னுட்டு? தொண்டை வலிக்கிறதுன்னான்.... சரி ஜலதோஷம் வரப்போறதுன்னு நெனைச்சோம்... புலி வந்திருக்கு...''

''சாப்பிடக் கொள்ள முடியறதோ?''

''இல்லியே...அதான் வேதனை. அண்ணா நாக்கை நல்லா வளர்த்துட்டான். குஜிலியா சாப்டாகணும் அவனுக்கு. இப்ப ட்யூப் வழியா நேரா நரம்புலேயே ஆகாரத்தைக் கொண்டு போய்ச் சேர்த்தாறது!''

''அழாதேயுங்காணும்... அடடா... என்னது? எல்லாம் மேலே இருக்கிறவன் செய்கிற லீலை.''

''அட போங்க வைத்துமணி... ஆண்டவனாவது, புடலங்காயாவது... மூணு பொண்ணுங்களைப் பெத்து வச்சிருக்கேன். குதிர், குதிராய் வளர்ந்து போய் நிக்கறாங்க.. எங்க போறது பணத்துக்கு... இந்தச் சமயத்தில இவனுக்கு வேற இப்படி? அவன் படற கஷ்டம் பார்க்கச் சகிக்கலே...''

குலுங்கக் குலுங்க அழும் மகாலிங்கத்தைப் பார்க்கப் பிச்சமணிக்குக் கஷ்டமாய் இருந்தது.

''வீட்டை என்ன விலைக்கு வந்தா தள்ளிடலாம்னு உத்தேசம்?''

''இன்னி நெலைமைக்கு' நாப்பது ரூபாய்க்கு வெளியப் போனாப் போறும்னு இருக்கு... எப்படியாவது பரமேச்சு பொழைக்கணும்.''

''சரி... முடிஞ்சது வேலைன்னு நெனைச்சுக்கும். ராத்திரி வண்டிக்கு நீர் மெட்ராஸுக்குப் போயிடலாம்... அப்புறம் ஒரு சின்ன விஷயம்''

''சொல்லுங்க வைத்து... பிச்சமணி...''

''மெட்ராஸ்ல நீர் இருக்கிற இடத்துக்குப் பக்கத்திலே ஏதாவது ஈஸ்வரன் கோயில் இருக்கா?''

''ம்...'' என்று அசுவாரஸ்யமாய்ப் பதில் அளித்தார் மகாலிங்கம்.


''ஒரு மண்டலம் விடாமப் பிரதட்சணம் பண்ணும்.... அவன் கிட்டக்க ஒண்ணும் கேட்க வேண்டாம். என்ன தரணும்னு அவனுக்கே தெரியும். செஞ்சுடுவான்... எங்கப்பன் ஈசுவரனை நல்லாப் புரிஞ்சுண்டிருக்கிறவன் நான்... சொல்றதைச் செய்யணும் செய்வீரா?''

''செய்யறேன். கண்டிப்பா செய்யறேன். எப்படியோ நல்ல வழி பொறந்தாச் சரி.''

''அப்பா வந்தாச்சு...'' என்று கூவிக் கொண்டே ஊரி உள்ளே ஓடினான்.

''விசேஷம் ஏதாவது உண்டா?'' — கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் பிச்சமணி.

தாலி கட்டவேண்டிய சமயத்தில் அதிகப்படியான வரதட்சணை கொடுத்தால்தான் தாலி கட்டுவேன் என்று மணமகன் அடம் பிடிக்க, ஆத்திரமடைந்த பெண்ணின் தகப்பனார் மணமகனையும் அவன் நண்பர்களையும் ஒருஅறையில் தள்ளி எட்டுமணி நேரம் சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் பூட்டிவிட்டார்! பின்னர், நடந்த குழப்பத்திற்காகவும், திருமணம்



செய்து கொள்ளாததற்காகவும் நஷ்டஈடாக 25,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, மணமகனையும் அவன் நண்பர்களையும் நிர்வாணமாக்கி ஊரைவிட்டே துரத்தியடித்தார். சமீபத்தில் ஜெய்பூரில் நடந்த சம்பவம் இது!

- மீஸ்டகி இதழிலிருந்து

அ. குமார்

"மாலி வந்திருந்தார் பத்து நா மின்னாடி. எங்கேன்னார். க்ஷேத்ராடனம் போயிருக்கார், ரெண்டு மாஸம் ஆறது... வந்துடுவார் இன்னும் பத்து நாள்லன்னேன். இன்னிக்குக் காலமே மறுபடியும் வந்துட்டார். வந்துட்டாரான்னு கேட்டார். வர்ற நேரம் தான்னேன்.... வந்தா நேரே வீட்டுக்கு வரச்சொல்லி இருக்கார்." என்றாள் அபயம் கை கால் கழுவத் தண்ணீர் மொண்டு கொண்டே.

"ஏதாவது சொன்னாரா? பரமேச்சுக்கு எப்படி இருக்காம்?

"ஒண்ணுமே சொல்லலே...நிக்கவேயில்லே. வந்தார், போயிட்டார்."

"சரி, நான் அப்படியே போய்ப் பார்த்துட்டு வந்துடறேன்" என்று சொல்லிவிட்டு வாசலில் இறங்கினார் பிச்சுமணி.

ஆற்றுக்குப் போகும் வழியில் மயானத்துக்குப் பாதை இடது பக்கம் பிரிந்த இடத்தில் வேப்ப மரத்து நிழலில் வளர்ந்திருந்த சுமை தாங்கி மேல் குப்புறப் படுத்திருந்த உருவம் பிச்சுமணி பார்வையில் விழுந்து அவர் புருவத்தை மேலேற வைத்தது. கண்டிப்பாய் அது மகாலிங்கம்தான்!

"மாலி!" கூப்பிட்டுவிட்டுத் தோளில் தட்டினார் பிச்சுமணி.

திடுமென விழித்து வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார் மகாலிங்கம். அகலமாய்க் கண்களை விரித்தார்.

"என்ன மாலி இந்த எடத்துல?"

"உம்மைச் செருப்பால அடிக்கணும்யா."

பிச்சுமணி அதிர்ந்து போனார்.

"என்ன மாலி என்ன ஆச்சு உமக்கு?"

மகாலிங்கம் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினார்.

"மன்னிச்சுடுங்க பிச்சுமணி... எனக்கிருந்த வேகத்தில் உளறிப்புட்டேன்."

"பரவாயில்லே. மனுஷன்னு கோபம் வர நேரத்தில் அப்படித்தான் மாறுவான்... முன்னேபின்னே யோசிக்க மாட்டான்.என்னை எதுக்காகச் செருப்பாலே அடிக்கணும்னீர்?"

"உங்க ஈசுவரன் என்னை ஏமாத்திட்டான் பிச்சுமணி. பரமேச்சு போய்ட்டான் பிச்சுமணி... ஒரேயடியாப் போயிட்டான். ஈஸ்வரனை ஒரு மண்டலம் சுத்தி வரச் சொன்னீங்களே... எல்லாம் சரியாப் போயிடும்னீங்களே... உங்க ஈசுவரன் என்கண்ணனைக் காப்பாத்தலையே பிச்சுமணி... காப்பாத்தலையே... எனக்கு அண்ணன் பொழச்சு வரது தானே முக்கியமா இருந்தது...."


"வீட்டை வித்து வாங்கிட்டுப் போனபணமெல்லாம் செலவாயிடுச்சா மாலி?" பிச்சுமணி பொறுமையாகக் கேட்டார்.

"காவாசிப் பணம் செலவாயிருக்கும்..." என்று செத்த குரலில் பதில் சொன்னார் மகாலிங்கம்.

"இப்பப் புரிஞ்சுதா?"

"எது பிச்சுமணி?"

"ரிஷிகேஷ்ல லக்ஷ்மண் ஜூலான்னு தொங்கு பாலம். திருவிழாக் கூட்டம் மாதிரி வழிய வழியக் கும்பல் போகும் வரும். பாலமே ஆடும். அறுந்து போய் விழுந்து



கர்ச்சிப் நீளம் 8 கெஜம்!

"நைஜீரியன் ரியல் மெட்ராஸ் ஹாண்ட் கர்ச்சிப்" என்ற ஒருவகை சேலை சேலத்தில் தயாரிக்கப்படுகிறது. இது 36 அங்குலம் அகலம், 8 கெஜம் நீளம் உள்ளது. தயாரிப்புச் செலவு ரூ. 200லிருந்து ரூ. 500 வரை ஆகிறது. ஆண்களும் நெய்கிறார்கள்; பெண்களும் நெய்கிறார்கள். நாளொன்றுக்கு ரூ. 20லிருந்து ரூ. 40 வரை இவர்களுக்குக் கூலியாகக் கிடைக்கிறது. நைஜீரியாவில் இந்தச் சேலை ரூ. 4000 வரை விலை போகிறது!

- மா. ரா. சிவ அரசி

ஆத்தோட போயிடுவோமோன்னு பயமா இருக்கும். விழ மாட்டோம்."


மகாலிங்கம் பிச்சுமணியை வெறித்துப் பார்த்தார்.

"அது மாதிரிதான் இதுவும்."

"புதிர் போடாதீங்க பிச்சுமணி. தலையைப் பிச்சுக்கிற மாதிரி இருக்கு."

"கான்ஸருக்கு ஏது வைத்தியம்? இருந்த எல்லாப் பணத்தையும் செலவழிச்சு, பத்தாமக் கடன் வாங்கி வைத்தியம் பண்ணியிருந்தா மாத்திரம் பரமேச்சு பொழைச்சிருப்பாரோ? அதுக்கு வைத்தியம் பார்க்கறதுங்கறது சும்மா ஒரு உளாக்காட்டிக்குத் தான். பரமேச்சு இன்னும் கொஞ்சம் ஜாஸ்தி அவதிப்பட்டிருப்பான். உன்னையும் கஷ்டப்படுத்திட்டுப் போயிருப்பான். இப்ப உமக்கும் விடுதலை... அவனுக்கும் விடுதலை. பொண்களைக் கரையேத்தற வழியைப் பாரும். ஒரு மண்டலம் அவனைச் சுத்தினதோட பலன் காணும் இது... மனசைத் துடைச்சுக்கும் வாரும் வீட்டுக்குப் போகலாம்.. கலகலன்னு சிரிச்சிட்டே காவிரி என்னமாய் ஜொலிக்கிறு பாரும். கங்கையிலே போய் முழுகிப் பார்த்தும் கூட முழுத் திருப்தி வரலேங்காணும் எனக்கு."

சொல்லிவிட்டு பிச்சுமணி காலை எட்டி எடுத்து வைத்தார். மகாலிங்கத்துக்கு ஏதோ புரிகிற மாதிரி இருந்தது. ஒன்றுமே புரியாத மாதிரியும் இருந்தது!



ஆண்டாண்டு காலம் உத்திரவாதம் உடையது! அணிவதற்கு தங்கத்தின் தரம் உடையது!
22 காரட்
ரூபா மேக்னட் கோல்டு கவரிங்
கதம்ப மாளிகை
36.பாண்டிபஜார், தி.நகர் - சென்னை - 600017
பரதநாட்டியம் செட் கிடைக்கும்



வியர்க்குரு, சரும எரிச்சல், கோடை நமைச்சல்
மற்றும் இதர சாதாரண சரும
நோய்களிலிருந்து நிவாரணம் பெற
உபயோகிப்பீர்
பெங்கால் கெமிகல்ஸ்
SULPHUR
ஸல்பர் ஸோப்
SULPHUR SOAP
நாள் முழுவதும் உங்களைப் புத்துணர்ச்சியுடன்
விளங்கச் செய்கிறது.
ASP/BC-1/81 TAM

இரண்டு தொடர்கதை, ஒரே முற்றும்

சாருப்ரபா சுந்தர்

ஜூம் அருண் — (நிகோடின் உதடுகள் நிறையப்பெண்களை நிர்வாணமாய்ப் பார்த்து விட்ட கண்கள். அமிதாப் உயரம். உடையில் வண்டி அழுக்கு.)

அவள் சிகரெட்டின் புகையைச் சாவகாசமாய் வெளியேற்றிவிட்டு அருணின் கைபற்றிக் குலுக்கினாள்.

கை மிருதுவாயிருந்தது. மார்பு தெரிந்ததைப் பற்றிக் கவலைப்பட்டதாய் முகம் சொல்லவில்லை. வாசனையாய் செண்ட் போட்டுக் கொண்டு ஜீன்ஸில் கிறிஸ்டி என்று பெயர் வைத்திருந்தாள். சிலுவை அணியாத கழுத்து.

பிராந்தி அல்லது விஸ்கி?

கேட்ட அருணிடம் 'இரண்டும்' என்று கண் சிமிட்டிச் சிரித்தாள்.

'அருண் உன் மீசையை எனக்குரொம்பவும் பிடிச்சிருக்கு. ஐ லவ் இட்!'

அருணின் உச்சந் தலையில் ஒரு கூடை ஐஸ் குளிர்ச்சி.

'தாங்க் யூ மை டியர்'.

டிடார் கொஞ்சலாய் அழைத்ததும் மன்னிப்புக் கேட்டுவிட்டு நடனமாய்ப் போய்விட்டான்.

• • •

ஜீரோ வாட் பல்ப் எரிந்து கொண்டிருந்தது. ஒரு பணக்காரத்தனமான காட்டேஜின் இரவுப் படுக்கை அறை. அருண் ப்ரியாவை அணைத்துக் கொண்டிருந்தான். அவள் அதிலிருந்து மீளத் திமிறினாள்.

'விடு. நான்தான் அலுத்துப் போய்விட்டேனே. போய் உன் புதுக் காதலி கிறிஸ்டியை அணைத்துக்கொள்.'

அருண் சத்தம் போட்டுச் சிரித்தான்.

'என் இனிய முட்டாள் அன்பே. இன்னுமா என்னைப் புரிந்து கொள்ளவில்லை? எத்தனை பெரிய திட்டத்தோடு அவளை நெருங்க ஆரம்பித்திருக்கிறேன். புரிந்தால் இப்படிப் பேசுவாயா?'

'என்னை நம்பச் சொல்கிறாயா? இருந்தாலும் சொல் உன் திட்டத்தை!'

'கிறிஸ்டி இருபது லட்சம் சொத்துக்கு ஒரே வாரிசு. கார்டியனாக ஒரேயொரு கிழ தாத்தா. அவளைக் கல்யாணம் செய்வித்ததும் கிழவன் பொறுப்பு காலாவதியாகி விடுகிறது. அவளை மணந்து கொண்டு தேன் நிலவு பயணத்தின்போது போலீஸ் அந்தக் கிழவன் மீது சந்தேகப்படுகிற மாதிரி கொன்றுவிடுவேன். அப்புறம் சொத்து அத்தனையும் நமக்குத்தான்!'

'கேட்பதற்கு அருமையாய் இருக்கிறது. ஆனால் ஒரு அன்னக்காவடியைக் கல்யாணம் செய்துக்க கிறிஸ்டி என்ன அத்தனை முட்டாளா?'

'அங்கேதான் என் புத்தி வேலை செய்கிறது நான் ஒரு பெரிய பணக்காரன் என்று ரீல் விட்டிருக்கிறேன்.'


'கல்யாணத்துக்கு அப்புறம் அவளைக் கொல்வதற்குப் பதில் சேர்ந்து வாழ நீ முடிவெடுத்து விட்டால்?'

'எனக்கு எச்சில் பழம் பிடிக்காது. கிறிஸ்டி இந்த ப்ரியாவுக்குக் கால் தூசு!'

'இத்தனை விவரம் உனக்கு எப்படித் தெரியும்?'

'ஆள் வைத்து அந்தக் கிழவனிடம் விசாரித்துத்





தெரிந்து கொண்டேன். எத்தனை நாள் தான் சின்னச் சின்ன ஏமாற்று வேலைகள் செய்து வாழ்வது? போர் அடித்து விட்டது. இந்தத் திட்டம் மாத்திரம் ஒழுங்காய் வெற்றி பெற்றுவிட்டால் போதும். வாழ்நாள் முழுக்கக் கவலையில்லை. இதற்கு உன் உதவியும் அதிகமாய்த் தேவை. செய்வாயா ப்ரியா?'

'நிச்சயமாய்.'

அவள் அவன் தோளில் சரிந்தாள்.

• • •

டிரைவ் இன்னில் கூட்டம் அதிகமில்லை.

'என்னை நிஜமாகவே காதலிக்கிறாயா அருண்?' — கிறிஸ்டி.

'இந்த வெயிட்டரின் வெள்ளைச் சீருடை சத்தியமாய்' — அருண்.

'என் பணத்துக்கு ஆசைப்பட்டு என்னை நீ காதலிக்கவில்லையே?'

'உன்னைவிட எனக்கு பாங்கில் பணம் அதிகமாக இருக்கிறது.'

'எனக்குக் கல்யாணம் செய்துகொண்டு குழந்தை பெத்துக்க ஆசை வந்திட்டது அருண். நல்ல கணவனாக நீ கிடைக்கப் பெற்றாய். கல்யாணத்துக்கு அப்புறம் என் சுதந்திரத்துக்குத் தடையாய் இருக்க மாட்டாயே?'

'நிச்சயம் மாட்டேன். உன் பேச்சுதான் எனக்கு வேத வாக்கு.'

'குட். நாளை மறுநாள் கல்யாணப் பெண்ணாகச் சந்திக்கிறேன்: வெகு சிக்கனமாய்க் கல்யாணத்தைச் செய்து கொள்வோம். ரிஜிஸ்டர் ஆபீஸில்....'

அருண் நிறையக் கனவுகளோடு தலையாட்டினான்.

• • •

அடுத்த இரண்டு நாள் கழித்து பேப்பரில் இப்படிச் செய்தி வந்தது.

'அருண்—கிறிஸ்டி என்கிற புது மணத் தம்பதியர் ஊட்டியில் கொலை. இது தொடர்பாக ப்ரியா-ஜான் என்கிற இருவர் கைது.'

என்ன வாசகரே, குழப்பமாயிருக்கிறதா? கீழ்வரும் உரையாடலைத் தாமதமாய் எழுதினதற்குத் தயவுசெய்து மன்னியுங்கள்.

'ஜான்! நம்ப வலையில் மீன் சிக்கிவிட்டது. எனக்கும் அந்தப் பணக்கார ஏமாளி அருணுக்கும் கல்யாணத்துக்கு நாள் குறித்தாயிற்று. அன்றே நாங்கள் ஊட்டி போகிறோம். நீயும் பின்தொடர்ந்து ஊட்டிக்கு வா. அருணின் பழைய காதலி ஒருத்தி இருக்கிறாள். பெயர் ப்ரியா. அவள் மீது போலீசின் பார்வை திரும்பும் விதத்தில் அருணைத் தீர்த்துக்கட்டிவிடு. கொஞ்ச நாளில் கேட்பதற்கு வேறு ஆளில்லாத அவன் சொத்து அத்தனையும் நமக்குத்தான்!'

கிறிஸ்டி சொன்னதைக் கேட்டு ஜான், ஹய்யா என்று குதித்தான்.

'ஜான் ஊருக்குத்தான் நீ என் தாத்தா. இப்போ வேஷத்தைக் கலைத்து ஜானாகிவிடு. முகத்தில் தாடி குத்துகிறது....'

படம் முழுவதும் ரொம்பப் புதுமையான (!)காட்சிகள். உதாரணத்துக்கு ஒன்று. வடிவுக்கரசி பக்கத்தில் மாயமாக மற்றொரு வடிவுக்கரசி தோன்றுகிறார். சம்பாஷணை இந்த ரீதியில் செல்கிறது.

''ஆ! யார் நீ?''

''என்னைத் தெரியவில்லையா?''

''இல்லையே!''

''நான்தான் உன் மனச்சாட்சி! ஹா ஹா!

''ஆ! அப்படியா! ஐயோ!''

(ஆச்சரியக் குறிகள் ஸ்டாக் குறைவதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.)

கதையைப் பற்றிப் பேசாதிருத்தல் உத்தமம். ஓரிரு ரீல்கள் தவிர படம் முழுவதும் சப்பாணி பாணி கிறுக்கனாக சுதாகர். தாவணியில் தோன்றும் சக்கலைக்கூட சகிக்கலாம். அரை டிராயரில் வலம் வரும் ஆறரையடி சுதாகரை....? கமலதா வடிவுக்கரசி, ஜெய் கணேஷ், அசோகன், ராஜாபகதூர் என்று நிறையப்பேர் திரையில் தோன்றி எதையும் நேராகப் பேசாமல் சகட்டுமேனிக்கு ''கடலிலே மூழ்கினா முத்துக் கிடைக்கும், ஆறு சாக்கடையிலே முழுகினா என்ன கிடைக்கும்?''என்ற பாணியில் தத்துவவசனங்களால் சம்பாஷிக்கிறார்கள். சுருளியின் மறைவினால் தடம் மாறிச் சப்பென்று முடியும் காமெடி டிராக். கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதைப் பார்க்க முடியாதவர்கள், இதில் சுதாகரைக் குணப்படுத்தும் யுக்தியைக் கண்டு மகிழலாம். தங்கள் பழைய மெட்டுக்களையே காப்பியடித்துக் காலம் தள்ளும் சங்கர் கணேஷின் ரீரிக்கார்டிங்கும் காதைப் பிளக்கிறது. கச்சா முச்சாவென்று எடிட்டிங்கும், காமராவும், விரசக் காட்சிகளில் மட்டும் கவனம் காட்டும் ஏ. ஜகந்நாதனின் டைரக்ஷனும் சோதிக்கின்றன:


பெண் மனம் பேசுகிறதாம்!


பேத்துகிறது என்று வைத்திருக்கலாம்.

—சிந்து — ஜீவா

பெண் மனம் பேசுகிறது!




தியாகு : வெள்ளை சேலையோட சமாதானம் பேச வந்த தாயை சிவப்புச் சேலையோட
சமாதிக்கனுப்பிச்சிட்டாங்க. பாவிங்க. நியாயம் கேட்க வந்த அந்த
தெய்வத்தை வாரி ஏத்தி கொன்னுட்டாங்க. நீதியும் நியாமும்
இல்லாத இந்த மண்ணிலே நியாயமே உருவான உன் தாயை
இந்த நெருப்பு மத்தியிலே தூங்க வச்சிட்டானுங்க
ரங்கன்: தேரோட போச்சு திருவிழா, தாயோட போச்சு சந்தோஷம்னு
சொல்லுவாங்க. இந்தக் கோயிலை நிர்மூலமாக்கின
பாவிங்க யாருன்னு சொல்லு
தாய்க்குப் பின்னே சோடை இல்லே. இதை நிரூபிச்சு காட்டுவேன்.
அதுவரை உறங்க மாட்டேன்! அவங்களையும்
உறங்க விட மாட்டேன்!!
பாலசுப்ரமணியன் & CO
சிவப்பு மல்லி
(A)
இராம.நாராயணன்
ராஜசேகர்
சங்கர் - கணேஷ்
வைரமுத்து / சிவாகேஷ்





○ நாகப்பூ

நாகர்கோவில் நாகராஜர் ஆலயம்

— எஸ். பத்மநாபன் —

உலகில் எத்தனையோ விலங்கினங்கள் வணங்கப்பட்டாலும் அவற்றுள் பாம்புதான் முதல் இடம் பெறுகின்றது. இவ்வுலகைக் கடலில் மூழ்காமல் தூக்கிச் சுமந்துகொண்டிருப்பது பாம்புகளே என்பது ஆப்பிரிக்க மக்களின் நம்பிக்கை. ஆயிரம் தலைகொண்ட ஆதிசேடன் என்ற பாம்புதான் இப்பூவுலகைத் தாங்கி வருவதாகப் பாரத நாட்டு மக்கள் நம்புகின்றனர்.

உலக நாடுகளின் வரலாற்றினை உற்று நோக்கினால் நாக வழிபாடு ஒரு காலத்தில் உலகமெல்லாம் பரவியிருந்தது என்றும், இன்றும் சில நாடுகளில் அவ்வழிபாடு உன்னதமானதோர் இடத்தைப் பெற்றுள்ளது என்றும் தெரிய வருகிறது. நாகரிகம் உச்சநிலையில் இருந்த எகிப்து, பாபிலோனியா, மெசபடோமியா, கிரேக்கம், ரோம், சிந்துவெளி ஆகிய இடங்களில் நாக வழிபாடு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது என அங்கு நடத்திய தொல்லியல் ஆய்வுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

பாரத நாட்டில் நாக வழிபாட்டுக்காக எழுப்பப்பட்ட கோயில்கள் பல இருந்தாலும் அவற்றுள் நாகத்தின் பெயரையே தனதாகக் கொண்ட நாகர் கோயிலில் அமைந்துள்ள நாகராஜன் ஆலயத்தைப் போன்று சிறப்பு மிக்கது வேறில்லை எனலாம். இவ்வுலகில் பாம்புக்காக எழுப்பப்பட்ட பேராலயம் இது ஒன்றுதான். இந்தியத் தாயின் பாத கமலமான குமரி முனையிலிருந்து 18 கி.மீ. வடக்கே உள்ள இந்நகரின் பெயர்க் காரணம் அதன் நடுவண் அமைந்துள்ள ஐந்து தலை நாகராஜனின் கோவில்தான். இக்கோவிலைப் பச்சைப் பசேலெனச் சூழ்ந்துள்ள வயல்களும் ஓங்கி வளர்ந்த தென்னை மரங்களும் பூத்துக் குலுங்கி நிற்கும் பூஞ்சோலைகளும் காண்போர் மனத்தைக் கவர்ந்திழுக்கின்றன. இவ்வாறு இயற்கை அன்னை கனிநடம் புரிந்து இங்கு வருகை தருகின்றவர்களுக்கு அமைதியூட்டுகிறாள்.

நாகராஜர் ஆலயத்தைச் சுற்றியுள்ள பூந்தோட்டங்கள் அழகு மிக்கவை. இத்தோட்டத்தில் உள்ள நாகப் பூவை நாகராஜரின் உருவக் குறியீடாகக் கருதுகின்றனர். கோவிலையும் அதனைச் சார்ந்த தோட்டங்களையும் நாகங்கள் காவல் புரிகின்றன என்பது ஐதிகம். கோவிலைச் சுற்றிலும் நாகப் பாம்புகள் நிறைந்திருந்தாலும் இவ்வட்டாரத்திலே யாரும் பாம்பு கடித்து இறந்ததாகச் சான்றுகள் எதுவும் இதுவரை கிடையாது. இச்சிறப்பினை அமெரிக்க நாடு பதிப்பித்த உலக மதங்களின் கலைக் களஞ்சியம் உறுதிப்படுத்துகின்றது. "கோவிலைச் சுற்றி ஒரு மைல் தூரத்துக்கு பாம்பு கடித்து இறந்ததாக இல்லை" (பாகம் 11, பக்கம் 418.) சில ஆண்டுகளுக்கு முன் இக்கோயில் குளத்தின் அருகே இரண்டு தலைப் பாம்பொன்று கிடைத்தது. இன்றும் அதன் உடல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இக்கோவிலில் நாகராஜருக்கும் அனந்த கிருஷ்ணனுக்கும் தனித் தனி சன்னதிகள் உள்ளன. கொடிமரம் அனந்தகிருஷ்ணன் சன்னதியில் உள்ளது. இவர்கள் இருவருக்குமிடையே அங்கியுடன் கூடிய சிவலிங்கம் உள்ளது. அந்த மண்டபத்திலுள்ள தூண்களிலும், சுவரிலும் பார்சுவநாதர், மகாவீரர், பத்மாவதி, முருகன், கிருஷ்ணன், நரசிம்மர், பத்மநாப சுவாமி இவர்களது உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. உட்பிராகாரத்தின் தென் மேற்கு மூலையில் விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அதைஅடுத்து உத்ஸவ மூர்த்தி தமது தேவியர்களுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். வெளிப் பிராகாரத்தில் நாகமணி பூதத்தானும் சாஸ்தாவும் உள்ளனர். கோவில்




○ உட்கோயிலின் வாயில்


வளாகத்துள் துர்க்கா தேவிக்குத் தனிக் கோவில் கட்டியுள்ளனர். அண்மையில் ஏற்பட்ட இந்த ஆலயமும், கோவில் முகப்பிலே காணப்படும் இரண்டு அரச மரங்களும் பெண்களால் மிகவும் புனிதமாகக் கருதப்படுகின்றன. பிள்ளைப் பேறு வேண்டுவோர் நாகச் சிலைகளால் சூழப்பட்ட இந்த மரங்களைச் சுற்றி வலம் வந்தால் பலனடைவர் என்பது நம்பிக்கை. துர்க்கா தேவி சங்கு சக்கரதாரியாய் சதுர்புஜத்துடன் விஷ்ணு அம்சமாகக் காட்சி தந்து அருளுகிறார். துர்க்கா தேவியை அடுத்து பாலமுருகன் கணபதியுடன் கோயில் கொண்டுள்ளார். நாகராஜர் ஆலயத்துக்கு வருகை தருகின்றவர்களை உள் வாசலின் இருபுறமும் அமைந்திருக்கும் ஐந்து தலை நாகங்களின் படமெடுத்த கோலத்தில் அமைந்த சிலைகள் கவராமல் இருக்க முடியாது.

இங்குள்ள கருவறையின் மேற்கூரை ஓலை வேயப்பட்டதாக இருப்பது வேறு எந்த ஆலயத்திலும் காணப்படாத தனிச் சிறப்பு. தான் விரும்புவது ஓலைக் கூரை தான் என்றும், அதை அங்கிருந்து மாற்றக் கூடாது என்றும் அன்று நாட்டை ஆண்ட மன்னரிடம் நாகராஜர் கனவிலே தோன்றிக் கூறினார் என்பர். அக்கூரையில் எப்போதுமே ஒரு பாம்பு காவல் புரிகிறது என்றும், வருடந்தோறும் கூரை வேயப்படும்போது ஒரு பாம்பு வெளியே செல்வது வழக்கம் என்றும் கூறப்படுகிறது.

நாகராஜர் அமர்ந்துள்ள இடம் எப்போதும் ஈரமாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கிருந்து எடுக்கப்படும் மண்ணே முக்கிய பிரசாதமாகும். இது ஆறு மாத காலம் கறுப்பு நிறமாகவும் எஞ்சிய நாட்களில் வெள்ளை நிறமாகவும் இருந்து வருகிறது. எவ்வளவோ காலமாக எடுத்தும் அந்த மண் குறையாமல் இருப்பது அதிசயிக்கத்தக்க பேருண்மையாகும்.



○ ஓலை வேயப்பட்ட கருவறை



○ ஆலயத்தின் தெற்கு வாயில்

நாகர்கோயில் நாகராஜர் ஆலயம் இன்று நான்கு மதக் கோட்பாடுகளையும் ஒன்று சேர்க்கும் சின்னமாகத் திகழ்கிறது. மூலவரான நாகராஜரைத் தவிர்த்து சிவன் அம்பிகையுடனும், திருமால் அனந்தனடியிலும் உள்ளனர். கோவில் தூண்களில் சமண சமயத் தீர்த்தங்கரர்களான பார்சுவநாதரும் மகா வீரரும் தவக் கோலத்தில் நின்றும், அமர்ந்தும் உள்ளனர். கோவிலின் தென் வாயில் புத்த விகாரத்தை நமக்கு நினைவூட்டுகின்றது. இவ்வாறு இக்கோவில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்ற நான்கு மதக் கோட்பாடுகளின் கூட்டு உருவமாக நமக்குக் காட்சியளிக்கின்றது.

இங்கு ஆண்டுதோறும் தை மாதம் பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதமும் ஆயில்ய நாளன்று விசேஷ பூஜைகள் நடைபெறும். இக்கோவிலில் தினமும், குறிப்பாக ஞாயிற்றுக் கிழமைகளில்

மக்கள் திரள் திரளாக வந்து வணங்கிச் செல்கின்றனர். ஞாயிற்றுக் கிழமை நாக ராஜனுக்குப் பால் வார்ப்பது புனிதமாகக் கருதப்படுகிறது. ஆவணி மாத ஞாயிற்றுக் கிழமைகளில் இவ்வாலயம் திருவிழாக் கோலம் பூண்டிருக்கும். அந்நாட்களில் சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் இங்கு வந்து, பால், உப்பு, நல்ல மிளகு, மரப் பொம்மைகள் இவைகளைக் காணிக்கை களாகக் கொடுத்து நாகராஜனைப் பய பக்தியுடன் வணங்கிச் செல்வர். பிற சமயத் தவர்களும் இங்கு காணிக்கை செலுத்துவ துண்டு. கேரளத்திலுள்ள ஒரு கிறித்துவ பக்தர் இக் கோவிலுக்களித்த நாகரின் மர உருவம் சிற்ப வேலைப்பாடு மிக்கது.

நாகராஜனை வணங்குவோர் நோய் நொடி யின்றி நலமெல்லாம் பெற்று வாழ்வர் என்பதும், மருந்துகளால் குணப்படுத்த முடி யாத சில சர்ம ரோகங்கள் நாகராஜனைத் தினமும் தொழுவதால் மறைந்து போகிறது என்பதும் இங்குள்ளோர் நம்பிக்கை. நாக தோஷங்களை ஒழிக்க இது ஒரு சிறந்த இட மாகத் திகழ்கிறது. இன்று நாகராஜர் ஆலயம் பாரத நாட்டின் பல பகுதிகளி லிருந்தும் மக்கள் திரள் திரளாக வந்து தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் புண்ணியத் தலமாக விளங்குகின்றது. இவ் வாறு வந்து வணங்கிச் செல்வோர் எல்லா நலன்களும் பெற்று மன அமைதியுடன் வாழ் கின்ற காரணத்தால் இவ்வாலயத்தின் புகழ் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பக் தர்களும், யாத்ரீகர்களும் மேலும் மேலும் வந்து குவிகின்றனர்.

(புகைப் படங்கள்: கட்டுரை ஆசிரியர்)

ரப்பர் ஸ்டாம்பு மீசை, துள்ளு நடை, கண்ணாடி, ராக்ஷஸ கருட்டு-பைப், நித்தம் ஒரு ஜோடி சகிதம், ஃபர்னிச்சர்களை உடைத்துக்கொண்டு அழிச்சாட்டியம் பண்ணும் சக்ர வர்த்தியாய் சீனியர் ரஜனி. படுவேகத்தோடு ஸ்டைல் பண்ணி சிவாஜியை இமிடேட் செய்கிறார். சின்ன வித்தியாசம். சிவாஜி வசனம் பேசினால் புரியும்.

சாந்த சொரூபி, பக்த சிரோன்மணி சந்தோஷாக வரும் ஜூனியர் ரஜனி சந் தோஷமில்லாத சீரியஸ் டைப். கோவைக் கல்லூரி வகுப்பிலிருந்து வெளியேறி மேனகா வோடு ஊட்டி கார்டனில் டூயட் பாடுவதோடு அப்பப்ப அப்பாவையும் வேவு பார்க்கிறார்.

லட்சுமி — அருமை சரிதா— கொடுமை மேனகா — எளிமை

எம். ஏ. காஜாவின் ''கண்ணாடி'' 90 சதம், சிவாஜியின் நிறைய இரட்டை வேடப் படங்கள் 10 சதம் என்ற விகிதத்தில் தந்தை-மகன் போர்களை ஒன்றாய்க் கலக்கி, சோப்பு-சீப்பு, பலம்-பலவீனம் போன்ற உதாரண வசனங்களால் அலங்கரித்து ஊட்டியவர் விசு. திரைக்கதை பாலசந்தருடையது என்பதை நினைவூட்ட அடிக்கடி இரண்டு விரல்களை நீட்டி ஒன்றைத் தொடச் சொல்கிறார்கள். இதில் புதிய ரீல்—எக்ஸ்-ரே மூக்குக்கண்ணாடி! வாரே வா!

கவுண்டமணி தலைகீழாகத் தொங்க விடப்பட்டு அடிவாங்கும்போது மட்டுமே நமக்கு ஆனந்தமாய்ச் சிரிப்பு வருகிறது. பெண் பார்க்கும்போது ஒரு நாட்டியக் கச்சேரியே நடைபெறும் 'ஆர்யமாலா' காலத்துப் புதுமை!

சலிப்பூட்டும் காட்சி அமைப்புகள், ஓவர் செக்ஸ் போஸ் ஆட்டங்கள், புரியாத வசனங்கள், லாரி — கார் — பைக் சேஸ் என்று ஒரு நீண்ட க்ளைமாக்ஸ், பிறகு அனைவரும் வரிசையாய் நின்று பேசும் வளவளா வசனங்கள்.... அப்பா.... பொறுமை கடலினும் பெரிது!

எஸ். பி. முத்துராமன், பாபு, இளையராஜா அனைவருக்கும் இது மற்றுமொரு படம். அவ்வளவே! யாரையாவது பாராட்டலாமா என்று தேடினால் கிடைப்பவர் ஆர்ட் டைரக்டர் சலம் மட்டுமே! அருமையான செட்டிங்ஸ்!

-சிந்து-ஜீவா



புதிய

:பேப்

டிட்டர்ஜெண்ட் கட்டி

வெளுக்கிறது உங்கள் துணிகளை அதிகத் தூய்மையாக




விசேட பளிச்சிட வைக்கும் சக்தியை உள்ளடக்கிய உன்னத :பார்முலா.

[illegible]

இணையில்லா வெண்மையும், ஈடில்லா பிரகாசமும் தரும் சலவைக்கு-புதிய :பேப் டிடர்ஜெண்ட் கட்டி!



கோல்கேட்–
பாமோலிவ்


Agfa Photography at f/22
The Agfa Isoly-II gets every detail of a landscape or a temple. Close the aperture down to f/22 to get the greatest possible depth of field. Set the shutter speed at 1/100 second and the distance at infinity. Use slow film for greater sharpness—125 ASA. The result? A picture where every detail—from 3m. to as far as the eye can see—is perfect.
The Agfa Isoly-II is a great all-round camera. You simply adjust settings, distance and film to freeze a sports scene, get close enough to snap a leopard snarling or take a perfect picture in dim, soft light.
The Agfa Isoly-II is built to German specifications and undergoes over 100 exacting tests.
See this fine camera today at your friendly Agfa-Gevaert dealer.
1st for everything in photographics
ISOLY-II
for professional results.
AGFA-GEVAERT INDIA LIMITED
Registered Office: Merchant Chamber, 41 New Marine Lines, Bombay 400 020 • Branches: Bombay New Delhi • Calcutta • Madras • ® Registered Trademarks of Agfa-Gevaert, Antwerp/Leverkusen.
SIMOES/AG/4A/80

நால்வர் ஐவராயினர்!

சாதாரணமாய் வாழ்க்கையின் வெளிப் படையான நிகழ்ச்சிகள்தான் நமது கவனத்தைக் கவருகின்றன. நாம் பார்க்கும் வெளிஉலகத்துக்குப்பின்னும் மனோலோகம் ஒன்று இருக்கிறது என்பதை மறந்துவிடுகிறோம். ஆற்று வெள்ளத்திலே மேலே மிதந்து வரும் நுரைத் திரள்களும் உதிர்ந்த மலர்களும் குப்பை கூளங்களும் மட்டுமே நம் கண்ணில் படுகின்றன. ஆனால் ஜலப் பரப்பின் அடியில் உள்ள சுழிகளையும் சுழல்களையும் நாம் அறிவதில்லை. தினந்தோறும் நாம் பார்த்துப் பழகி வரும் மனிதர்களைப் பற்றி நமக்கு எல்லாம் தெரியும், என்று நினைக்கிறோம்! உண்மையில் அவர்களுடைய வாழ்க்கையில் முக்கியமற்ற வெளிப்படையான அம்சங்கள்தான் நமக்குத் தெரிவது. அவர்களுடைய உள்ளத்தில் குமுறும் ஆசா பாசங்கள் விரோத வைஷம்யங்கள் இன்ப துன்பங்கள் இவை ஒன்றும் நமக்குத் தெரியாது.''

பவானி பி.ஏ.பி.எல். கதையின் முன்னுரையில் பேராசிரியர் கல்கியின் பொன்னுரைகள்இவை. அமரர் கல்கி நினைவுச் சிறுகதை போட்டியில் பரிசு பெற்ற கதாசிரியர்கள் மகா ,கெட்டிக்காரர்கள். 'நமக்கு ஒன்றும் தெரியாது' என்று அமரர் கல்கி எவற்றைக் குறிப்பிடுகிறாரோ அவற்றைத் தங்கள் சிறுகதைகளில் எத்தனை அழகாக, நாகரிகமாக, கலை உணர்வோடு வெளிப்படுத்துகிறார்கள்! அமரர் கல்கி சிறுகதை ஆசிரியர்களிடம் எதிர்பார்ப்பதும் இதைத்தானே!

○ கிருஷ்ணமூர்த்தி குருமூர்த்தி



முதல் பரிசுக் கதை ''வறுமைக் கோடு'' படைப்பாளர் ''கிருஷ்ண குரு'' இரட்டையர்கள் என்பதே புதிய திகைப்பூட்டும் செய்தி. சேலத்தில் கைத்தறி துணி தயாரிப்பு; மினரல் தொழில்களில் ஈடுபட்டுள்ள கிருஷ்ணமூர்த்தியும், ஈரோட்டில் மின் வாரியத்தில் பணிபுரியும் குருமூர்த்தியும் சேர்ந்து படைத்த இலக்கியம் ''வறுமைக் கோடு''. தங்களைப்பற்றி அவர்கள் தரும் சுயசரிதையே கதையைப் போல் சுவாரசியமாக அமைந்திருக்கிறது:

பள்ளி நாட்களிலேயே இலக்கிய ஆர்வம் கொண்டு – நாங்களும் ஏதாவது இலக்கிய உலகில் சாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம்.

அதன் விளைவு – கிருஷ்ணமூர்த்தி –குருமூர்த்தி என்கிற எங்கள் பெயர்கள் ''கிருஷ்ண குரு'' ஆக மாறியது.

சென்னை நாடகஉலகில் நாங்கள்வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வமுடன் சென்னை வந்தோம். ஆனால் எங்கள் முயற்சிகள் பலனில்லாமல் தோற்றுப்போய் சேலம் திரும்பிவிட்டோம்.

நாடக உலகின் தோல்விக்குப் பின் நாவல்கள் எழுதியாவதுபிராபல்யம் அடையலாம் என ஆர்வமுடன் பல நாவல்கள் எழுதினோம்.– ஆனால் அதிலும் ஆதரவு கிடைக்கவில்லை.

ஆதரவு கிடைக்கவில்லை என்பதற்காக நாங்களும் வெறுமனே இருந்துவிடவில்லை. இந்தச் சமயத்தில்தான் சென்ற வருடம்– அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி அறிவிப்பு வெளியானது.

நாங்கள் கலந்து கொண்டோம்.

எங்களது ''சுதந்திரப் பசி'' என்ற சரித்திர சிறுகதை முதல் பரிசு பெற்றுப் பிரசித்தமானது.... நாங்களும் பத்திரிகை உலகில் முதன் முதலாகப்பிரவேசித்தோம்.

அந்தப் பிரவேசத்துக்கு 'கல்கி'யே வழி வகுத்துத் தந்தது. வழி காட்டியதோடு நில்லாமல் தொடர்ந்து ஐந்து சிறுகதைகளைப் பிரசுரித்து ஆதரவும் தந்தது.


குமுதம் அட்டைப் படக் கதைப் போட்டியிலும் முதல் பரிசு ரூபாய் ஐந்நூறு பெற்றோம்.

ஒரே ஆண்டில் இரண்டு முதல் பரிசுகள் என்று மகிழ்ந்திருந்த வேளையில் இதோ இன்னுமோர் மகிழ்ச்சிச் செய்தி என்று

○ உஷாதேவி



○ விமலாதித்தமாமல்லன்



○ அலீபூர் ரஹீம்



இந்த ஆண்டும் — கல்கி — அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் — எங்களது ''வறுமைக் கோடு'' என்ற சிறு கதையை முதல் பரிசுக் கதையாகப் பிரசுரித்து மகிழச் செய்துள்ளது. நன்றி!

ஒரு நாள் கலெக்டர் அலுவலகம் முன்பு நின்றிருந்தபோது — எங்களிடம் பேச நேர்ந்த ஒருவரின் கதையே ''வறுமைக் கோடு.''

அந்த முகமற்ற விவசாயி ஒரு கற்பனைப் பாத்திரமல்ல — யதார்த்தமான — துன்பங்களின் நடுவில் நம்பிக்கையோடு — சட்டத்தையும், அதிகாரிகளையும் நம்புகிற எலும்பும் சதையுமான ஒரு ஜீவனே. — அது ஒரு கற்பனைச் சம்பவமல்ல — நிஜமான சோகம். — அந்தச் சின்ன விவசாயியின் சோகம் விடிந்ததா இல்லையா என்று அவனுடன் பேச நேர்ந்த எங்கள் இருவருக்குங்கூடத் தெரியாது. அதுவே கதையின் முடிவும் கூட—

கல்கியின் மூலமாகப் பத்திரிகை உலகில் காலடி எடுத்து வைத்ததற்கான பெருமையும் பூரிப்பும் அடைகிறோம்.

புதுமணத் தம்பதியரின் காதல், ஊடல், சரசம், பிணக்கு ஆகியவற்றை விவரித்துச் சொல்வதில் பெண் கதாசிரியைக்கு உள்ள திறமையை என்னென்பது. 'மாறாத பரிமாணங்கள்' என்னும் கதையில் உள்ளத்தைத் தொடும் நிகழ்ச்சிகளை வடித்துத் தந்துள்ள உஷாதேவி கூறுகிறார்:

அமரர் கல்கி சிறுகதைப் போட்டியில் என் கதைக்கு இரண்டாம் பரிசு அளித்திருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இன்னமும்கூட நம்ப முடியவில்லை!

சின்னஞ் சிறு வயதில் ஆர். ஆர். சபா போன்ற இடங்களில் கல்கி, தேவன் போன்றோரின் பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. பிறகு அவர்களின் எழுத்துக்களைப் படிக்கும் வாய்ப்பு என் தாயின் சேகரிப்புக்களின் மூலம் கிடைத்தது. அது இன்னும் தொடர்கிறது. குழப்பங்கள் மனத்தை அலைக்கழிக்கும் நேரங்களில் பொன்னியின் செல்வனையோ அலை ஓசையையோ எடுத்து நான் கணக்கில் அந்த எழுத்துக்களில் ஆழ்ந்துபோகையில் வேதனைகள் தாக்காத ஒரு தனி உலகில் ஒதுங்கி விடுவதாய் உணர்வதுண்டு. மூன்று நான்கு வருடங்களாக அமரர் கல்கிக்கு அஞ்சலி என்கிற உணர்வில் இந்தப் போட்டிக்குச் சிறு கதை அனுப்பியிருக்கிறேன். பரிசு கிடைக்கும் என்கிற நோக்கில் அல்ல!

சென்னை லேடி சிவஸ்வாமி ஐயர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும் பின் ராணி மேரி கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்றவர் உஷா. சம்ஸ்கிருத இலக்கியத்தில் பட்டதாரி. இவரது முதல் சிறு கதை கோமகள் போட்டியில் இரண்டாவது பரிசுக் கதை. பொம்மையில் முதல் பரிசுக் கட்டுரை எழுதிப் புகழ் பெற்றிருக்கிறார். குமுதம், அமுதசுரபி, தினமணி கதிர், தினத்தந்தி ஞாயிறு மலர் ஆகியவற்றில் இவரது சிறு கதைகள் இருபதுக்கு மேல் இடம் பெற்றுள்ளன. கல்கியில் முதன் முதலாக இடம் பெறும் கதையே இரண்டாவது பரிசுக் கதை!

மூன்றாவது பரிசுக் கதைகளில் ஒன்றான 'வலி' என்னும் சிறு கதையை எழுதிய விமலாதித்த மாமல்லன் தம் கதையோடு இணைத்திருந்த கடிதமே 'தோல்வி' காணும் எழுத்தாளர்களுக்குள்ள மனக் கொந்தளிப்பைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

வலி என்கிற என் கதையைத் தாங்கள் நடத்தும் சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்ள அனுப்புகிறேன்.

நான் சில கதைகளை எழுதியிருக்கிறேன். என்றாலும் இதுவரை எந்த பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டதில்லை. அதுவே, இங்கும் நிகழும் என எண்ணுகிறேன். எனினும் நம்பிக்கையும் நப்பாசையும் யாரை விட்டது?

கல்கியில் தம் முதல் கதை மூலம் அறிமுகமாகும் விமலாதித்த மாமல்லன் பிறந்தது 19—6—1960ல். பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. படிக்கிறார். அனைத்துக் கல்லூரிப் போட்டிகளில் பரிசுகள் குவித்தவர்! பரீக்ஷா நாடகக் குழுவில் பணியாற்றி வருகிறவர். விமலாதித்த மாமல்லனின் நம்பிக்கையும் முயற்சியும் வீண் போகவில்லை!

பேராசிரியர் கல்கியின் நகைச்சுவையும் கிண்டலும் பிரசித்தமாயிற்றே! எனவே பரிசு பெறும் கதைகளுள் ஒன்று நகைச் சுவைக் கதையாக அமைந்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி தருகிறது. 'இன்ஸ்பெக்ஷன்' கதையில் கிராமத்துச் சூழ்நிலையில் டெபுடி இன்ஸ்பெக்டர் படும் பாடும் ஓராசிரியர் அவஸ்தையும் நம்மைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கின்றன.

மேல் விஷாரம் அப்துல் ஹக்கீம் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றும் அலி பூர் ரகீம், தமது சொந்த முயற்சியில் எம்.ஏ. பி.டி., எம். ஃபில் எல்லாம் தேறி டாக்டர் பட்டம் பெறப் பாடுபடுகிறார். பிறந்த ஊர் திருவள்ளூர். இவரது முதல் கவிதை ''எடு வாளை'' அச்சில் வந்ததைத் தொடர்ந்து முல்லை, தென்றல், கலைமன்றம் இதழ்களில் பல கட்டுரைகள், கவிதைகள் தந்திருக்கிறார். விகடனில் 'காதலி', 'விஷய தானம்' ஆகிய சிறுகதைகள்! ஆனந்தவிகடன் துணைஆசிரியர் ஆம்பூர் கேசவன் இவரது உயிர் நண்பர். அவரது மறைவினால் எழுத்துத் துறவு பூண்டார் சில காலம். பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நண்பர்களின் தூண்டுதலினால் மறுபடியும் எழுத்துப் பிரவேசம்! மேடைப் பிரசங்கி. பட்டி மன்றங்கள், கவியரங்கங்களுடன் தொடர்பு கொண்டவர்.

இவ்வாண்டு அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் நான்கு பரிசுகளுக்கு ஐவர் சொந்தம் கொண்டாடுகிறார்கள் என்பது விசேஷம்! எழுத்துத் துறையில் அவர்கள் மேலும் பிரகாசிக்க, அமரர் கல்கியின் ஆசிகளுடன் கூடிய இந்தப் பரிசுகள் தூண்டுகோலாக அமையும். —பி. எஸ். மணி


புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்...
உறுதிமிக்க,ஆரோக்கியமான பற்கள்
அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்
கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை
பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவமாக்குகிறது.
Colgate DENTAL CREAM
Colgate
கோல்கேட் டென்டல் க்ரீம்
உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத்
தடுத்திடுங்கள் பற்சிதைவை
எதிர்த்திடுங்கள்
DC-G-74 TM

சந்திரநாத்



நீயா?

12

ஹோட்டல் நிர்மலாவின் கௌண்டரில் ஒரு புது முகம் — இளசு என்றால் படு இளசு — தெரிந்தது. நின்று கவனித்தேன். நிமிர்ந்து சிரித்தாள்.

"மிஸ்... தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பரவசமாகச் சொல்கிறேன்... நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்..."

நாணிச் சிவந்தாள். "தாங்க்ஸ்" என்றாள்.

"நான் மகேஷ். 12ம் நம்பரில் இருக்கிறேன்."

"அப்படியா? ஏதாவது உதவி வேண்டுமா?"

"ஆமாம்... மதுரை ரொம்பப் பெரிசாக இருக்கிறது. ரொம்பப் பயமுறுத்துகிறது."

"புதுசா?"

"ரொம்ப ரொம்ப 'புதுசு'" — சிரித்தான்.

"மெட்ராஸா?"

"அசல் காயலாங்கடை."

அதற்கும் சிரித்தாள். "நான் படித்தது மெட்ராஸில்தான்." என்றாள்.

"அப்போ 'புதுசு' இல்லே." — சிரித்தான். "மெட்ராஸ்லே எங்கே இருந்தீங்க?"

"மயிலாப்பூர்லே, மாமா வீட்டிலே."

"ஸ்மார்ட்டா, யங்கா இருக்கீங்க... நல்ல ஃப்யூச்சர் இருக்கு. அந்த நெற்றியே சொல்லுது."

"ஜோஸியம் தெரியுமா? — அருள்வாக்கு வகையா?"

"நெத்துக் காணுமே?"

"நெத்து எனக்கு ஆஃப்" என்றாள். "ரேகை பார்ப்பீங்களா?"

"உனக்குப் பார்த்துச் சொல்லட்டுமா?"

"இப்ப வேண்டாம். மானேஜர் வர்ற டைம்!" என்றாள். "என்னமோ ஹெல்ப் கேட்டீங்களே—"

"மதுரையிலே ஒரு கடை எங்கிருக்குன்னு தெரியலே."

"எது?"

"டபிள் கோல்ட் லாக்கெட் பார்."

"அதா? இதோ அடுத்த தெருவிலேதான் இருக்கு."

"கங்குலின்னு ஒரு ஆள் இருக்காரு?"

"அவர் ஆள் இல்லே. அவர்தான் அதுக்கு முதலாளி... கை ரேகை பார்க்க வரச் சொன்னாரா?"

"இல்லே. பத்து டன் லெமன் பவுடர் வாங்கிக்கிறேன்னு சொல்லியிருக்காரு...ஆள் எப்படி?.... பணம் வந்துடுமா?"

"வந்துடும். ரொம்பக் கரெக்ட் ஆளுங்க. அவரு ஆளுன்னு உயரம்மா கறுப்பா ஒருத்தன் இருக்கானே— அவன் இங்க வரப் பல்லாம் அவரைப் பத்தி ரொம்பப் பெருமையாச் சொல்வான்."

"அவன் பேரு என்ன?"

"ராமு."

"கங்குலி இந்த ஊர் பேர் மாதிரி இல்லியே..."

"இந்த ஊரிலே... இரண்டு வருஷமாத்தான் இங்கே இருக்காரு. எந்த ஊர்க்காரர்னு தெரியலே... தமிழாளுதான். பேருதான் வேடிக்கையா இருக்கு."

"வசதியா இருக்காரா?"

"இப்ப நல்லா இருக்காரு. ஆறு இரண்டு வருஷத்துக்கு முந்தி தோள்ளே துண்டோட வந்தார்னு எங்க ஃபாதர் சொல்வாரு."

யாரோ ஏதோ கேட்க கௌண்டருக்கு வரவே—

மகேஷ், "அப்புறம் வந்து உன் கையைப் பார்த்து, உனக்கு 'எப்படிப்பட்ட வில்லாடி வருவான்னு' பார்த்துச் சொல்றேன்" என்று கூறி நகர்ந்தான்.

மீனாட்சியம்மன் கோவில் மதிலோரம் பிச்சிப் பூமாதிரி இட்லி விற்றார்கள்; பஜ்ஜிகள் பளபளத்தன. பரோட்டாக்களைக் கோபமாக அறைந்தார்கள்.

நாகப்பட்டணம் கடையில் நூறு கிராம் அல்வா வாங்கிக்கொண்டு மெதுவாக நடந்தான். கேள்விகள் நெஞ்சில் விளைந்தன.

ஹோட்டலுக்குத் திரும்பும்போது கவுண்டரில் ஒரு கூட்டமாக இருந்தது. ஓ, 'வைகை வந்துவிட்டது போலிருக்கிறது. அத்தனை கூட்டத்துக்கும் பதில் சொல்லிக் கொண்டு, இரண்டு பேர் முதுகுக்கு மேல் நிமிர்ந்து அவனைப் பார்த்துச் சிரித்துத் தலையசைத்தாள் இளசு. "யாரோ தேடிக்கிட்டு வந்தாங்களே உங்களை" என்றாள்.

"யாரு?"

"யாரோ ஒரு பொம்பளை."

"பொம்பளையா?"

"நல்லா அழகா இருந்தாங்க... மெட்ராஸுங்க."

"மெட்ராஸா?" — 'நீலாவாக இருக்குமோ?'

"போயிப் பாருங்க — மேலேதான் இருக்காங்க."

உற்சாகத்துடன் படிகளில் தாவிப் போனான். நீலாவாக இருந்தால், ஹா! இன்றிரவு சொர்க்கம்தான்.

தாழ்வாரம் ஏக நீளமாக இருந்தது. அவன் அறைக்கு நேர் எதிரில் கைப்பிடிச் சுவர் ஓரமாக ஒரு பெண்ணின் முதுகு தெரிந்தது.

''ஹலோ'' என்றான். திரும்பினாள். படு ஏமாற்றம். நீலா இல்லை நிம்மி — நிர்மலா.

''நீங்கள்தானே மிஸ்டர் மகேஷ்?''— தெரியாத மாதிரி கேட்டாள். நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். 'உங்களை வேறே வேஷத்திலே பார்த்திருக்கிறேன்' என்று கேட்கவில்லை.

''கரெக்ட்! ஐ ஆம் மகேஷ்.''

''ஐ ஆம் நிர்மலா — கமல்நாத்ஸ் பி.ஏ.''

''ஓ—'' என்று வியப்புத் தெரிவித்தான். ''மெட்ராஸிலேயிருந்து வர்ரீங்களா?''

''ஆமாம்.''

''போலீஸ் இன்பார்ம் பண்ணிச்சா?''

''ஆமாம்.''

''நான் மிகவும் வருந்துகிறேன், மிஸ் நிர்மலா. அவர் இப்படி எதிர்பாராதவிதமாக—''

''ஓ, எப்படி இந்தப் பயங்கரம் நடந்துச்சு, மகேஷ்? என் யஜமானுக்கா இந்தக் கதி?'' — அழுதாள். கேவினாள். ''அவர் மாதிரி ஒரு பாஸ்...''

''வாங்க — உள்ளாறப் போயி பேசலாம்.'' ரூம் கதவைத்திறந்தான். பின்னால் வந்தாள்.. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு உட்கார்ந்தாள்.

அடுத்த அறைப் பக்கம் பார்த்தாள். ''அதிலேதான் அவர் தங்கினாரா?''

''ஆமா — இப்போ போலீசு மூடி சீல் வைச்சுட்டாங்க — என்ன சாப்பிடறீங்க?— போனை எடுத்து 'ஸர்வீஸை' அழைத்து இரண்டு பானங்களுக்கு ஆர்டர் கொடுத்தான்.

''என்ன, என்னைப் போய், 'நீங்க, நீங்க'ன்னுட்டு?'' — கோபித்தாள்.

''சரி, 'நீ'-ங்கறேன். நீ எனக்கு உதவி பண்ணுவியா?''

''என்ன உதவி?''

''நீ உனக்குத் தெரிஞ்சதையெல்லாம் சொன்னால் போதும்.''

''என்ன சொல்லணும்?''

''கங்குலி என்ற பெயரைத் தெரியுமா?''

''கங்குலியா?'' — நெற்றிப் பொட்டைச் சுருக்கி யோசித்தாள்.

''ஓ—ஆமாம். கமல் ஸார் நிறையச் சொல்லியிருக்காரு'', என்றாள்.

''கமல் உங்கிட்ட எப்படிப் பேசுவார்?''

''சோஷியலாகவும் இருப்பாரு; பாஸ் மாதிரியும் இருப்பாரு. சோஷியலா இருக்கும்போது நிறையப் பழைய கதை எல்லாம் சொல்வாரு.''

''அதிலே கங்குலி என்ற பெயர் வந்திருக்குதா?''

''வந்திருக்கு.''

''கமல்கூட எப்பவோ கங்குலிங்கிற ஆள் பிஸினஸ் பார்ட்னரா இருந்தாராம் — பம்பாயிலே.''

''எப்போது?''

''ஏழெட்டு வருஷத்துக்கு முந்தி.''

''என்ன பிஸினெஸ் செஞ்சாங்க?''

''பெரிசா ஒண்ணுமில்லே. 'சாம்ப்ளிங்.''

''சூதாட்டமா?''

''லைக் தட்.''

''நல்லா சம்பாதிச்சாங்களா?''

''பம்பாய் முழுக்க கிளையண்ட்ஸ் இருந்துச்சாம், லட்சக் கணக்கிலே பணம் புரண்டுதாம்.''

''போலீஸ் ரிப்போர்ட்லே அவங்க பேரு அப்ப கட்டாயம் இருக்கணுமே.''

''இருக்காது. வேறே பேர்லே நடமாடினாங்களாம். போலீசுக்குத் தெரியாமலே நிறையச் சம்பாதிச்சாங்களாம். அப்புறம் ஒரு நாள்



போலீஸ் நெருக்கமா வலை விரிச்சட்டதும், மூலைக்கொருத்தராதப்பிஓடிட்டாங்களாம்.''

''நாச்சுரல்.''

''இதிலே ஒரு பாயிண்ட் இருக்கிறது. அதை அப்புறமாத்தான் தெரிஞ்சுக்கிட்டேன். ஒரு நாள் 'ஓவரா' தண்ணி போட்டிருந்தப்ப அதைச் சொல்லிட்டாரு.''

''என்ன சொன்னாரு?''

'' 'நிம்மூ, நான் அப்ப வெறுமனே ஓடி வரலை. அந்த பிளடி கூஸ், கங்குலி ராஸ்கலுக்குப் பெரிய 'குல்லா'வைப் போட்டுட்டுத்தான் ஓடி வந்தேன். ஒரு லட்ச ரூபாய் கொண்டாந்துட்டேன்' என்றார்.''

''என்ன பெயரிலே பம்பாயில இருந்தாங்களாம்?''

''தெரியாது. எங்கிட்டச் சொல்லலை.''

''நீஎப்போதுஅவருக்கு பி.ஏ.வா வந்தே?''

''இப்பத்தான். ஒண்ணு ஒண்ணரை வருசம்தான் இருக்கும்.''

''கமலுக்குப் பொஞ்சாதி, புள்ளை கிடையாதா?''

''அவரு கல்யாணமே செஞ்சுக்கலேன்னு நினைக்கிறேன். ஒருவேளை, கல்யாணமாகி, இப்பத் தொடர்பு விட்டுப் போய், எங்கேயாவது அவ இருக்கக்கூடச் செய்யலாம். நிச்சயமாச் சொல்ல முடியாது.''

''அவர் உன்னை எப்படி நடத்தினார்?... எப்போதாவது ரொம்ப அன்புடன் நடத்தினது உண்டா?''

''ரொம்ப அன்புன்னு!'' — கேள்வியில் சிரித்தாள். ''நீங்க சொல்ற அர்த்தத்துலே நிச்சயமாக இல்லே... அவரு எங்கிட்ட எப்பவும் ரொம்ப கண்ணியமாகத்தான் நடந்து வந்திருக்கிறார். எனக்கு அவர் கிட்ட எந்த மனத்தாங்கலும் இல்லே...''

''அவர் எதற்காக மதுரைக்கு வந்தார்?''

''உங்க கிட்டச் சொல்லலையா?''

''நீ சொல்லு.''

''மிஸ்டர் கங்குலியைச் சந்திக்க.''

மகேஷ் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

''ஆமாம். இந்தக் கங்குலியின் அழைப்பின் பேரில்தான் கமல் மதுரை வந்தார். கமலுக்கு கங்குலி இங்கே இருப்பது தெரியும்.''

''இது உனக்கு எப்படித் தெரியும்?''

''ஒரு வாரத்துக்கு முன்னால் அவர் மிக்க கவலையாக இருந்தார். என்ன பாஸ்'ன்னு கேட்டேன். 'நிம்மி எனக்கு ஒரு பெரிய ஆபத்து வந்திருக்கு'ன்னார். ரொம்ப வற்புறுத்திக் கேட்டப்புறம் விஷயத்தைச் சொன்னார். 'நான் இங்கே இருப்பது அவனுக்கு இத்தனை நாள் தெரியாமல் இருந்தது. இப்ப எப்படியோ கண்டு பிடிச்சுட்டான். நாளைக்கு அவன் கிட்ட இருந்து ஒரு ஆள் வரப்போறான்'னார்.''

''வந்தானா?''

''வந்தான்.''

''அவனை நீ பார்த்தியா?''

''பார்த்தேன்.''

''எப்படி இருந்தான்?''

யோசித்தாள். ''கறுப்பாக — ஸ்லிம்மாக— தப்பட்டை மூஞ்சி — நீட்டமாய் மயிர்— கம்பி ஃபிரேமில் கறுப்புக் கண்ணாடி.''

கங்குலியைப் பார்க்க அழைத்துப் போன ராமுவின் முகம் கண் முன் வந்து நின்றது. நிர்மலாவின் வர்ணனை வார்த்தைக்கு வார்த்தை பொருந்திற்று. அவனா வந்தான்? நிம்மூ திசை திருப்புகிறாளோ?

''எப்போது வந்தான்?''

''ஒரு பிற்பகல் வந்தான்.''

''எங்கிருந்து வருகிறாய்என்றுகேட்டாயா''

''கேட்டேன். மதுரையிலிருந்து வருவதாகச் சொன்னான்.''

''கமலைப் பார்த்தானா?''

''அவர் அப்போது நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். 'அவன் வந்திருக்கிறான்—அனுப்பட்டுமா?' என்று கேட்டேன். அனுப்பச் சொன்னார். அனுப்பினேன். கதவைச் சாத்திட்டுப் பேசினாங்க.''

''உன் காதில் ஏதாவது வார்த்தை விழுந்ததா?''

''நான்தான் சாவி ஓட்டையிலே காதைத் தீட்டி வெச்சுக் கேட்டுக்கிட்டிருந்தேனே.''


''ஒட்டுக் கேட்கிற பழக்கமெல்லாம் கூட உனக்கு உண்டா?''

''அதில்லேங்க. அவரு என் பாஸாங்க. ஏதாவது பண்ணிப்பிட்டான்னா? ஏற்கனவே அவரு அவனுக்குப் பயந்து கொண்டிருந்தாரு....''

''ஏதாவது ஆகியிருந்தால் என்ன செய்வாய்?''

''போலீசைக் கூப்பிட்டிருப்பேன்.''

''இதுவரை பலவகைப்பட்ட சர்பத் வகைகளைப் பற்றியும் சர்பத் தயாரிக்கும் முறை பற்றியும் விளக்கியவர், திரு. சர்பத்குமார்.... ஸாரி! திரு சம்பத்குமார்!''



மகேஷ் சிரித்தான். ''நிஜமாகவே கூப்பிட்டிருப்பாயா?'' என்றான்.

''நிச்சயமாக் கூப்பிட்டிருப்பேங்க'' என்றான்.

''ஏதாவது நடந்துச்சா?''

''சாமி புண்ணியத்திலே இல்லே. ஆனா அந்த ஆள் ரொம்பக் கோபமா பேசினான். நீ வேற பேர் வெச்சுக்கிட்டு, பெரிய டவுன்லே மறைஞ்சுக்கிட்டா தெரியாதுன்னு நெனைச்சியா? எங்க ஐயா எப்பவோ கண்டு பிடிச்சுட்டாரு – மரியாதையா பணத்தைக் கொடுத்திட்டா வம்புலே மாட்டிக்கிட மாட்டேன்னான்.''

''இஸிட்?'' என்று வியப்புடன் கேட்டான் மகேஷ். ''ஒரு வேலைக்காரப் பயல், தன் முதலாளியைப் போன்ற இன்னொரு பெரிய முதலாளியிடம் இப்படிப் பேசுவானா?''

''ஏன் கூடாது? தாய் எட்டடி பாஞ்சா, குட்டி பதினாறு அடி பாயாதா?''

''கமல் பேசாமல் கேட்டுக்கிட்டா இருந்தார்?''

''அவரு கோபப்படவே இல்லே. என்னைக் கூப்பிட்டு அவனுக்குக் காப்பி குடுக்கச் சொன்னார். என் எதிரிலேயே எப்படி இருக்காரு உங்க முதலாளி – என்ன பண்றாரு'ன்னு கேட்டார். 'மதுரையிலே 'பார்' நடத்தறாருன்னான். காப்பி கொண்டு வரும்போது ஒரு வார்த்தை காதுல விழுந்துச்சு.''

''என்ன வார்த்தை?''

'' 'வீண் தகராறு வேணும்னு எங்க ஐயா – என்னடா, கறுப்புப் பணம்தானே நாம அபேஸ் பண்ணிக்கிட்டு வந்தது – கோர்ட்டுக்கா போக முடியும்னு நினைக்க வாண்டாம்னார்.' என்று சொல்லிக்கிட்டிருந்தான்.''

''இவரு என்ன சொன்னாரு?''

'' 'சரி, அடுத்த வாரம் நானே மதுரைக்கு வந்து உங்கயஜமானரைப் பார்க்கிறேன்'னார். அவன் கிட்ட ஐம்பது ரூபா செலவுக்குக் கொடுக்கச் சொன்னார்.''

''அப்புறம்?''

''வாங்கிக்கிட்டுப் போயிட்டான்.''

ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான் மகேஷ். இந்த நிம்மியை எவ்வளவு தூரம் நம்பலாம் என்று யோசித்தான்.

''அப்படியானால் கங்குலிக்குப் பணம் கொடுக்கத்தான் கமல் வந்தாரா?''

''அவர் மதுரைக்குப் புறப்பட்டதுதான் தெரியும். பணம் கொண்டு–வந்தாரா என்று தெரியாது.'' என்றாள் நிம்மி.

பஸ்ஸர் ஒலித்தது. 'ரூம் ஸர்வீஸ்' என்ற குரல் கேட்டது. 'எஸ்' என்றவாறு போய் மகேஷ் கதவைத் திறந்தபோது–

ஒரு ரிவால்வருடன் ஒரு கை நீண்டு வந்து–

''நிம்மி சட்னு கீழே படுத்துக்கொண்டு விடு'' என்று கூவிய மகேஷ், தரையில் சாஷ்டாங்கமாக விழ–

'ஸ்ஸ்ஸ்ஸ்' என்று அதற்குள் துப்பாக்கி சீற–

ஒரு குண்டு உறுமிக்கொண்டு நிம்மி இருந்த திசையில் பாய்ந்தது **(தொடரும்)**


கடுகு பதில்கள்

✠ கோ. துரைசாமி, சித்தோடு.
கே: ஆபீஸிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போது மனைவிக்குப் பூ வாங்கிப்போவது உண்டா?
ப: உண்டு. ஆரம்ப காலத்தில் மல்லிகைப்பூ. இப்போது வாழைப்பூ!

✠ அபராஜிதன், மதுரை-1.
கே: என் மானசீகக் குரு குரும்பூர் குப்புசாமி பற்றி ஒரு வரி?
ப: பல வரிகள் தருகிறேன். புனைபெயரில் ஒளிந்து கொண்டிருக்கும் இந்த 'சாமி'க்கு நிறைய ரசிகர்கள் உண்டு. காரணம் அவர் சராசரி வாசகர்களுக்காக எழுதுகிறார். எளிமையான நடை. வார்த்தை ஜாலம் செய்து தனது கெட்டிக்காரத்தனத்தைச் சிலர் செய்கிறார்களே அது இவரிடம் கிடையாது. சரளமாகக் கதையைக் கொண்டு செல்வார்.


✠ எஸ். குணசேகரன், சென்னை-17.
கே: புகழும் பணமும் ஒருவனை உயர்த்தி விடுகிறதா? தாழ்த்தி விடுகிறதா?
ப: புகழ் பெற்றதாலும், பணம் சேர்ந்து விட்டதாலும் சிலர் எண்ணத்தாலும், செயலாலும் தாழ்ந்து போகிறார்கள்; சிலர் உயர்ந்து போகிறார்கள். எப்படிப் போனாலும் பணமும் புகழும் இருப்பவர்களை மற்றவர்கள் உயர்வாகத்தான் மதிப்பார்கள். இந்தச் சமயத்தில் கோல்ட்ஸ்மித்தின் புகழ் பெற்ற ஒரு வரியைத் தருகிறேன். "Where wealth accumulates men decay"

✠ எஸ். வி. ராஜசேகர், சென்னை-5
கே: மன்னரும் மங்கையும் எந்த விதத்தில் ஒரே ஜாதி?
ப: மணமுண்டு என்பதால்!



✠ ராதா நாராயணன், கல்கத்தா-29.
கே: மாயா நாகரிகம் என்கிறார்களே அதுபற்றி விளக்குங்களேன்.
ப: உங்கள் கேள்வியைப் பார்த்த பிறகு சில புத்தகங்களைப் படித்தேன். எனக்குப் புரிந்த அளவு சொல்கிறேன். மத்திய அமெரிக்காவில் செழித்து வளர்ந்த நாகரிகம் இது. கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே இது துவங்கியிருந்ததாம். இதன் உச்ச கட்டம் கி.பி. 750 வாக்கில்தான். அந்தச் சமயம் சாதாரண வண்டிச் சக்கரம் கூடக் கண்டுபிடிக்கப்படவில்லை. மாயர்கள்தான் எழுதும் வித்தையைக் கண்டு பிடித்தார்கள். கணிதத்தை உருவாக்கினார்கள். ஒரு வருஷத்துக்கு 365 தினம் என்பதை சூரியனின் போக்கை வைத்து நிர்ணயித்தார்கள். கட்டடக் கலையிலும் பல முன்னேற்றத்தை ஏற்படுத்தினார்கள். இப்படிப்பட்ட வளர்ச்சி ஏனோ அழிந்து போனது. பின்னால் கி.பி. 1500வாக்கில் கொஞ்சம் துளிர்த்தது. அதுவும் 200 ஆண்டுகளுக்குள் அழிந்து விட்டது.

✠ எம். மாதேஸ்வரன், சங்ககிரி.
கே: ஜெயிலுக்கு சென்ற அனுபவம் உண்டா?
ப: ஒரே ஒரு தடவை போயிருக்கிறேன்.— அந்த உலகத்தையும் பார்த்துவிட்டு வர. பணம் எதுவும் கட்டவில்லை. அங்கு பணம் கட்டுபவர்களையும் அவர்களுடைய பேச்சுகளையும் கவனிப்பதே ஒரு பெரிய அனுபவம். மாலை வீடு திரும்பியபோது மனத்தில் நின்ற ஒரே எண்ணம், 'இப்படி அழிந்து போகிறார்களே, சாதாரண நடுத்தர மக்கள் என்பதுதான்.



✠ கை. இராமமதி, கும்பகோணம்.
கே: திறமை இல்லாவிட்டாலும் அதிர்ஷ்டம் ஒன்று இருந்துவிட்டால் முன்னேறி விடமுடியுமா?
ப: ஓரளவுதான் முடியும். ஏணியை உங்களிடம் கொடுத்து விட்டால் போதுமா? மேலே ஏறத் தெரிந்திருக்க வேண்டாமா? உலகில் பெரும்பாலான திறமைசாலிகளுக்கு வாய்ப்பு எனும் அதிர்ஷ்டம் கிடைப்பதில்லை. கிட்டியவர்கள் சுலபமாக உச்சிக்குச் சென்று விடுகிறார்கள். ஆக திறமை இருக்கிறதோ இல்லையோ அதிர்ஷ்டம் முக்கியம்.

பரிசு பெறுபவர் :
கை. இராமமதி,
36, ஆசாரியார் தெரு,
கும்பகோணம் - 612001.

என் குழந்தையின் முதலாண்டில் ஏற்பட்ட இனிய அனுபவங்கள்—

ஃபாரெக்ஸ் கல்கி குழந்தைப் பராமரிப்புப் போட்டி



✖ ஹைதராபாத் ஜூலாஜிக்கல் கார்டனில்



✖ ஸ்ரீமதி ஆறாவது மாதத்தில்



✖ பத்தாவது மாதத்தில்

"தன் பிள்ளை தாய்க்கு அருமை" என்பார்கள். அதிலும் முதல் குழந்தை — அதன் முதலாண்டுப் பருவம் என்றால் அந்தத் தாய் அடையும் அனுபவங்கள் அருமையிலும் அருமை இல்லையா?

என்னைப் பொறுத்தவரையில் என்னருமை மகளின் முதலாண்டு அனுபவங்கள் கொஞ்சம் புதுமையானவை.

விரிவாகச் சொல்லுகிறேன்.

என் மகள் பிறந்த சமயத்தில், என் கணவர் தன் அலுவல் நிமித்தம், மாதமொரு மாநிலம் வாரமொரு ஊர் என்று சுற்ற வேண்டி வந்தது.

நானும், என் மகளும்?

"ஒரு வருடம் சமாளித்துக்கொள்" என்று எளிதாகச் சொல்லிவிட்டார். விட்டுவிடுவேனா நான்?

"குழந்தையின் முதல் வருஷத்திலேயே குழந்தை விலகியிருந்தால் அப்புறம் குழந்தைக்குத் தந்தையிடம் பிடிப்பிருக்காது" என்று லேசாகப் பயமுறுத்தினேன். அப்புறமென்ன?

என் மகள் தன் ஒரு வயதுக்குள் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மஹாராஷ்டிரா என்று சுற்றி வந்தாள்.

குழந்தையின் சட்டைத் துணியிலிருந்து, மருந்து, விளையாட்டுச் சாமான்கள் என்று பெட்டி கொள்ளாத சாமான்களோடு "ஒரு நடமாடும் இல்லமாக" எங்கள் பிரயாணம் இருக்கும்.

வெய்யில், மழை பாராமல் எங்களோடு சுற்றி, பஸ்ஸில் தூங்கி, ரயிலில் விளையாடி, ஹோட்டல் அறையில் வாழப் பழகிக்கொண்ட என் மகளின் சமர்த்தைப் பாராட்டாதவர் இல்லை.

ஊட்டிக் குளிரைத் தாங்கிக் கொண்டு, 'தொட்ட பெட்டாவில்' புரண்டாள், 'பொடானிகல் கார்டன்ஸ்'ஸில் உருண்டாள். ஹைதராபாத்தில் பிர்லா மந்திரின் பளிங்குத் தரையில் தவழ முடியாமல் வழுக்கி விழுந்தாள். பம்பாய் மலபார் ஹில்லின் புல் தரையில் தத்தி நடந்தாள். ஜுஹூ பீச்சின் சன்னமான மணலைக் குடைந்து முகத்தில் அப்பிக் கொண்டு தானும் தவித்து என்னையும் தவிக்க வைத்தாள். பீஜப்பூரின் பிரசித்தி பெற்ற 'கோல் கும்பாஜின்' படிகளில் ஏற முடியாமல் ஏறினாள். மதுரை மீனாட்சி கோவிலைச் சுற்ற முடியாமல் சுற்றினாள்.

தன் எட்டாவது மாதத்தில் நிற்க ஆரம்பித்து, ஒன்பதாவது மாதத்தில் நடந்து, பத்தாவது மாதத்தில் ஓடவே ஆரம்பித்து விட்டாள்.

ஏனோ பிறந்து பத்து நாட்களுக்குள் அழுது தாய்ப் பாலைச் சாப்பிடாமல் விட்டவள், வளர்ந்தது க்ளாக்ஸோவிலும், ஃபாரெக்ஸிலும்தான். (இந்தப் போட்டியில் ஃபாரெக்ஸ் தயாரிப்பாளர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் இப்படி எழுதவில்லை. இது நூற்றுக்கு நூறு உண்மை.)

"குழந்தையைப் பார்த்ததும் சொல்லலாம் க்ளாக்ஸோ பேபி" என்று சொல்கிற மாதிரி இல்லாவிட்டாலும் சற்று பூசின உடம்புதான். ஆனால் அவள் குறும்பும், பொல்லாத்தனமுமோ வார்த்தையில் அடங்காது.

எனக்கும்தான் என்ன வேலை? "பட்டணத் தட்டிவிட்டால் ரெண்டு தட்டிலே இட்டிலியும்" என்ற பழைய பாடல் என் வரையில் நிஜமாயிற்று. தங்கியதெல்லாம் ஹோட்டல் அறையில்தானே! வேலை இல்லை என்றாலும்

முதல் பரிசு ரூ. 500 பெற்ற கட்டுரை — வைஜயந்தி கிருஷ்ணன்

எத்தனையோ சமயங்கள் அவள் குறும்பைச் சமாளிக்க முடியாமல் திணறி யிருக்கிறேன்.

''எனர்ஜி பாம்'' – இது அவளின் செல்லப் பெயர்.

இமைக்கும் நேரம் ஏமாந்தாலும் எதை யும் வெளியில் தூக்கி எறிந்து விடுவாள். ஒரு சமயம் மேஜை மேல் இருந்த என் கணவரின் கடிகாரத்தை ஹோட்டல் அறை யின் ஆறுவது மாடியிலிருந்து தூக்கி எறிந்திருக்கிறாள். செய்வதையும் செய்து விட்டு, என்னிடம் வந்து ''அம்மா டிக், டிக் வெளியிலே'' என்று மழலை மொழியில் மிழற்ற நாங்கள் புரியாமல் விழிக்க, புரிந்த பின், பதறிக் கொண்டு ஓட, எங்கள் அதிர்ஷ்டம், அங்கே வைக்கோல் பிரிகள் அடுக்கியிருக்க, அதன் மேல் 'ஜம்'மென்று உட்கார்ந்து கொண்டு, அந்த டிஜிடல் வாட்ச் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தது!

இந்தக் கடிகாரத்துக்கு இது ஒரு நல்ல விளம்பரம் என்று சொல்லிச் சிரித்தோம்.

என் மகள் அப்பொழுதிலிருந்தே ''காரப் பிரியை''. எட்டு மாதத்தில் 'ஃபாரெக்ஸில் ஆந்திராவின் காரசாரமான ரசத்தைக் கலந்து தந்தால் சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிடுவாள்.

ஃபாரெக்ஸ் என்றதும் நினைவுக்கு வருகிறது. என் மகளின் அதிர்ஷ்டத்தில் எங்களுக்கு நிறைய நம்பிக்கை. அவள் பிறந்த சமயத்தில் ''க்ளாக்ஸோ நிறுவனத்தினர், ''ஃபாரெக் ஸிற்கு இரண்டு ரூபாய் தள்ளுபடி'' என்று ஒரு கூப்பனை அறிமுகப்படுத்தினர். குறிப்பிட்ட சில க்ளாக்ஸோ டின்னில் மட்டுமே அந்தக் கூப்பன்கள் இருக்கும். கடைக்குச் செல்லு கையில் என் கணவர், மகளையும் கட்டாயம் எடுத்துச் செல்லுவார். அவள் கையால் தொட்ட டின்னையே வாங்குவார். சொல்லி வைத்தாற்போல் அந்த டின்னில் ஒரு கூப்பன் ஒளிந்து கொண்டிருக்கும்! அப்படி நிறைய கூப்பன் சேர்த்து, தேவை போக மற்றவர் களுக்கும் கொடுத்ததுண்டு.

ஒரு தாய், தன் குழந்தையைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தால் அது முடியாத பிரசங்கமாக இருக்கும் என்பர். அது உண்மை தான். எனக்கும் என் மகளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்ததும், அதை எப்படி, எப்பொழுது முடிப்பது என்று தெரியவில்லை.

இப்பொழுது என் மகளுக்கு நான்கு வய தாகிறது. சென்னையில் அழகான வீடு– அமைதியான வாழ்க்கை என்றிருக்கிறோம்.

இருந்தாலும் என் மகளின் முதலாண்டு அனுபவங்கள் – அவை இன்றைக்கு நினைத் தாலும் ஓர் இனிய சொர்க்கம்தான்!

என் மகளின் பெயர்: ஸ்ரீதேவி. வயது 4. பிறந்த தேதி: 23–9–77.



அருள்வாக்கு

ஒன்றே லட்சியம்!

உறியடி என்று ஒரு உத்ஸவம் உண்டு. அப்போது சறுக்கு மரத்தில் பத்து அல்லது இருபது பேர்கள் ஏறுகிறார்கள். எல்லோரும் ஏறிவிட முடியாது. ஒருவன் ஏறுகிறான். சறுக்கி விழுகிறான். பலர் ஏறி விழுகிறார்கள். கடைசியில் ஒருவனாவது ஏறி விடுகிறானல்லவா? அந்த ஒருவன் ஏறுவதற்குத்தான் இத்தனை பிரயாசை; பலபேர்கள் சறுக்கி விழவேண்டியிருக்கிறது. அது போல் நம்மில் ஒருவன் பூரணத்வம் அடைந்து விட்டால் போதும். இத்தனை கோயில், இத்தனை மதம் பிரசாரம் எல்லாவற்றுக்கும் அது ஒன்றே லட்சியம். மனித ஜன்மா எடுத்ததற்குப் பிரயோசனமே அதுதான்.

அப்படித்தான் லட்சக் கணக்கில் நாம் இவ்வளவு பேரும் வீணாகப் போய்விட்டா லும் குற்றம் இல்லை. நம்மில் யாராவது ஒருவன் பூரணத்வம் அடைந்தால் போதும். பூரணத்வம் இல்லாமல் சிலர் ஏமாற்றக்கூடும். நாம்கூட ஏமாந்து போகலாம். அப்படிப் பத்துப் பேர்கள் உலகை ஏமாற்றினாலும் அவர்களில் ஒருவர் நல்லவராக இருப்பார். கோடி கோடி சரீரம் உண்டாவதற்குப் பயன் அது ஒன்றே போதும். அந்த ஒன்று நமக் கெல்லாம் சக்தி. அந்த ஒரு சக்தியைச் சிருஷ்டி பண்ணுவதற்காகத்தான் இத்தனை சுகம், இத்தனை துக்கம், இத்தனை வியாதிகள். ''ஜந்மனாமந்தே ஞானவாந் மாம் ப்ரபத் யதே''-அநேக ஜன்மங்களின் முடிவில் ஞானி என்னை அடைகிறான் என்று இதைத்தான் கீதையில் பகவான் சொல்லுகிறார்.

–ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்



The fragrance of choice coconuts in every drop.
Yendelux
coconut oil
என்டீலக்ஸ்
தேங்காய் எண்ணை

விஜயநகர தேவதாசிகள் ஒவ்வொருவரும் தனித்தனி படை வைத்திருந்தார்கள். அவர்கள் பலம் பொருந்தியவர்களாகவும், செல்வாக்கு உள்ளவர்களாகவும் இருந்தார்கள்.''

— Paes (பயிஸ்)

23

வந்தவள் வங்கவரம் வத்சலா என்ற பெண். ரத்னவல்லியின் சகிகளில் ஒருத்தி. பருத்த மார்புகளுடன் வந்தபோது தஞ்சாவூர் ரகத்துச் சிலைச் சித்திரம் போல் இருந்தாள். மூக்கு முகவாய் எல்லாம் அதே அசல் தான்.

''இந்தப் பெண்ணை விட்டுடாதே ரத்து!'' என்று சொல்லிச் சற்றுத் தள்ளி அவளை அழைத்துப் போனாள்.

''இவதான் ஸ்வர்ணமுகி!'' என்றாள்.

ரத்னவல்லியின் ஆச்சரியம் கண்ணைப் பிதுக்கி வெளிவந்தது. ''இவதானா?'' என்று முகவாயில் அத்தனை விரல்களையும் வைத்தாள்.

பிறகு திரும்பிப் பார்த்து ''அந்தப் பெண்ணை உள்ளே அழைச்சுக்கிட்டுப் போ!'' என்று கட்டளையிட்டுவிட்டு, வத்சலாவை நோக்கி, ''இவன்னு எப்படித் தெரியும்?'' என்றாள்.

''நான் ரங்கப்பா வீட்டு நவராத்திரியிலே பார்த்திருக்கேன். அவ கண்ணைப் பார்த்தியா? இவளை புஷ்பம் மாதிரி நானே மோகிச்சிருக்கேன்.''

ரத்னவல்லிக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. தன் பருமனான விரல்களால் வத்சலாவின் கையைப் பொத்திக் கொண்டு, ''வா, வா, வா!'' என்று உப்பரிகைப் பக்கம் அழைத்துப் போனாள்.

மலைப் பகுதியில் ஒரு மேட்டின் நெற்றியில் கட்டப்பட்டிருந்தது அந்த மாளிகை.

குங்கிலியக் காடெல்லாம் கீழே பசுங்கடல் தூரத்துக்குத் தூரம் தெரிந்தது.

மேலே நீல வெளிப் பரப்பில் வெண்மை துலங்கும் மேகங்கள் நகர்ந்தன.

இருவரும் உப்பரிகையின் பட்டு மெத்தை ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

''வச்சு! எனக்கு என்ன சொல்லணும்னு தெரியலே! ஒரே மகிழ்ச்சி போ! ஒரே மகிழ்ச்சி! ஒரே கல்லுலே ரெண்டு மாங்காய் அடிச்சுட்டேன். ஒரு திட்டம் சொல்றேன் பாரு! உன்னை அழைச்சதே அதுக்குத்தான்.''

''சொல்லு!'' என்றாள் வங்கவரம் வத்சலா.

ஸ்வர்ணமுகி

ஸ்ரீவேணுகோபாலன்



''ரகசியம் கேட்டுக்கோ! யார்கிட்டேயும் சொல்லாதே! இவதான் பழைய இம்மாடி ஸ்ரீரங்கராஜா இருந்தாரே!....''

''ஆமா!''

''அவரோட பொண்ணு!''

''அப்படியா?'' வத்சலா கண்கள் ஆச்சரியத்தைப் பீச்சி அடித்தன.

''ஆமாடி! அதை வெளியிலே தெரியாம ரங்கப்பா தம் பொண்ணுன்னு சொல்லி வளர்த்துக்கிட்டு வந்திருக்காரு.''

''ஓஹ்ஹோ!''

''சண்டையிலே செத்துப் போயிட்டார் பாரு! சாகறதுக்கு முன்னடி தோதாவைக் கூப்பிட்டு விஷயத்தை அவன் கிட்டே சொல்லியிருக்காரு!''

''அப்படியா?''

''ஆமாம்! அவன் போய் அவளைத் தேடிப் பிடிச்சிட்டான்.''

''ம்...''

''அப்புறம் கோட்டை விட்டுட்டான்.''

''அடேடே!''

''அது எனக்கு அதிர்ஷ்டமாப் போச்சு. நான் காட்டுக்குள்ளாற என் படையாட்களை அனுப்பி இந்தப் பெண்ணைக் கண்டு பிடிக்கக் கொண்டாந்துட்டேன்.''

''தோதா என்ன ஆனான்?''

''அவனு? கோட்டை விட்டுட்டு இப்போ என் பெண்ணோட சல்லாபிச்சுக்கிட்டு அங்கே உட்கார்ந்திருக்கான். பெண்ணை அவன் கிட்டே விட்டிருக்கேன்.''

''நீ பலே கைக்காரி! இப்போ என்ன திட்டம் வச்சிருக்கே சொல்லு.''

''சொல்றேன். நாட்டிலே இம்ம ராஜாவும் வேங்கடராஜாவும் சிம்மாதனத்துக்காகச் சண்டை போடறாங்க!''

''ஆமா!''

''தளவாய்ங்க இவர் பக்கம் நாலு பேர் அவர் பக்கம் நாலு பேர்னு சேர்ந்து குட்டையைக் குழப்பறாங்க.''

''சரி.''

''இதுக்கிடையே நரசய்யா தளவாய்க்கு ராஜாவாகணும்னு ஆசை வந்திருக்கு!''

''அந்தக் கிழத்துக்கா?''

''ஆமா! அவர் கிட்டப் போய் இந்தத் தோதா, கவர்ணமுகிசமாச்சாரத்தைச் சொல்லிட்டான். 'இவ ஒரு ராஜ குமாரி, பழைய இம்மாடி ஸ்ரீரங்கராஜா மகள்னு!'

''ஓகோ!''

''தோதாவை அழைச்சுக்கிட்டுப் போய்ச் சொல்ல வச்சதும் நான்தான்னு வச்சுக்க.''

''சரிதான்.''

''அதை வச்சுக்கிட்டே அந்தக் கிழம் ஏதாவது நல்ல திட்டம் சொல்லும்னு பார்த்தால் என்ன சொல்லிச்சு தெரியுமோ?''

''சொல்லு!''

''தானே அந்தப் பொண்ணைக் கட்டிக்குமாம். சிங்காதனத்துக்குப் போட்டி போடுமாம்!''

''இந்தக் கிழமா?''

''ஆமாம். ஆசை யாரை விட்டுது?''

''இம்ம ராஜாவுக்கு அது துரோகம் ஆச்சே!''

''அதை யெல்லாம் யார் பாக்கறாங்க? பட்டத்துக்கு ஏதாவது வழி இருக்கா? உடனே நுழைஞ்சுட வேண்டியதுதான். நாடு சீரழிஞ்சு போச்சு.''

''நீயும் அவன் கட்சியிலே இருக்கிறவதான்!''

வத்சலா இதைச்சொல்லி ஒரு நொடி நொடித்தாள்.



''ஆமாடி! ஆமாடி! நீ சொல்லிக் காட்டு வேன்னு தெரியும். திம்மராஜா பட்டத்துக்கு வந்தா நரசய்யா கொடி பறக்கும். அதுனாலே என் கொடியும் பறக்கும்னு நினைச்சேண்டி! இன்னிக்கும் சொல்றேன். என்னிக்கு நான் அந்தப் பகபுலேட்டி பங்காரம்மா முன்னாடி தோரணைக்கால் போட்டுக்கிட்டு ராஜ சபையிலே வெத்திலே குதப்பறேனோ அன்னிக்குத் தாண்டி என் நெஞ்சு வேகும். அதுக்காகத் தாண்டி இந்தத் திம்மராஜா பக்கத்திலே நான் இருக்கேன்.''

வங்கவரம் வத்சலா யார் பக்கமும் சேராதவள். ஒதுங்கியே இருப்பவள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும்தலையை 'ஹக்கேன்' என்று ஆட்டினாள்.

''நல்ல ஆசை உனக்கு! பகபுலேட்டியைப் பழிதீர்க்கணும்கிறதுக்காக அநியாயக் கட்சியிலே போய்ச் சேருவையா?''

''திம்மராஜா கட்சியைத்தானேசொல்றே? போய்ட்டுப் போகட்டும்டி. நியாயத்தை இந்தக் காலத்திலே யார் பார்க்கிறா?''

''சரி, விஷயத்துக்கு வா! நரசய்யா இந்தப் பொண்ணைக் கட்டிக்கிறேன்னு-சொல்லிச்சு!''

''சொல்லிடுத்தா! எனக்கு ஒரு யோசனை''

''சொல்லு.''

''இந்த சுவர்ணமுகியை யாருக்காவது ஒரு நல்ல ஆளுக்குக் கட்டிக் கொடுத்து, அவனை ராஜா ஆக்கினா என்னன்னு தோணித்து.''

''நினைச்சா ராஜாவாகிறதுங்கிறது அவ்வளவு சுலபமா?''

''சுலபமில்லே! ஆனா சுவர்ணமுகி யாருன்னு தெரிஞ்சா, தளவாய், ஊளவாய், ராயசம், கியசம் எல்லாரும் அவ பக்கம் திரும்பிடுவாங்கடி. இம்மாடி ஸ்ரீரங்கராஜா வம்சம்னா அவங்கதானே இந்த ராஜ்யத்தை ஆள உரிமை இருக்கு. மத்தவங்களெல்லாம் இடையிலே வந்தவங்கதானே?''

''சரி, சொல்லு! சுவர்ணமுகியைக் கட்டிக்கப் போறவன் ராஜாவே ஆயிடப்-போறான்னு வை. அதுக்கு எந்த ஆளைத் தேர்ந்தெடுக்கப் போறே?''

''அதுக்குத்தாண்டி உன் உதவி வேணும்!''

''நான் என்ன செய்யணும் சொல்லு.''

ரத்னாவளி உடனே தொடரவில்லை. வங்கவரம் வத்சலாவை ஒரு வசியப் பார்வை பார்த்தாள். முகத்தில் குறும்பு நகை கொட்டித் தகதகவென்று மினுக்கியது.

சொர்க்கத்திற்குப் போக வேண்டுமென்றாலும், நரகத்திற்குப் போக வேண்டுமென்றாலும் 'நார்வே' நாட்டிற்குச் சென்றால் போதும். நரகம் (HELL) சொர்க்கம் (PARADISE) என்ற பெயரில் இரு நகரங்கள் நார்வேயில் இருக்கின்றன!

- அ. குமார்

''கேட்டுக்க, வச்சு! வேங்கடராஜா தங்கை சந்திரம்மா இருக்காளே!''

படக்கென்று கண்களைவிரித்தாள் வத்சலா. படபடப்புடன் ''அவளுக்கென்ன?'' என்றாள்.

''சந்திரம்மாவும் நீயும் சிநேகம்னு எனக்கு நல்லாத் தெரியும்.''

''அதனாலே என்ன?''

''அந்தச் சந்திரம்மாவை வேங்கடராஜா மனைவி அவதூறு சொல்லி அரண்மனையை விட்டு விரட்டிட்டது எனக்குத் தெரியும்.''

''சரி, அதுக்கென்ன?''

''அவளுக்கு ஸ்ரீரங்கன் என்கிற பெயர்லே ஒரு மகன் இருக்கானா?''

''இருக்கான்.''

''அவனைத்தான் இந்த சுவர்ணமுகிக்கு மணம் முடிக்க வேண்டும் என்று பார்க்கிறேன்.''

'வாவ்' என்று ஒரு குரலோடு வத்சலா எழுந்திருந்தாள். 'உட்காரு, உட்காரு' என்று கையைப் பிடித்துக் கீழே அமர்த்தினாள் ரத்னாவளி.

வத்சலாவின் வியப்பு அமிழவில்லை. மெள்ள அமர்ந்தாள். ''நீ என்ன உளர்றே?'' என்று சூடாகக் கேட்டாள் ரத்னாவளியை நோக்கி.

''உளறவில்லை. சாத்தியமாக உண்டானதைத்தான் சொல்றேன். நான் சொல்றது நிச்சயம் நடக்கும். சுவர்ணமுகி யாருன்னு தெரிஞ்சா நாளைக்கு நாடே அவள் காலடியிலே கிடக்கும்!''

வத்சலாவுக்கு நெஞ்சு விம்மி வந்தது.

''நிஜமாவா சொல்றே?'' என்று உணர்ச்சி பொங்கக் கேட்டாள் அவள்.

''சந்தேகம் இல்லேடி. சுவர்ணமுகியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவன்தான் நாளைக்கு ராஜாவாகப் போறான். இது கட்டுப் போட்ட சத்தியம்.'' என்று தொனியை அழுத்திக் கூறினாள் ரத்னாவளி.

வத்சலா வெளிப்புறத்தைப் பார்த்தாள், அவள் பார்வை உணர்ச்சிப் பிரவாகத்துடன் ஓடியது.

''நீ சொல்றது நடக்குமான்னு எனக்குத் தெரியாது. ரத்து! நடந்தா நான் சந்தோஷப் படுவேன். சந்திரம்மா தன் மதனிகிட்டே ரொம்பக் கொடுமைப்பட்டுட்டா. இப்போ தனியா இருந்து ரொம்பக் கஷ்டப்படறா! தனக்கு ஒரு காலம் வரணும்னு ராவும் பகலும் ஏழுமலையானை வேண்டிக்கிட்டு இருக்கா. யார் கண்டா? உன் மூலமா அந்தக் காலம் வருதோ என்னவோ!''

''வரட்டும்டி வரட்டும்'' என்று சந்தோஷ மிகுதியில் பட்டுத் திண்டில் சாய்ந்தாள் ரத்னாவளி. ''என்னாலேயே எல்லாம் நடக்கட்டும். எல்லாருக்கும் அது சுபமா முடியும்! ஆண்டவனும் அதுக்கு வழி விடுவான். இப்போ எனக்கு ஒரு காரியம் செய்! அதுக்கு முன்னாடி உன்கிட்டே ஒண்ணு கேட்கணும். எனக்கு உதவி செய்ய உனக்கு இஷ்டம் தானே?''

''இந்த விஷயத்திலே மறுக்க எனக்கு இஷ்டமில்லே. சந்திரம்மா எனக்கு உயிர்த் தோழி''.

''அதுமட்டுமில்லே பாரு! திம்மராஜாவும் வேங்கடராஜாவும் தலைக்குத் தலை அடிச்

சிக்கிறாங்க. ரெண்டு பேரும் என்னென்னவோ வழியிலே சிங்காதனத்துக்கு உரிமைக்காரங்களா வந்தவங்க. நேர் வழி உரிமை இல்லாதவரைக்கும் இப்படி அரை குறை உரிமைக்காரங்க வந்து சண்டை போட்டுக்கிட்டேதான் இருப்பாங்க! ஒத்துக்கிறியா?''

''ஒத்துக்கிறேன்.''

''ஆனால் சுவர்ணமுகி நேர்வழி உரிமைக்காரி. அவள் யாருன்னு தெரிஞ்சுட்டதுன்னு ஜனங்களுக்கு அவள்தான் ராணி. பட்டத்துக்கு அவளது பாத்தியதையைத்தான் ஜனங்க ஒத்துக்கிடுவாங்க. அவள் மட்டும் பட்டத்துக்கு வந்துட்டான்னு நாட்டுக்குள்ளே மற்ற உரிமைச் சண்டையெல்லாம் கப்சிப்னு அடங்கிடும். ஒத்துக்கிறியா?''

''ஒத்துக்கிறேன்.''

''அதுக்காகவேகூட நீ என்னோட ஒத்துழைக்கணும். பதினைந்து வருஷமா நாடு அல்லல் பட்டதிலே நாம்ப நம்ப சம்பாத்தியத்திலே பாதிக்கு மேலே இழந்துட்டோம். என்னிக்கு அமைதி ஏற்பட்டு விவகாரங்களிலே நாம்ப நிம்மதியா ஈடுபடப் போறோம் சொல்லு!''

வத்சலாவுக்கு ரத்னவல்லி எடுத்துக் கொடுத்த விவரங்கள் ப்ளிச்சென்று தைத்துக் கொண்டன. அதை அவள் முகமே காட்டிற்று.

ரத்னவல்லிக்கு அதனால் சந்தோஷம் பொங்கியது. அவளது பருமனான சரீரம் முழுதும் அது வழிந்தோடியது.

''அப்போ என் விஷயத்தைக் கவனிக்கிறேன்னு சொல்லு!'' என்றாள் ரத்னவல்லி.

''கவனிக்கிறேன்.''

''உடனே காரியத்தில் இறங்கு!''

''என்ன செய்யணும் சொல்லு!''

''நீ போய் எப்படி சந்திரம்மா கிட்டே பேசுவியோ, எப்படி அவளை ஒத்துக்க வைப்பியோ தெரியாது. எந்த வகையிலும் காரியத்தை முடிச்சுக்கிட்டு இங்கே அவள் பின்னே ஸ்ரீரங்கனைக் கையோடு அழைத்து வந்துவிடணும் புரிகிறதா?'' என்றாள் ரத்னவல்லி.

வத்சலாவுக்கு முறுவல்களாக வந்தன. உவகைகள் வாரித் தெளித்து முகத்தில் நட்சத்திர மினுக்குகள் வந்தன.

அவளது மௌன அங்கீகாரத்தை அறிந்து கொண்டு,

''கடைசியில் ஒரு விஷயம்!'' என்று சொல்லி எழுந்தாள் ரத்னவல்லி.

வத்சலா அவளை ஆழ்ந்து நோக்கினாள்.

''இந்த விஷயம் நம்ப ரெண்டு பேருக்கு மட்டும் ரகசியமா இருக்கட்டும். யாரிடமும் சொல்லக் கூடாது. ஏழுமலையான் மீது ஆணை'' என்றாள் அவள்.

''ஆணை'' என்றாள் வத்சலா.

''அப்போ, நாளைக்குப் புறப்படு!'' என்றாள் ரத்னவல்லி.

''ஆகட்டும்'' என்றாள் வத்சலா.

(தொடரும்)

செய்திகளில் சிலர்...



"என் ராணியை வெட்டினியானா உன் ராஜாவை ஷூட் பண்ணிடுவேன்" என்று சொல்பவன், "மௌன கீதங்கள்" புகழ் மாஸ்டர் சுரேஷ். எதிரே தமிழக ஜூனியர் செஸ் சாம்பியன் டி. எஸ். ரவி. செல்வன் ரவி, 12 வயதுக்குட்பட்டவர்கள் போட்டி, 16 வயதுக்குட்பட்டவர்கள் போட்டி ஆகிய இரண்டிலும் வென்று தமிழக இரட்டை சாம்பியன் ஆக விளங்குகிறான். இந்த வெற்றியைப் பெற ஒரே நாளில் எட்டுப் பேர்களுடன் ஆடி அனைவரையும் வென்றான்!



○ ரந்தனு சக்கார்

○ ரவி-சுரேஷ்

இதுவரை முப்பத்தேழு படங்களில் நடித்து விட்ட சுரேஷ் முதன் முதலில் திரையில் தோன்றியது ஒரு சிறுமியாகத்தான்!


—சலன் படம்: லாவண்யா

'பத்து நாள் ஷூட்டிங்கில் கலந்துகொள்ளும்போது ஏற்படுகின்ற மனத் திருப்தி ஒரு நாள் மாலை நாடகம் நடிப்பதில் கிடைத்து விடுகிறது' என்கிறார் திரு பூர்ணம் விஸ்வநாதன். இவருக்கு எழுத்தாளர் சுஜாதா வரிசையாக நாடகங்களெழுதித் தந்துகொண்டிருக்கிறார். கடைசியாகத் தற்போது கொடுத்துள்ளது 'டாக்டர் நரேந்திரனின் விநோத வழக்கு'. நல்லது செய்யப் போய், விநோத ஒரு வழக்கில் குற்றவாளியாக்கப்படும் ஓர் அப்பாவியான ஆனால் புத்திசாலியான டாக்டரைப் பற்றிய கதை. டாக்டரின் பாத்திரம் ஏற்பவர் பூர்ணம். அவர் சொன்னார்: "காட்சிகளை அமைத்துள்ள பாணியே புதுமையானது. மேடையின் நடுவிலே ஒரு கோர்ட். அதன் இரு புறங்களிலும் கோர்ட்டில் நடக்கும் கேஸ் சம்பந்தமான விஷயங்களை ஃப்ளாஷ் பேக் உத்தியில் சொல்ல இருக்கிறோம்.

"வஸந்த் முன்பே 'ஒரு கொலை' மூலம் அறிமுகமாயிருந்தாலும், கணேஷ், வசந்த் இருவரும் சேர்ந்து மேடைக்கு வருவது இதுவே முதல் தடவை. கணேஷாக 'பல் தேவு'ம், வஸந்தாக தியாகராஜனும் நடிக்கிறார்கள். அரங்கேற்றம் விரைவில்!"

- எஸ். சந்திரமௌலி

✕ கே. ரேவினம்.



✕ ரா. பா.



✕ பூர்ணம் விசுவநாதன்



● சென்னையில் தபால் —தந்தித் துறையினர் நடத்திய இருபதாவது அகில இந்திய நீர் நீச்சல் (அக்வேடிக்) போட்டிகளில், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த குமாரி இலா பால் மூன்று புதிய ரெகார்டுகளை ஏற்படுத்தினர்.

உயரே இருந்து குதிக்கும் (டைவிங்) போட்டியில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த குமாரி சந்தனு சர்க்கார் பல வித்தைகளைச் செய்து காட்டிப் பிரமிக்க வைத்தார்.

படத்தில் பாருங்கள்: பஞ்சுப் பொதிகளான மேகப் பின்னணியில் நிழலாகத் தெரியும் குமாரி சந்தனு சர்க்கார், அந்தரத்தில் யோகாசனம் பயிலுவது போல் இல்லை?

—சாருகேசி

● ● ●

● தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு திரவியம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவராக இருந்தபோதே சுதந்திர தாகம் ஏற்படச்சிறைவாசம் அனுபவித்தார். கைதியாக இருக்கும்போதே பி.ஏ. ஆனர்ஸ் படித்துத் தேர்ச்சி பெற்றார். ''தினமணி'' பத்திரிகையில் உதவி ஆசிரியராய் வேலை பார்த்த அனுபவம், பல நூல்களை எழுதத் தூண்டியது. அவற்றில் ''தேசியம் வளர்த்த தமிழ்'' முக்கியமானது. ஜெயகாந்தன் கதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். காந்திஜி, இருபளானி போன்ற தலைவர்களின் எழுத்துக்களைத் தமிழாக்கம் செய்துள்ளார்

கதர் வேஷ்டும், பல வண்ண கதர் சட்டைகளையும் அணிகிறார்.

முன்பு அடிக்கடி சிகரெட் பிடித்த இவர் இப்போது ரொம்பக் குறைத்து விட்டார். கோபம் என்பதே இவர் அகராதியில் கிடையாது. கலகலப்பாகத் தூய தமிழில் இனிமையாகப் பேசுகிறார். காலையிலும் மாலையிலும் சர்க்கரை கலக்காத காப்பியில் ஒரு மாத்திரை சேர்த்துக் கொள்கிறார். விருந்துகளை ஒதுக்கும் இவர் உணவை ஒரு குட்டி டிபன் பாக்ஸில் போட்டு ஆபீசுக்கு எடுத்து வருகிறார். பிடித்தவை: எலுமிச்சைசாதம்; வெண்ணெய் பூசிய ரொட்டி.

பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையில் ஈடுபாடு உண்டு. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர். மனைவி லீலா கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர். இரண்டு பெண்கள். மூத்தவள் திருமணத்துக்கு டாக்டர் மு. வரதராசனும் இளையவள் திருமணத்துக்கு சா.கணேசனும் தலைமை வகித்து நடத்தினர்.

தலைமைச் செயலகத்தில் திரவியத்துடன் பழகியவர்கள் கூறக் கேட்டது: —''சிக்கி''

● ● ●

பாரதி விழா

பாரதியார் சங்கம் மகா கவி பாரதியார் விழாவை இந்த ஆண்டு அவருடைய நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடுகிறது. செப்டம்பர் 9, 10, 11 மூன்று நாட்களும் சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் உள்ள இராணி சீதை மன்றத்தில் வெகு சிறப்பாகக் கலை மணம் கமழும்படி கொண்டாடுகிறது.

இந்த நூற்றாண்டு விழாவில் மாண்பு மிகு மத்திய நிதி அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்களும், தமிழக அமைச்சர்கள், தமிழக மேலவைத் தலைவர் ம. பொ. சிவஞானம், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு குமரி அனந்தன், தமிழ்ப் பேராசிரியர்கள் முற்போக்கு எழுத்தாளர்கள் முதலிய அரசியல், இலக்கிய அறிஞர்கள் கலந்துகொள்கிறார்கள்.

கருத்தரங்கம், பாரதி இசை அரங்கம், எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்கள் நடத்தும் பாஞ்சாலி சபதம், உமா தண்டபாணி குழுவினரின் பாரதி நாட்டிய நிகழ்ச்சி முதலியவைகளுடன், பத்துக்கும் மேற்பட்ட இளம் சங்கீத வித்வான்கள் பாரதி பாடல்களைப் பண்ணோடு பாடுகிறார்கள். டி.கே.சி., வ.ரா., கல்கி போன்று பாரதி புகழ் பரப்பிய அறிஞர்களும் பாரதி நூற்றாண்டு விழாவில் போற்றப்படுகிறார்கள்,

● ● ●

ராஜா சர் அண்ணாமலை செட்டியார் பரிசு இவ்வாண்டு திரு நா. பார்த்தசாரதியின் 'துளசி மாடம்' நாவலுக்கு அளிக்கப்பட்டுள்ளது. பரிசுத் தொகை ரூபாய் பத்தாயிரம். 'துளசி மாடம்' கல்கியில் தொடராய் வந்த கதை. திரு நா. பா. சொன்னார்:

''இச் செய்தி ஒரு இனிய, மகிழ்ச்சி கலந்த ஆச்சரியம். ஓராண்டு தடங்கலுக்குப் பின் 'கல்கி' மறுமலர்ச்சியுற்றபோது, கல்கி ஆசிரியர் என்னைக் கல்கியில் ஒரு சமூக நாவல் எழுதும்படி சொன்னார். அப்போது தான் எழுதியதுதான் 'துளசி மாடம்'. நாவல் எழுதத் தொடங்கு முன் பிரான்ஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளிலும், சுமார் ஆறு மாத காலம் சுற்றுப் பயணம் செய்ய நேர்ந்திருந்தது. அப்போது மேற்கு திசை நாடுகளின் கலாசாரம், பண்பாடு இவையெல்லாம் மேற்கத்திய நாடுகளை எவ்வளவு ஆழமாய்க் கவர்ந்துள்ளது என்று ஆங்காங்கே காண முடிந்தது. இந்தியாவினுடைய இந்து மதமும் கலாச்சாரமும், சொந்த நாட்டில் ஆபத்துக்கும், அவமானத்துக்கும் உள்ளாக நேர்ந்தாலும், இனி அதைப் பிற நாடுகளில் அதிக பக்தியுடனும், சிரத்தையுடனும் காப்பாற்றி விடுவார்கள் என்று நம்பிக்கை ஏற்பட்டது. அதனால்தான் நவ நாகரிகத்தின் உச்சியில் இருக்கும் பிரெஞ்சுப் பெண்மணி ஒருத்தி, தமிழ் நாட்டின் எங்கோ ஒரு மூலையில் உள்ள சங்கர மங்கலம் கிராமத்துக்கு வந்து, ஓர் ஏழை வைதிகரின் மாட்டுப் பெண்ணாகி, அந்த வீட்டுத் துளசி மாடத்தில் தொடர்ந்து விளக்கேற்றும் பொறுப்பேற்று, இங்கேயே தங்கிவிடுகிறாள், 'துளசி மாடம்' கதையில்.

''என்னைப் பொறுத்தவரை இந்த நாவல் கிழக்கத்திய, மேற்கத்திய கலாசார சந்திப்பின் ஓர் அழுத்தமான வெளிப்பாடு. இதற்குக் கிடைத்த பரிசினைப் [illegible] மனப்பான்மைக்கும், சர்வதேசக் [illegible]ச்சாரப் பரிவர்த்தனைக்கும் கிடை[illegible] நினைத்துப் பெருமைப்படுகிறேன்.''

எஸ். சந்திரமௌலி



சமதர்மம் பாடிய முதற் கவிஞர்

மகா கவி பாரதி தெய்வம் ஒன்றே என்ற நம்பிக்கையிலே ஊன்றி நின்று, அந்த ஒரே தெய்வத்துக்குப் பல நாமங்களைச் சொல்லிக் கவிதைகள் இயற்றினர்; பல வேடங்கள் புனைந்தும் காட்சிப்படுத்தினர்.

''நாமம் பலகோடி யோ
　ருண்மைக் குளவென்று
நான்மறை கூறிடுமே — ஆங்கோர்
　நாமத்தை நீருண்மை
யென்றுகொள் வீரென்றந்
　நான்மறை கண்டிலதே.
''வேடம் பல்கோடி யோ
　ருண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே — ஆங்கோர்
　வேடத்தை — நீருண்மை
யென்றுகொள் வீரென்றவ்
　வேத மறியாதே!''

என்றெல்லாம் பாரதியார் பாடியது, சமயங்களை ஒழிக்க அல்ல; சமயங்களிடையே சமத்துவத்தையும் சமதர்மத்தையும் வளர்ப்பதற்காகத்தான்.

மொழி வேறுபாடுகூட, பாரதசமுதாயத்தின் சமத்துவத்துக்கும் சமதர்ம வாழ்வுக்கும் கேடு பயக்கக் கூடாது என்று அந்த அமரகவி கருதினன். அதனுற்ருன் பாரத தேசத்தைத் தாய் வடிவில் கற்பித்துப் பாடுமிடத்து,

''முப்பது கோடி முகமுடையாளுயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் — இவள்
செப்புமொழிபதி னெட்டுடையாள்; எனிற்
சிந்தனை யொன்று டையாள்''

என்று கூறினர். பன்மையிலே ஒருமை காணும் பண்பைக் கடைப்பிடிக்கும் சமுதாயத்திலேதான் சமத்துவம் இருக்கும்; சமதர்மம் தழைக்கும்.

சாதி வேறுபாடுகளற்ற — சமயப் பகைமையற்ற — வர்க்கக் கொடுமையற்ற ஒரு புதிய-உலகைப் படைக்கும் புரட்சி தோன்றப் போகிறதென்றும், அதற்கு இந்தியா தலைமை தாங்கப் போகிறதென்றும், இந்தியாவுக்குத் தமிழ்நாடு வழிகாட்டப் போகிற தென்றும் பாரதி கனவு கண்டான். அதனை அவனது வாக்காலேயே காண்போம்:

''பூமண்டலம் முழுதிலும் பெரிய விழிப் பொன்று வரப்போகிறது. அதற்கு ஆதாரமாக ஹிந்துஸ்தானம் கண்ணை விழித்து இருபதாண்டுகளாயின. ஹிந்துஸ்தானத்துக்குள் தமிழ்நாடு முதலாவது கண் விழித்தது. ஆனால் இன்னும் புத்தி சரியாகத் தெளியாமல் கண்ணை விழிப்பதும் கொட்டாவி விடுவதுமாக இருக்கிறது!''

தமிழகக் கவிஞர்களிலே சமத்துவம் பற்றியும் சமதர்மம் பற்றியும் பாடிய முதற் கவிஞர் பாரதிதான். இராமலிங்க சுவாமிகளை நான் மறந்துவிடவில்லை. அவரது சமத்துவமும் சமதருமமும் சமய அளவோடு நின்று விட்டன. வறுமையைக் கடிந்து அவர் பாடினரென்றால், மனிதாபிமானத்தினலும், ஜீவாபிமானத்தினலுந்தான். வறுமையை ஒழிக்குமாறு தெய்வத்திடம் முறையிட்டதோடு அவர் திருப்தியடைந்து விட்டார். ஆனல், சுப்பிரமணிய பாரதி, மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலேயும் சமத்துவமும் சமதருமமும் நிலவ வேண்டும் என்று பாடினர். ''பொதுவுடைமை'' என்னும் புதிய தமிழ்ச் சொல்லையே படைத்துக் கொடுத்தார் பாரதி. கம்யூனிசம் — சோஷலிசம் என்னும் பொருளாதாரச் சித்தாந்தங்களுக்கு.

பாரதியார் கடைந்தெடுத்த தேச பக்தர். 'பாருக்குள்ளே நல்ல நாடு, எங்கள் பாரத நாடு'' என்று பாடிய தேச பக்த வெறியர். ஆனல் அவருடைய சமுதாய நோக்கு, சர்வ தேசிய அடிப்படையிலமைந்தது. அதனல் சமத்துவமாயினும் சரி: சமதருமமாயினும் சரி; உலகனைத்திலும் அவை நடைமுறைக்கு வரவேண்டுமென்று பாரதி கருதினர். அவ்வகையில் அவர் குறுகிய தேசியத்தைக் கடந்து நின்ற சர்வ தேசிய வாதியாவார்.

''வையவாழ்வு தன்னிலெந்த
　வகையினும் நமக்குள்ளே
தாதரென்ற நிலைமை மாறி
　ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
　வாழ்வமிந்த நாட்டிலே''

தமிழர், பாரதியார் வாழ்வில் மட்டுமின்றி— வையகம் முழுவதிலும் உள்ள மக்கள் வாழ்விலே ''தாதர்'' எனப்படும் அடிமை வாழ்வு அடியோடு தொலைந்து மனிதர்யாரும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும். அந்த வாழ்வு இந்தப் பாரத நாட்டினருக்கும் அமைய வேண்டும் என்று பாடினர்.

ம.பொ.சி

(மயிலை இலக்கிய வட்டம் பாரதிய வித்யாபவனச் சொற்பொழிவிலிருந்து)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran


வருவான் ராஜகுமாரன்!
மர்மத் தொடர்
ராண்டார் கை
கல்கி
அக்டோபர் 4
ஆரம்பம்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

